மங்கையர் மலர்









MANGAYAR MALAR டிசம்பர் '81 ரூ.1-50

முடி வளர்க்கும் மூலிகை மருந்துகளை உங்களுக்காகவே உருவாக்கி இருக்கிறோம்!

CROWN



பண்டைய சித்தர்கள் ஆராய்ந்து பயன்படுத்திய முடிவளர்க்கும் மூலிகை மருந்துகளை இப்போழுது நீங்களும் பயன்படுத்தலாம்!

பழமையின் மெய்ஞான வலிவும்
புதுமையின் விஞ்ஞானப் பொலிவும்
ஒன்றாக இணைந்து உருவாகியுள்ள
நன்மை பயக்கும் ஆராய்ச்சி மருந்துகள்!

- முடி உதிர்தல் நின்று, கருகரு என்று மயிர் வளரும்!
- இளநரை மாறும்! புழுவெட்டில் மயிர் முளைக்கும்!
- பொடுகு, பேன், ஈறுகள் அடியோடு மறையும்!
- குளுமையும், புத்துணர்ச்சியும் உண்டாகும்!
- ஞாபக சக்தி வளரும்! நன்கு தூக்கம் வரும்!

கிரௌன் ஹெர்பல் ஹேர் க்ரீம் (HERBAL HAIR CREAM)
முற்றிலும் மூலிகை சத்துக்கள் அடங்கிய இனிய நறுமணமும் குளுமையும் இணைந்த முடி வளர்க்கும் மூலிகை ஹேர் க்ரீம்

கிரௌன் ஹெர்பல் ஹேர் டானிக் (HERBAL HAIR TONIC)
பரிசுத்தமான தேங்காய் எண்ணெயில் பரிமளமும் குளுமையும் பரவி நின்று கார்முகில்போல முடி வளர்க்கும் கூந்தல் தைலம்

கிரௌன் ஹெர்பல் ஹேர் கேர் (HERBAL HAIR CARE)
குன்றாத நுரைவளமும், நறுமணமும், ஒன்றாக விரவி நின்று நன்றாக முடி வளர்க்கும் முதன்மையான மூலிகை ஷாம்பு

கிரௌன் முடிவளர்க்கும் மூலிகை மருந்துகள்—
உங்கள் கேசத்தைப் பாதுகாக்கும்
இயற்கை நிவாரணிகள்!

தயாரிப்பாளர்கள்:
கிரௌன் ஹெர்பல் ப்ராடக்ட்ஸ்
(CROWN HERBAL PRODUCTS)
55, ஹாரிஸ் சாலை, புதுப்பேட்டை
சென்னை-600 002
(எழும்பூர் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்கு எதிரில்)

CROWN

Siddhar

சென்னை மற்றும் கோவை நகரங்களில் எல்லா மருந்து கடைகள் மற்றும் பேன்ஸி ஸ்டோர்களிலும் கிடைக்கும்



உங்களுடன் ஒரு வார்த்தை!

பஸ் ஸ்டாண்டின் ஒதுக்குப் புறத்தில் கடற்கரையில் அலைகளைப் பார்த்துக் கொண்டு பஸ்ஸில் இரண்டு பேர் உட்காரும் 'சீட்'டில் இப்படிப் பல இடங்களில்!


யார் காதலர்களா? ஆமாம். இதில் என்ன புதுமை, எல்லாம் நடக்கிறது தானே என்று அலட்சியமாகப் புன்னகை செய்ய வேண்டாம்! இந்தக் காதலர்களுக்கு வயது என்ன தெரியுமா? பதிமூன்றிலிருந்து பதினைந்து வயதிற்குள்.

நேற்று பெய்த மழையில் இன்றைக்குப் 'பொத பொத'வென்று காளான்கள் முளைத்து விடுகின்றன. அப்படித்தான் 'திடீரென்று' எங்கே பார்த்தாலும் இந்தச் 'சின்னஞ் சிறு காதலர்கள்' முளைத்து விட்டார்கள்! இவர்கள் பேசும் வார்த்தைகளுக்காவது இவர்களுக்கு அர்த்தம் தெரியுமா? இந்த வயதில் போன தலைமுறையினருக்கு 'வயதுக்கு வருவது' என்றாலே என்னவென்று தெரியாது. இப்போதோ பத்து வயதிலேயே காதல் விஷயம் பேசுகிறார்கள்!

இதற்கெல்லாம் காரணம் என்ன? சமீபத்தில் வந்த சில சினிமாக்கள்! 'திரையுலகில் புதிய வெள்ளைக் காவியங்கள்' என்று குதூகலித்து அத்தனை பத்திரிகைகளும் அமோகமாகப் பாராட்டிய திரைப் படங்கள் கூடவே தாளம் தட்ட, அற்புதமான கதைகள்!

இது சாதாரணமாக விடக்கூடிய விஷயமில்லை. பதின்மூன்று வயதில் ஒரு சிறுமி காதல் பார்வை பார்க்கக் கற்றுக் கொள்கிறாள் என்றால், அந்தச் சமுதாயம் எப்படி உருப்படும்? அந்தக் கலாசாரம் என்னவது? பதினான்கு வயதில் 'ஏழுப் போன' பெண்ணானால் இவள் பெறும் மகன் நாட்டை எப்படி உருவாக்குவான்?

பெரியோர்களே! பேனா பிடித்துக் கதை எழுதும் பெரியோர்களே! பிஞ்சுகளைக் காதலிக்க வைக்கும் திரைப் பட முதலாளிகளே! தயவு செய்து சிந்தியுங்கள்! உங்கள் கையிலே ஒரு சமுதாயம் இருக்கிறது! புண்ணியத் திருநாட்டை புண் திருநாடாக்கி விடாதீர்கள்! உங்களைக் கையெடுத்து கும்பிடுகிறோம்!



● மங்கையர் மலரை வாங்கினவுடன் ஒரே தெய்வீக வாசனை! 'என்ன'வென்று பிரித்தால் இரண்டாம் பக்கம் கருமாரி அம்மன். தெய்வீகம் கமழும் தொடக்கம். அற்புதம், போங்கள்!
லலிதா சின்ன சேலம்

● டாக்டர் சுந்தரி மேனன் கட்டுரை மிகவும் பயனுள்ளது. எங்களைப் போன்ற தாய்மார்கள் தாங்கள் பெற்ற பெண்ணிடம் எப்படிச் சொல்வது என்று கூச்சப்படும் விஷயத்தை, ஒரு தாயைப் போல அழகாகச் சொல்லியுள்ளார். மிக்க நன்றி.
அம்புஜம் விழுப்புரம்

● ஒரு பொருளில் இத்தனை கலப்படங்களா? உங்களுடைய அட்டவணையைப் பார்க்கவே பயமாக இருக்கிறது. இதையெல்லாம் சாப்பிடும் நம்முடைய வயிற்றை நினைக்கும்போது தான் பாவமாக இருக்கிறது. பயமாகவும் இருக்கிறது.
கல்யாணி சுந்தரம் பெசன்ட்நகர்

● நானும் எத்தனையோ பத்திரிகைகளில் ராசிபலன் படிக்கிறேன். மங்கையர் மலரில் மட்டும் எப்படி அவ்வளவு சரியாகப் போடுகிறீர்கள்? இதற்காகவே மாதா மாதம் மங்கையர் மலர் வாங்குகிறேன்.
எச். ஜேம்ஸ் கள்ளக்குறிச்சி

● நாங்கள் மனை ஒன்றை வாங்கிவிட்டு வீடு எப்படிக் கட்டுவது என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தோம். வழக்கறிஞர் ரமேஷ் எங்களுக்கு மிகவும் உதவி செய்திருக்கிறார். யாரோ ஒருவருக்குப் பதில் சொன்னதன் மூலம்.
மரகதம் நடராஜன் திண்டிவனம்

● விமலா ரமணன் [illegible] ார். பெற்ற தாயே இப்படியா என்று மலைத்தாலும், இப்படியும் இருப்பார்கள் என்று தான் தோன்றுகிறது. விலைவாசிகள் போகும் போக்கில் நம் நாட்டில் எதுதான் நடக்காது? இருந்தாலும் மனதுக்குக் கஷ்டமாக இருக்கிறது.
திருமதி ஜனார்த்தனம் பம்பாய்-20

● நான் உஷாவின் கதைகளை விரும்பிப் படிப்பவள். அவருடைய பிரச்னைகளைக் கூட எவ்வளவு அழகாகச் சொல்லியிருக்கிறார்! அது என்ன பேட்டியா? அல்லது அவரே எழுதியிருக்கிறாரா? எப்படி இருந்தாலும் நன்றாகத்தான் இருக்கிறது.
வடிவுக்கரசி வேலூர்

● குடும்பம் என்னும் வீட்டில் ஒரு புதிய ஜன்னலைத் திறந்திருக்கிறார் அனுராதா



ரமணன். எத்தனையோ மருமகள்களுக்கு நல்ல சாட்டையடி. இனிமேலாவது திருந்தட்டும் அவர்கள்.
கண்மணி குன்னூர்

● படத்தைப் பார்த்தாலே சிரிப்பு வருகிறது. கதையைப் படித்தால் இன்னும் சிரிப்பு வருகிறது. 'கண்களே, பெண்களைப் பார்க்காதே!' ஒரு நல்ல நகைச் சுவைக் கதை. சீரியஸான பத்திரிகைக்கு இப்படி ஒரு ரிலீஃப் தேவைதான்.
சரஸ்வதி குமார் கி.ஐ.டி. நகர்

மங்கையர் மலர்

டிசம்பர் 1981

சந்தா விவரம்

தனிப்பிரதி ரூ. 1-50
ஆண்டுச் சந்தா ரூ. 18/-
ஆறு மாத சந்தா ரூ. 9/-

Edited, Printed and Published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600 032 (Phone: 431543) Assistant Editor: Manjula Ramesh.

எத்தனை பேருக்குத் தெரியும்?





குடும்பக் கட்டுப்பாடா..?
ஐயைய்யோ, ஆளை விடுங்கள்,
போதும் போதும்
இந்தக் கண்றாவியெல்லாம்...!
என்று
காதைப் பொத்திக் கொள்ளாதீர்கள்!
உங்களுக்கு ஒரு தகவல் —

எனக்குத் தெரிந்த ஒரு லேடி டாக்டரிடம் பேசிக் கொண்டிருக்கும் போது, தற்செயலாக அவருடைய டைரியைப் பார்க்க நேர்ந்தது. ஒவ்வொரு நாளாகக் குறிப்பிட்டு இரண்டு, மூன்று பெண்களுடைய பெயரை எழுதியிருந்தார். என்ன விஷயம் என்று கேட்டேன்.

''இதுவா? நான் தினமும் அபார்ஷன் செய்யும் பெண்களின் பெயர்கள்''

என்றார்! ஆக, ஒரு டாக்டரிடம் ஒரு நாளைக்குக் குறைந்த பட்சம் ஒரு பெண் அபார்ஷனுக்கு வருகிறாள் என்றால் ஒரு மாதத்திற்கு எத்தனை? நகரம் பூராவும் எத்தனை? நாடு பூராவும் எத்தனை?

இப்படி எத்தனை பெண்களுடைய உடல் சீரழிந்து கொண்டிருக்கிறது? அபார்ஷன்



என்றால் சாதாரணமா? எவ்வளவு ரத்தத்தை இழக்கிறார்கள்? ஏற்கனவே நம்முடைய பெண்களுக்கு உடல் வலிவு குறைவு. மேல் நாட்டுப் பெண் ஒவ்வொருத்தியும் எப்படி இருக்கிறாள்? வயதுக்கு வந்த பிறகே நம் பெண்களுக்கு உடல்ரீதியாகப் பிரச்னைகள் பல வருகின்றன. திருமணம் ஆன பிறகு செய்துகொள்ளும் இது போன்ற அபார்ஷன்களினால் உடல்நலம் பெரிதும் குன்றுகிறது. இதன் பின் விளைவு?

சோர்வு, உடல் நலிவு — அதனால் அதை நேரடியாக வெளிப்படுத்த முடியாமல் சிடுசிடுப்பு, கோபம், சண்டை, சச்சரவு! அமைதியான குடும்ப வாழ்க்கை பறிபோகிறது.

இதையெல்லாம்—எதற்காகச் சொல்ல வருகிறேன் என்றால், குடும்பக் கட்டுப்பாட்டைப் பற்றி எல்லோருமே உணர ஆரம்பித்து விட்டார்கள். சிறு குடும்பத்தினால் தாய்க்கும், குழந்தைகளுக்கும், வீட்டுக்கும் மட்டுமல்லாமல் நம்முடைய நாட்டுக்கும் நல்லது தான். பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப உற்பத்தி இல்லை. இதனால் பொருளாதாரத் திணறல். இது ஒவ்வொரு மனிதனையுமேதான் பாதிக்கிறது. இவையெல்லாம் நீங்கள் அறிந்ததுதான். ஆனால் அறியாதது?

குடும்பக் கட்டுப்பாட்டைப் பற்றித்தான்!

'எங்களுக்குத் தெரியாதா? அதுதான் ரேடியோவிலும் டி.வி.யிலும் போடுகிறார்களே!'

என்று தொடிக்கலாம். ஆனால் சரியான முறைகளைப் பற்றியும், பாதுகாப்பான வழிகளைப் பற்றியும் எத்தனை பேருக்குத் தெரியும்? இதைப் போய் மற்றவர்களிடம் கேட்க நம் எல்லோருக்கும் கூச்சம். எனவே ஒரே வழி அபார்ஷன். இல்லையென்றால் வந்து விட்ட பிறகு பிள்ளையைப் பெற்றுக் கொள்கிறார்கள்.

இங்கே ஒன்று சொல்ல வேண்டும். வந்து விட்டதே என்று பிறக்கும் குழந்தைகள் மனோ தத்துவ ரீதியாகப் பலவித பாதிப்புக்களுடன்தான் பிறக்கின்றன. இதை மருத்துவ வல்லுநர்களே ஒப்புக்கொள்

கிறார்கள். 'எனக்குக் குழந்தை வேண்டும்' என்று ஆசைப்படும்போது, அந்தத் தாயின் ஆசையும் பாசமும் குழந்தையைச் சென்று அடைகிறது. வந்துவிட்டதே என்று வேண்டா வெறுப்பாகச் சுமக்கும் தாய்மாரின் வெறுப்பும் குழந்தையைப் பாதிக்கத்தான் செய்கிறதாம்.

எனவே, இது போன்ற இரண்டு வித விபரீத வழிகளையும் தடுக்கக் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளை ஒவ்வொரு பெண்ணும் தெரிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

இதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் நம்முடைய கருப் பையைப் பற்றியும், அதனுடைய வேலைகளையும் தெரிந்து கொள்ள வேண்டும்.


மூன்று அங்குல அகலமேயுள்ள கருப்பை தான் பிறகு முழு வளர்ச்சியடைந்த குழந்தையையே சுமக்கிறது. இதன் இரு பக்கமும் கரு முட்டைகளைத் தயாரிக்கும் பைகள் உள்ளன. ஒவ்வொரு மாதமும் இதில் ஒரு பை கரு முட்டையைத் தயாரிக்கிறது. பத்திலிருந்து பதினைந்து வயதிற்குள் இந்த முட்டைகள் தயாராக ஆரம்பிக்கின்றன.

இந்த முட்டை தயாராகி குழாய் வழியாகக் கருப் பையை அடைகிறது. இது தயாராகும் பையிலிருந்து புறப்பட்டு கருப்பையின் நடு இடத்தை அடையும் சில நாட்களுக்குள்ளேயே அதை வரவேற்க கருப்பை தன்னைத் தயார் செய்து கொள்கிறது. அதனுடைய இரண்டு பக்கச் சுவர்களிலும் பல வித திரவங்களும், ரத்தமும் சுரக்கின்றன.

இந்தக் குறிப்பிட்ட நாட்களுக்குள், ஒரு பெண் ஆணுடன் உறவு கொண்டால் ஆணின் விந்து பெண் முட்டையுடன் சேர்ந்து கருவாகிறது. கருப்பையின் மற்ற அம்சங்கள் அது வளர உதவி செய்கின்றன. அப்படி கரு உருவாகவில்லையென்றால் பெண் முட்டை தன் செயலை இழந்து, மற்ற உதிரங்களுடன் வெளியாகிறது. இதையே 'மாதவிடாய்' என்கிறோம். இது ஒவ்வொரு மாதமும் நடைபெறுகிறது.

இப்படி நடக்கும் இந்தச் சுழற்சிக்குள் நாட்களைக் கணக்கிட்டு, குறிப்பிட்ட சில நாட்களில் உறவு கொண்டால் குழந்தை உண்டாவதில்லை. அந்த நாட்கள் எவை என்று எப்படிக் கண்டுபிடிப்பது?

பொதுவாக, சாதாரண உடல் நலம் கொண்ட பெண்ணுக்கு 28 நாட்களுக்கு ஒரு முறை மாதவிடாய் ஏற்படுகிறது. இப்படிப் பட்ட பெண்களுக்கு, மாதவிடாய் ஏற்பட்ட நாளிலிருந்து பத்து நாட்களுக்குள் கரு செயல்படுவதில்லை. எனவே இந்நாட்களில் குழந்தை உண்டாவதில்லை. இதை பத்திரமான நாட்கள் (Safe period) என்பார்கள்.





இந்தப் பத்து நாட்களுக்குப் பிறகே கரு தோன்றிக் கருப்பையை அடைகிறது. எனவே இந்த நாட்களை baby days என்பார்கள். இந்நாட்களில் உறவு கொண்டால் குழந்தை உண்டாகிறது.

இந்தப் பத்து நாட்களுக்குப் பின் கரு தன்னுடைய ஆற்றலை இழந்து விடுவதால் மீதி இருக்கும் நாட்களில் உறவு கொள்வதால் பயமில்லை.

இதை 'இயற்கை முறைக் கருத் தடுப்பு' என்பார்கள். ஆனால் இது ஒவ்வொரு பெண்ணுக்குமே மாறுபடும். சீக்கிரம் மாதவிடாய் ஏற்படும் பெண்கள் அதற்கேற்ப நாட்களைக் குறைத்துக் கொண்டு ஜாக்கிரதையாக இருப்பது நல்லது.

இதைப் போல மற்றொரு முறையும் நாம் அறிந்ததே. அதுதான் பல்வேறு கம்பெனிகள் தயாரிக்கும் ரப்பர் உறைகள். இதை ஆண்கள் அணிகிறார்கள். இதுவும் கவனமாகப் பரிசோதிக்கப்பட வேண்டும். ஏனெனில் அதில் சிறு துளி ஓட்டை இருந்தாலும் அதன் மூலம் விந்து வெளிப்பட்டு பெண் முட்டையுடன் கலக்க வழியுண்டு. எனவே இதைப் பின்பற்றுபவர்கள் முன்னரும் பின்னரும் சோதனைகள் செய்ய வேண்டியதாக உள்ளது.

மற்றொன்று கர்ப்பத் தடை மாத்திரைகள். இவை எப்படிக் கரு உண்டாவதைத் தடுக்கின்றன? முட்டைகளைத் தயாரிக்கும் பைகளில் இரண்டு விதத் திரவங்கள் சுரக்கின்றன. ஒன்று முட்டை உண்டாவதற்கும் மற்றொன்று அதனுடைய வளர்ச்சிக்குமாக உதவுகின்றன. முட்டை உண்டாகும் திரவத்தின் ஆற்றலை இந்த மாத்திரைகள் சென்று கட்டுப்படுத்திவிடுகின்றன. இதனால் ஆற்றல் இழந்த முட்டைகளால் குழந்தை உயிர்ப்பதில்லை.

ஆனால் பல பெண்கள் இதைப் பற்றிப் பல அச்சங்களைத் தெரிவிக்கிறார்கள். புற்றுநோய் வரக்கூடும் என்றும், உடம்பு பெருத்துவிடும் என்றும், இருதயம் பலவீனமாகிவிடும் என்றும் சொல்லுவார்கள்.

மணத் தக்காளி இலை சிறந்த கிருமி நாசினி. காயம் பட்ட இடத்தில் மணத்தக்காளி இலையின் சாறைப் பிழிந்தால் விரைவில் ஆறும். டிங்சரை விட சிறந்த மருந்து இது.



இதற்கெல்லாம் காரணம் இப்படிப்பட்ட மாத்திரைகள் கிடைக்கின்றன என்று தெரிந்தவுடன் தாங்களாகவே கடைகளுக்குச் சென்று வாங்கிச் சாப்பிட்டு விடுகிறார்கள். இது தவறு. மருத்துவரின் பரிசோதனைக்குட்பட்டு அவர் சொற்படி நடப்பதுதான் முறை.

ஏனெனில் இருதய நோய் உள்ளவர்கள், உடல் மிகவும் நலிந்த நிலையில் ரத்த சோகை உள்ளவர்கள் போல இருப்பவர்கள், ரத்த அழுத்த நோய் இருப்பவர்கள், குழந்தைக்குப் பால் கொடுப்பவர்கள் ஆகியோர் இம்மாத்திரைகளை உபயோகிக்கக் கூடாது. ஏனெனில் இவை ரத்தத்துடன் கலந்து செயல்படுவதால் ஏற்கனவே பலவீனம் கொண்ட உறுப்புக்களைப் பாதிக்கின்றன.

இப்படிப்பட்ட வியாதிகள் இல்லாதவர்கள் இதனைப் பயன்படுத்தலாம். இது 100 சதவிகித வெற்றிகரமான முறையாகும்.

மற்றொரு முறை: கர்ப்பப் பை அருகே வைத்துக்கொள்ளும் மாத்திரைகளும் கிடைக்கின்றன. இவை எப்படிச் செயல்படுகின்றன? இவற்றிலிருந்து வெளியாகும் வாயுக்கள் ஆண்களிடமிருந்து வரும் விந்துவின் உயிராற்றலைக் கொன்றுவிடுகிறது. எனவே அது பெண் முட்டையுடன் கலப்பதில்லை. இதுவும் ஒரு வெற்றிகரமான முறையே. இதை உறவு கொள்வதற்கு எட்டு நிமிடங்களுக்குள் வைத்துக் கொண்டால் போதும்.

மற்றொரு பிரபலமான முறை லூப் வைத்துக் கொள்வது. அதனுடைய நவீன வடிவமாக 'காப்பர்டி' என்ற ஒன்று இப்போது வந்துள்ளது. லூப்பைப் பற்றியும் பல பயங்கள் பெண்களுக்கு உண்டு. அதிகமாக ரத்தப் போக்கு ஏற்படுதல் இதில் முக்கியமான ஒன்று. எனவே இதனுடைய குறைபாட்டை நீக்கி பல வழிகளிலும் சிறந்த 'காப்பர் டி' என்ற முறையை இப்போது பின்பற்றுகிறார்கள்.

செம்பு உடம்புக்கு மிகவும் நல்லது. எந்த விதத் தீங்கையும் செய்யாது. இந்தச் செப்புக் கம்பி சுற்றிய 'டி' வடிவிலான ஒரு சாதனத்தைக் கருப்பைப் பையில் பொருத்துகிறார்கள். லூப், காப்பர் டி இரண்டும் கருப்பபையில் வைப்பது மிகவும் எளிது. இவை எப்படிக் குழந்தை உருவாவதைத் தடுக்கும்?

ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒரு சிறு அசைவைச் செய்து கொண்டுதான் இருப்பான். மனிதனின் ஒவ்வொரு உறுப்பும் அசைந்து கொண்டேதான் இருக்கும். அவ்வுறுப்புக்களில் ஒன்றான கருப்பையும் அதன் குழாய்களும் கூட அசைந்து கொண்டேதான் இருக்கும். ஒரே ரிதமாக அசையும் போது, முட்டை உண்டாகிப் பயணத்தைத் தொடங்கி முடிக்கிறது.

காப்பர் டியையோ, லூப்பையோ பொருத்திவிட்டால் இவற்றின் காரணமாகத்


கவிதை பாடும் கண்களுக்கு...
ஐடெக்ஸ்
விழிகள் மொழிபேச ஐடெக்ஸ்
பெண்மை பளிச்சிட... இளமை எழில்
கொஞ்சிட... வனிதையர் வதனம்
கவர்ச்சி மிளிர்ந்து கண்கள்
கனிந்திட மரபுரிய ஐடெக்ஸ் கண்மை
சாஸ்திரீய முறையில் தயாராகும்
ஐடெக்ஸ் மை கண்களுக்கு
குளுமையூட்டி பாதுகாக்கிறது
எவ்வித தீங்கும் விளைவிக்காது
ஐடெக்ஸ் 38 ஆண்டுகளாக உங்கள்
நம்பிக்கையின் மகத்தான சின்னம்
EYETEX
அரவிந்த் லேபரட்டரீஸ் சென்னை 600 033

தன் வழக்கமான அசைவிலிருந்து மாறுபட்டு கருப்பை வேகமாக அசைகிறது. இதனால் ஒரு குறிப்பிட்ட நாளில் உருவாக வேண்டிய முட்டை இன்னும் சீக்கிரமாகவே உருவாகி விடுகிறது.

ஆனால் நடுவில் உள்ள பக்கச் சுவர்கள், முன்பே கூறியுள்ளது போன்ற ஆயத்தங்களுடன் இருந்தாலல்லவா முட்டை இங்கு நிலைக்க முடியும்? சீக்கிரமாகவே உருவாகி, குறிப்பிட்ட நாளுக்கு முன்பே கருப்பையில் சேர்ந்தவுடன் அங்கு தயாராக இல்லாத மற்ற அம்சங்களினால் உயிரிழக்கிறது. பின்னர் மாதவிடாயாக வெளிவந்து விடுகிறது.

இந்தக் கருத்தடுப்பு முறை மிகவும் பாதுகாப்பானது என்றுசொல்லப்படுகிறது. ஆனால் லூப்போ, 'காப்பர் டி'யோ எதுவானாலும் அடிக்கடி மருத்துவரிடம் சென்று சரிவர உள்ளதா என்று பார்த்துக் கொள்ளுதல் நல்லது.

அறுவைச் சிகிச்சை முறை எல்லோரும் அறிந்ததே. இதைப் பற்றியும் பல பயங்கள் இருக்கின்றன. இதனால் உடல் பருத்துவிடுகிறது, ஜீரணம் ஆவதில்லை, முழு இன்பம் கிடைப்பதில்லை.... இவை யெல்லாம் மூட நம்பிக்கைகள். ஏனெனில் இந்த ஆபரேஷன் எப்படிச் செய்யப்படுகின்றது என்பதை அறிந்து கொண்டால் நம்முடைய நம்பிக்கைகள் எவ்வளவு அறியாமை என்று தெரிந்து கொள்ளலாம்.

நடுவில் உள்ள கருப்பையின் இரண்டு புறமும்,உள்ள குழாய்கள் உள்ளனவே,இவற்றின் பருமன் ஒரு ஈர்க்குச்சியளவே. இதை நடுவில் வெட்டி மடித்துக் கட்டிவிடுவார்கள். கத்தரித்து எறிந்துவிடுவதில்லை. இதனால் முட்டைப் பையிலிருந்து வெளிவரும் முட்டை கருப்பைக்குச் செல்வதில்லை. குழந்தையும் உண்டாவதில்லை.

இந்தக் குழாய் பிரசவித்த சமயத்தில் கொஞ்சம் பெரிதாக இருக்கும் என்பதால் அந்தச்சமயத்தில் ஆபரேஷன் செய்வது எளிது. இல்லையென்றால் மாதவிடாய் முடிந்தவுடன் செய்யலாம்.

இதற்கும் ஜீரணத்துக்கு என்ன சம்பந்தம்? இதைப் பற்றி ஒன்றும் தெரியாததால் தனக்கு ஏதோ பெரிய ஆபரேஷன் நடந்து விட்டது என்று பயத்திலேயே உட்கார்ந்த இடத்தை விட்டு எழுந்திருக்காமல், வேலை செய்யாமல் இருந்தால் உடம்பு பருக்கத் தான் செய்யும்' என்றார் ஒரு மருத்துவர் சிரித்துக்கொண்டே.

இப்படிப் பெண்ணினத்துக்கு ஆபரேஷன் செய்வதைவிட ஆணினத்துக்குச் செய்வது மிகச் சுலபம். எப்படி என்பதற்கு முன் ஆணினுடைய உறுப்புக்களைத் தெரிந்துகொள்வது அவசியம்.

ஜனன உறுப்பின் இரண்டு பக்கமும் இருக்கும் பைகளிலிருந்துதான் விந்து உருவாகிறது. பெண்ணுக்கு மாதம் ஒரு முறை ஒரு முட்டை உருவாகும். ஆனால் ஆணுக்கு ஒரு முறை வெளிவரும் திரவத்தில் லட்சக் கணக்கான உயிரணுக்கள் காணப்படும்!

இது நேரடியாக வெளிவந்துவிடுவதில்லை. ஒருபுறத்திலிருந்து புறப்படும் இவ்விந்து வழியிலிருக்கும் - நடுவிலுள்ள ஒரு பையின் பசை போன்ற திரவத்துடன் கலந்து பின்னரே வெளிவரும்.

இவ்விந்து ஒரு குழாயின் வழியாக இப்பையை அடைகிறது அல்லவா? இக்குழாய் ஆண்களுக்கு வெளிப்படையாகத் தெரியும். எனவே மிகச் சுலபமாக இதைக் கண்டுபிடித்து வெட்டி மடக்கிக் கட்டிவிடலாம். எனவே உயிரை உண்டாக்கக்கூடிய விந்துக்கள் வெளிவருவதில்லை. உடலுறவின்போது வெறும் திரவம் மட்டுமே வெளியாகும்.

இது மிகச் சிறு ஆபரேஷன். இது முடிந்தவுடன் ஆபரேஷன் செய்யப்பட்டவர் வெளியில் வந்துவிடலாம். ஓய்வு தேவையில்லை. சாதாரணமாக வேலையில் ஈடுபடலாம். சைக்கிள், ஸ்கூட்டர் போன்றவற்றில் இரண்டு மாதங்களுக்குச் செல்லாமல் இருத்தல் நலம். இதற்குக் காரணம் என்னவென்றால் அந்தப் பாகம் 'சீட்'டில் அழுந்த வாய்ப்புண்டு. அவ்வளவுதான். மற்றபடி குறைகள் உண்டாகும் என்றெல்லாம் சொல்வது அறியாமையின் காரணமாகத்தான்.

''ஆனால், நம் பெண்களோ இதை ஒத்துக் கொள்வதில்லை. ஏனெனில் அவர்கள் தங்களுக்கு எவ்வளவு கஷ்டம் வந்தாலும் தாங்கிக்கொள்வார்கள். தன் கணவருக்கு ஆபரேஷன் என்றால் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். ஆனால் இது எத்தனை சின்ன விஷயம் என்பதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும்.'' என்றார் ஒரு மருத்துவர்.

மருத்துவர்களின் ஏகோபித்த அபிப்பிராயம் என்னவென்றால் ஓரளவு சிரமம் மிகுந்த பெண்களுக்கான கருத்தடை ஆபரேஷனை விட ஆண்களுக்கான மிக எளிய கருத்தடை ஆபரேஷனே சிறந்தது என்பதுதான்.

இரண்டு குழந்தைகளுக்குப் பிறகு இதைச் செய்துகொள்வது நல்லது. இதுவே முடிந்த முடிவு என்பதில்லை. மீண்டும் குழந்தை வேண்டும் என்ற சந்தர்ப்பம் ஏற்படும்போது மடித்துக் கட்டிய குழாய்களை இணைக்கவும் செய்து விடுகிறார்கள்.

இவை எவையுமே அறியாததினாலோ அல்லது ஆங்காங்கே குறிப்பிட்டபடி தெரியாத

உருளைக்கிழங்கு வேகவைத்த நீரைக் கீழே கொட்டி விடாமல் அதில் கறை பட்டிருக்கும் பட்டுத்துணிகளை நனைத்து வைத்து பிறகு தண்ணீரில் அலசினால் கறை போய் விடும்.
-ப்ரியா

பயத்தினாலோ, தவறி குழந்தை உண்டாகும் போது அபார்ஷன் செய்து கொள்கிறார்கள். இதைப் பற்றி முன்பும் கொஞ்சம் சொன்னேன்; இதை எப்படிச் செய்கிறார்கள்?

ஆண் விந்துவுடன் சேர்ந்த பெண் முட்டை கருவாகி கருப்பைக்குள் தங்கிவிடுகிறது. கருவை வரவேற்கத் தயாராக இருந்த சுவர்களில் மேலும் ரத்தம் சுரக்கிறது. கருவை வளர்ப்பதற்கான சத்துக்களும் அந்த இடத்தில் வந்து குவிய ஆரம்பிக்கின்றது. கருவும் வளர ஆரம்பிக்கிறது.

இந்தச் சமயத்தில் மருத்துவர்கள் கருவைக் கலைக்க கருப்பையின் பக்கச் சுவர்களைச் சுரண்டிச் சுரண்டி உயிர்ச் சத்துக்களையும், கருவையும் எடுத்து விடுகிறார்கள். மூன்று மாதம் வரை ஒரு மிளகளவே இந்தக் கரு இருக்கும் என்பதால் அதைச் சுரண்டி எடுப்பதில் அதிகச் சிரமம் இருப்பதில்லை.

மூன்று மாதத்துக்குப் பிறகு அதனுடைய வளர்ச்சி மிகவும் பயங்கரமானது. காரணம் மனித வளர்ச்சி நிலைகளிலேயே தாயின் வயிற்றில் மூன்று மாதத்திலிருந்து பிறக்கும் வரையிலான வளர்ச்சி மிக மிக சீக்கிரமானதும் ஆச்சரியமானதும்கூட. எனவே மூன்று மாதத்துக்குப் பின் கருவைக் கலைப்பது அபாயகரமானது. பல சமயங்களில் அது வெளிவராமல் போவதுடன், மேலும் சதைப் பிண்டமாக வளரவோ, செப்டிக் ஆகவோ கூட வாய்ப்புண்டு'' என்கிறார் இந்தியக் குடும்ப நலச்சங்கத்தில் பணிபுரியும் ஒருசமூகத் தொண்டர்.

இந்த இந்தியக் குடும்ப நலச் சங்கம் புரியும் சேவைகள் பல. இவர்கள் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகள் அனைத்தையும் இலவசமாகவே செய்வதுடன் அதற்காகக் கிராமம் கிராமமாகவும் செல்கிறார்கள். சாலிகிராமத்தில் இதற்கென்றே தனியான மருத்துவமனை ஒன்றையும் வைத்துள்ளார்கள்.


''இப்படி அபார்ஷன் செய்து கொள்ள வரும் பெண்களிடம் நாங்கள் கண்டிப்பாகச் சொல்லிவிடுவது வழக்கம். மீண்டும் குழந்தை வேண்டும் என்று நீங்கள் நினைக்கும் காலம் வரை கண்டிப்பாக ஏதேனும் ஒரு வழியைப் பின்பற்றியே ஆகவேண்டும் என்று. ஒரு முறைக்கு மேல் அபார்ஷன் செய்வதில்லை.''

என்கிறார்கள். இவர்களின் சேவையும், ஆலோசனைகளும் மக்களுக்கு இலவசமாகவே கிடைக்கின்றன. ஏதேனும் சந்தேகம் ஏற்பட்டாலோ, மேற்கொண்டு ஏதேனும் தகவல்கள் தேவைப்பட்டாலோ அவர்களிடம் தொடர்பு கொள்ளலாம்.

தகவல் தந்து உதவியவர்கள்:

சேர்மன்,
குடும்பநலத் துணைக் குழு,
செஞ்சிலுவைச் சங்கம்,

இந்தியக் குடும்ப நலச் சங்கம்,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை-28.



FOR TOTAL RELIABILITY IN HIGH TENSILE FASTENERS:

'TVS'



Yes, for years, the name 'TVS' has been synonymous with total reliability in quality high tensile bolts, screws and nuts.

Precision engineered, cold forged and heat treated–the standard and special fasteners are manufactured to meet specific requirements.

What's more, Sundram Fasteners plans production to suit delivery commitments which will optimize your procurement efficiency. The result: a big saving in inventory costs.


Cars, trucks, buses, three-wheelers, scooters, motorcycles, tractors, industrial engines, tillers, diesel locomotives and earth-moving equipment are fitted with TVS fasteners as OE. They are also used in other non-automotive engineering applications.

'TVS' high tensile fasteners conform to Indian, ISO, American, British and DIN standards. Fasteners are also made to customers' specifications.

Available in diameters from 6 mm (¼") to 24 mm (1"), and in lengths from 12 mm (½") to 200 mm (8").

Sundram Fasteners—a single source for all your standard and critical special fasteners needs.

Where fastening is critical 'TVS' the first choice



Manufactured by:
Sundram Fasteners Limited
PADI, MADRAS 600 050

PHONE: 632701 GRAMS: SUNLOC
TELEX: 041-7549 FASN IN

SAA/SFL/3115



தொகுப்பு: டி.ஆர்.ரமேஷ், எம்.ஏ.பி.எல்

மதம் மாறிய கணவர்

நிர்மலா மேரி — மதுரை

என் கணவர் அவருடைய பெற்றோருக்கு மூன்றாவது மகன். ஏழு வருடங்களாக அவரும் நானும் காதலித்தோம். அவர் இந்து. நான் கிறிஸ்துவப் பெண். மற்ற இரு அண்ணன்களின் திருமணத்துக்குத் தடை ஏற்படாமல், திருமணம் செய்துகொள்ளாமல் இருந்து முப்பத்திரண்டாவது வயதில் கிறித்துவமதத்துக்கு மாறி இவர் என்னை மணந்தார்.

நாங்கள் அவர்களுக்காகக் காத்திருந்தது, எங்களுடைய புனிதமான காதல், எங்களுடைய நியாயங்கள் எல்லாம் அவர்கள் அனைவருக்கும் தெரியும். அப்படியிருந்தும் அவர்களுடைய சொத்தில் என் கணவருக்கு எந்தவித உரிமையும் கிடையாது என்று சொல்லி விட்டார்கள். எங்களுக்கு அது தேவையில்லை என்றாலும், சட்டப்படி அது சரியா என்பதை மட்டும் தெரிந்து கொள்ள விரும்புகிறோம்.

வழக்கறிஞரின் பதில்

சரிதான். ஏனெனில் நம்முடைய நாட்டின் சட்டம் ஒவ்வொரு மதத்தையும் மதிக்கிறது. அம்மதங்களின் பழக்க வழக்கங்களையும், கோட்பாடுகளையும் மதிக்கிறது. இந்து வாரிசு உரிமைச் சட்டப்படி, ஒருவருடைய மகன் மதம் மாறிவிட்டால், அந்த மகன் தன்னுடைய தந்தையிடமிருந்து சொத்தைப் பெறும் உரிமையை இழந்து விடுகிறான். எனவே, உங்களுடைய கணவர், கிறிஸ்துவ மதத்துக்கு மாறிவிட்டதால் அவர் தன்னுடைய இந்து அண்ணன்களிடம் பாகப் பிரிவினை கேட்டு வழக்காட முடியாது.

தயிருக்கும் சளிக்கும் என்ன சம்பந்தம்?

ஹேமாவதி — மேட்டுப்பாளையம்

என்னுடைய மகனுக்கு இரண்டரை வயதாகிறது. சிறு குழந்தையாய் இருப்பதிலிருந்தே அவனுக்கு ஏதாவது ஒரு உடம்பு என்று மாற்றி மாற்றி வந்து கொண்டே இருக்கும். ரசம் சாதம், ரசம் சாதம் என்று சாத வகையறாவில் அதை மட்டுமே கொடுத்து வருகிறோம். எங்களுடைய டாக்டர் தயிர் கொடுக்க வேண்டும் என்கிறார். அவனுக்கு சளி பிடித்துக் கொண்டால் போவது அவ்வளவு சாமான்யமல்ல. அவனுக்கு எல்லா குழந்தைகளைப் போல எல்லாச் சாதமும் கொடுக்கலாமா?

மருத்துவரின் பதில்


குழந்தைக்கு ஒன்றரை வயது ஆகிவிட்டாலே ஓரளவு எல்லாவற்றையும் கொடுத்துப் பழக்க வேண்டும். பெரியவர்கள் சாப்பிடுவதைக் கொஞ்சம் கொஞ்சம் கொடுத்துப் பார்ப்பது நல்லது. உணவு விஷயங்களில் மிகவும் கட்டுப்பாடாக இருக்கக் கூடாது. ஐஸ் போன்றவற்றை விலக்கலாம்.

தயிரைப் பொறுத்தவரை, அது குழந்தைகளுக்கு மிகவும் முக்கியமான உணவு. வெளி நாடுகளில் மிகச் சிறு குழந்தைகளுக்கும் தயிர் கொடுக்கிறார்கள். கட்டித் தயிரைச் சர்க்கரை போட்டு நன்றாகக் கலக்கி பாட்டிலில்



* அதிகாலையில் தேனை வெந்நீரில் விட்டுச் சாப்பிட்டால் உடல் சதை பிடிக்காமல் இருக்கும்.

* குளிர்ந்த ரோஸ் வாட்டரைக் கண்களில் படுக்கப்போகும் போது விட்டுக் கொண்டால் பார்வை பளிச்சென்று இருக்கும்.



* வெள்ளிப் பாத்திரங்களை நாள்பட பெட்டியிலோ பீரோவிலோ வைத்திருந்தால் அவை கருப்பாக நிறம் மாறிவிடும். ஆனால் பாத்திரங்களுடன் கொஞ்சம் கற்பூரத்தை வைத்தால் பாத்திரம் நிறம் மாறாது. -ப்ரியா

றைற்றி இரண்டு மாதக் குழந்தைக்குத் தருகிறார்கள். இது குழந்தைக்கு மிகவும் புஷ்டியான ஆகாரம்.

குழந்தைக்கென்று ஒரு தனிக் கிண்ணத்தை வைத்துக் கொண்டு, குறைந்த மணி நேரங்களுக்கு உறைகுத்தி இனிப்புத் தயிராகக் கொடுங்கள். ஒரு நாளைக்கு இப்படி இரண்டு முறை தரலாம்.

இன்னொரு முக்கியமான விஷயம். இப்படித் தயிர் சாப்பிடும் குழந்தைகளுக்கு 'டயரியா' (பேதி) வருவதே இல்லை. இது நூற்றுக்கு நூறு நிருபணமான விஷயம்.

கடியாய்க் கடிக்கிறது மூட்டைப் பூச்சி!

தர்மாம்பாள் நெய்வேலி

இதையும் ஒரு கேள்வியாகக் கேட்கக் கஷ்டமாகத்தான் இருக்கிறது. ஆனாலும் தொல்லை தாங்க முடியவில்லை. மூட்டைப் பூச்சித் தொல்லைதான்! இதுவரை எவ்வளவோ மருந்துகளைப் போட்டு விட்டோம். அப்பொழுதைக்குப் போவது போலத் தோன்றினாலும் மீண்டும் வந்துவிடுகிறது. இதற்கு ஒரு நிரந்தரமான நிவாரணமே கிடையாதா?

மருந்துக் கடை வைத்திருப்பவரின் பதில்

இப்பொழுது பல சக்தியுள்ள மருந்துகள் வந்துள்ளனவே. அநேகமாக அவை யாவுமே நல்ல பலனைத் தருகின்றன. இவற்றில் பயனில்லை என்று சொல்கிறீர்கள். இதோ இந்த முறை ஓரளவு பயன் தரும்:

வெந்நீரை நன்றாகக் கொதிக்க விட்டு அதில் படிகாரத்தைப் போட்டுக் கரைத்துவிடுங்கள். அந்த நீரை மூட்டைப் பூச்சி உள்ள இடங்களில் தெளித்து விட்டால், எல்லாப் பூச்சிகளும் ஒழிந்துவிடும்.

வாடகைக்குள் ஒரு வாடகை!

நீலாம்பாள் ஹைதராபாத்

எங்களுக்குச் சென்னையில் ஒரு வீடு இருக்கிறது. ஐந்து வருடங்களுக்கு முன் என் கணவருக்கு ஹைதராபாத்துக்கு மாற்றல் கிடைத்தது. மிகவும் தெரிந்தவர் என்று நம்பி ஒருவரை அந்த வீட்டை வாடகைக்கு விட்டுவிட்டு வந்தோம். எங்களுடைய நம்பிக்கையைக் குலைக்கும் விதத்தில் ஒரு பாதி வீட்டை வேறொருவருக்கு விட்டுச் சம்பாதிக்கிறார். நாங்கள் நினைத்தபடி வீட்டை நன்றாகப் பார்த்துக் கொள்ளாததால் அவர்களைக் காலி செய்யச் சொல்கிறோம். அவர்கள் மறுக்கிறார்கள். இதற்கு என்ன செய்வது?

வழக்கறிஞர் பதில்

ஒருவருக்கு வாடகைக்கு விட்ட வீட்டை, வாடகைதாரர் 'மேல் வாடகை'க்கு விடுவது தவறு. வீட்டு வாடகைச் சட்டப்படி இது குற்றமானதும்கூட. எனவே நீங்கள் அவர்களிடம் தைரியமாகவே காலி செய்யும்படி கேட்கலாம். இல்லையெனில் கோர்ட்டில் வழக்கைத் தாக்கல் செய்து கோர்ட் மூலமாகவே அவர்களை வெளியேற்ற உங்களுக்கு உரிமையுண்டு.

இவையனைத்தும், நீங்கள் வாடகைக்கு விட்ட நபரிடம் செய்து கொண்ட ஒப்பந்தத்தைப் பொறுத்தது. அவருக்கு அவ் வீட்டை எப்படியும் உபயோகித்துக்கொள்ள உரிமை உண்டு என்று ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தீர்களானால், உங்களால் எதுவும் செய்ய இயலாது.

இல்லையெனில் அவர் மேல் வாடகைக்கு விட்டார் என்ற ஒரே காரணத்தை வைத்தே அவர்கள் இருவரையும் காலி செய்யச் சொல்லலாம்.

ஒரு இனிய நினைவு

லக்ஷ்மி

தென் ஆப்பிரிக்காவில் வசித்த காலத்தில் நாங்கள் அடிக்கடி விடுமுறை நாட்களின் போது கடற்கரைக்கு பிக்னிக் செய்யப் புறப்பட்டு விடுவோம்.

நாலைந்து குடும்பங்கள் சேர்ந்து ஒரு கோஷ்டியாக பிக்னிக்கிற்குப் போவது வழக்கம்.

டர்பன் நரத்துக்குத் தெற்கிலும் மேற்கிலும் சில கிலோ மீட்டர் தூரத்தில் இசுப்பிங்கோ, பார்க்ரெனி, டோங்காட், மாலர்சி என்று பிக்னிக் செய்யவே ஒதுக்கப் பட்ட கடற் பகுதிகள்பலஉள்ளன. அங்குள்ள கடலில் சுறு மீன்கள், கிடுகிடு பள்ளம் போன்ற ஆபத்துக்களில் சிக்காது உல்லாசப் பயணிகள் நிம்மதியாகக் குளிக்கலாம். நாங்கள் அடிக்கடி லாமெர்சிலும் பகுதிக்கு பிக்னிக் செய்யக் கிளம்பி விடுவோம். சில்லென்ற நீரில் விழுந்து அலைகளுடன் புரண்டு மணிக் கணக்காகக் கடல் நீரில் நீந்தி விளையாடிக் கொண்டிருப்போம். கடலை விட்டு எழுந்து வர மனமே இருக்காது. அத்தனை ஒரு சுகமாக இருக்கும் சமுத்திர ஸ்நானம்.

பிக்னிக் செய்ய அவரவர்கள் வீட்டிலேயே உணவு வகைகளைத் தயார் செய்து ஆளுக்குக் கொஞ்சம் காகிதத் தட்டுகள், டம்ளர்கள், கை துடைக்க காகிதத் துண்டுகள், பிளாஸ்டிக் கேனில் தண்ணீர் இத்யாதிகளுடன் கிளம்புவோம். உடைகள் மாற்றிக் கொள்ள- கடற்கரைப் பகுதியில் மரங்கள் அடர்ந்த நிழலான ஓர் இடத்தில் ஒரு கூடாரம் அமைத்துக் கொள்வோம். அதன் முன் ஜமுக்காளங்களை விரித்துப் போட்டு உணவு வகைகளைப் பரப்பிவிட்டு ஸ்நானம் செய்யப் பிடிக்காதவர்களை காவலுக்கு அங்கே வைத்துவிட்டு, கடலை நோக்கி ஓடிவிடுவோம். நாங்கள் வரும்வரை மர நிழலில் டிரான்ஸிஸ்டர், டேப் ரிகார்டர், இவைகளின் பாட்டைக் கேட்டுக் கொண்டு உட்கார்ந்து இருப்பார்கள், காவலுக்கு இருக்கிறவர்கள். பெண்கள் குளித்து விட்டு வருகிறவர்களுக்குச் சாப்பாடுபோட, பொழுது உச்சியை அடையும் சமயம் கொண்டுவந்த சாப்பாடுகளை மண்ணெண்ணெய் ஸ்டவ்வில் சூடு படுத்திக் கொண்டிருப்பார்கள்.

ஒருமுறை பிக்னிக்கின்போது பெண்கள் குளிக்கும் பகுதியில் நானும் என் தோழியும் நேரம் போவது தெரியாமல் கடல் நீரில் தொலைந்து கொண்டிருந்தோம். ஹைடைட் வரத் தொடங்கி விட்டது. அலைகள் கோபத்துடன் பளார் பளார் என்று முதுகில் அடிக்க



ஆரம்பித்தும் கடலை விட்டு எழ மனமில்லை.

'கடல் கொந்தளிக்கிறது. குளிக்கிறவர்கள் சட்டென்று கரை ஏறுங்கள்' லைஃப் சேவகர்கள் ஒலிபெருக்கியில் இரைந்து கத்தவே நாங்கள் மனமின்றி வெளி வந்தோம். உடைகளை மாற்றிக் கொண்டோம். இன்னமும் சாப்பாடு தயாராகவில்லை. அதற்குள் அந்தப் பகுதியை ஒரு முறை சுற்றி வர விரும்பினோம். தென் ஆப்பிரிக்காவின் கடற்கரை யோரத்திலே பசலைக்கீரை, வாட்டர் கிரஜ், கொய்யா, ஊஸாக்காய், முதலியன தன்னிச்சையாகச் செழித்து வளர்ந்து கிடக்கும். யாரும் பறித்து உபயோகிக்காலம்.

ஆளுக்கு ஒரு பிளாஸ்டிக் கூடையுடன் கொய்யா, ஊஸாக்காய் கீரைகளையும் சேகரிக்க இருவரும் கிளம்பினோம். கொய்யாப் பழங்களால் கூடை நிறைந்தது.



துளசி இலையை உடலில் தேய்த்துக்கொண்டு படுத்தால் கொசு அருகிலேயே வராது. நிம்மதியாகத் தூங்கலாம்.

-ப்ரியா

ஊஸாக் காயை என் சிநேகிதி தன் கூடையில் நிறைத்துக் கொண்டாள். கையோடு கொண்டு வந்த வலைப் பையில் பசேலென்று செழித்து வளர்ந்திருந்த பசலைக் கீரையை வேண்டிய மட்டும் பறித்து நிரப்பிக்கொண்டு வாட்டர் கிரஸ் கீரையைக் காணலியே என்றேன் நான். அந்நாட்டுக் கீரைகளில் எனக்கு அது மிகவும் பிடித்தவகை.

''கட்டாயம் இங்கே கிடைக்கும். தண்ணீர் தேங்கிக் கிடக்கும் இடத்தில் வளரும் கீரை. கொஞ்சம் போய்ப் பார்ப்போம்..''

சிநேகிதி தூண்டவே, கால் புதையும் மணலில் மேடுகளையும் பள்ளங்களையும் தாண்டிக் கொண்டு நாங்கள் இருவரும் வாட்டர் கிரஸ் கீரையைத் தேடிக் கொண்டு நடந்தோம்.

பாலை வனத்துக் கானல் நீர் பயணிகளை ஏமாற்றுவதுபோல் வாட்டர் கிராஸ் கீரை இதோ... இங்கே....இங்கே.. என்று எங்களை வெகுதூரம் வெய்யிலில் இழுத்து விட்டது. உச்சி வேளை. தாகம் நாக்கை வரட்டியது. வெய்யில் தலையை பிளந்தது.

கால் கடுக்க வந்த பின்னர் வாழை மரங்கள் அடர்ந்த ஒரு தோட்டத்திற்குள் நிற்பதை உணர்ந்தோம்.

'என்னம்மா பாக்குறீங்க?'... கேட்டபடி ஒரு கிழவர் அருகில் வந்தார்.

திடுக்கிட்டுப் போனோம்.

'ஊரான் வீட்டுத் தோட்டத்திலே யாரோ போட்ட வெள்ளரிக்காய்' என்ற பாட்டு நினைவுக்கு வர... எனக்கு வெட்கமாக இருந்தது.

''வாட்டர் கிரஸ் கீரை தேடிக்கிட்டு வந்தோம் தாத்தா'' — அசடு வழிந்தாள் என் தோழி.

''அவ்வளவுதானே... வீட்டுக்கு வாங்க.. வெய்யிலிலே ரொம்ப தூரம் நடந்து களைச்சுப் போயிருக்கிங்க..''கிழவர் உபசரித்தார்.

சற்று தூரத்தில் தகரக் கூரை வேய்ந்த ஒரு சிறு வீடு தெரிந்தது. கட்டாயம் அதன் வாசல் பக்கம் தோட்டத்துக்கு நீர் பாய்ச்ச ஒரு குழாய் இருக்கும். முதலில் தாகம் அடங்கக் கொஞ்சம் தண்ணீர் பிடித்துக் குடிக்க வேண்டும் என்று நினைத்தபடி அழுக்குச் சட்டையும் ஓரம் கிழிந்து நாராய்த் தொங்கிய பாண்டும் மண்படிந்த ஷூவுமாகத் தென்பட்ட அந்தக் கிழவரைப் பின் தொடர்ந்தோம்.

''லோகி! இப்படி வா.. நம்ப வீட்டுக்கு விருந்தாளி வந்திருக்காங்க...''குரல் கொடுத்தார் கிழவர் வீட்டு வாசலை நெருங்கியதும்.

பரட்டைத் தலையும் தோட்டத்து வேலை செய்த மண் ஒட்டிய பழைய சேலையுமாக ஒரு கிழவி உள்ளே இருந்து ஓடி வந்தாள்.

''வாங்கோ... உட்காருங்கோ.. சௌக்கியமா...'' முன் பின் தெரிந்தவள் போல எங்கள் இருவரையும் வரவேற்று முன்னறை போல இருந்த பகுதியில் கிடந்த ஹைதர் காலத்துக் கிழிந்த சோபாவில் உட்கார வைத்தாள்.

''இந்த பூமி டவுனில் கடை வச்சிருக்கிற ஒரு பணக்காரருடையது. இதைப் பார்த்துக்க என்னை இங்கே இந்த வூட்லே குடி வெச்சிருக்கார். மாசச் சம்பளம் தரார். நான் ஏதாச்சும் பயிர் போட்டு அதை வித்து அதசெலவுக்கு வெச்சுக்கிறேன். அடுத்த வருஷம் இந்த பூமியிலே ஒரு பெரிய வீடு கட்டப் போறாராம்.'' என்றார் கிழவர்.

''லோகி, சீக்கிரம் டீ போட்டு எடுத்தா— இதோ வரேன்'' என்று சொல்லிக் கொண்டு அவர் தோட்டத்துக்குள் மறைந்துவிட்டார்.

மெல்ல எழுந்து சமையலறை போன்ற பகுதியை எட்டிப் பார்த்தேன். நிலக்கரி அடுப்பு கணகணவென்று எரிந்து கொண்டிருந்தது. ஒரு பக்கம் பெரிய அலுமினியச் சட்டியில் சோறு வெந்து கொண்டிருந்தது,

இன்னொரு பக்கம் ஒரு இரும்புக் கெட்டிலில் தண்ணீர் தளைத்துக் காண்டிருந்தது. மரச் சட்டத்தால் அமைக்கப்பெற்ற ஷெல்பில் ஒரு பாட்டிலின் அடியில் சிறிது தேயிலை இன்னொரு பாட்டிலில் கொஞ்சம் சர்க்கரை. ஒரு பேசின் தண்ணீருக்குள் ஒரு சிறு பாட்டிலில் பால்.

மாதக் கடைசி. வீட்டில் சாமான்களின் பற்றுக்குறை. இந்த நிலையில் அந்தம்மாள் வேகமாக டீ தயாரித்து ஒரு தட்டில் பீங்கான் கெட்டிலில் ஊற்றி சாப்பிட இரண்டு கோப்பைகளுடன் வெளிவந்தாள். ஓரம் உடைந்துபோன கோப்பை. அழுக்குப்பிடித்த சூழ்நிலை. எனக்கு என்னவோ போலிருந்தது.

அதற்குள் கிழவர்உள்ளே வந்தார். ''லோகி சாப்பிட அவர்களுக்கு பிஸ்கட் எடுத்து வை.'' என்றார்.

கிழவி தகர டப்பா ஒன்றைத் திறந்து தேடி நான்கு பிஸ்கட்களை எடுத்துப் பீங்கான் தட்டில் வைத்து கால்களாடிய ஓர் உடைந்த மேஜை மேல் வைத்து உபசரித்தாள்.

''இந்தாங்க நீங்க தேடிக்கிட்டு வந்த வாட்டர் கிரஸ். நான் போட்டது.'' சொல்லிக் கொண்டே ஒரு பெரிய கத்தையைப் பூச்செண்டு போல நாளோடு ஒன்று சுற்றி எடுத்து வந்த கிழவர் என்னிடம் கொடுத்தார். இடுப்பில் செருகியிருந்த சிறு பர்ஸை எடுத்து திறப்பதைக் கண்டதும் குறுக்கிட்டார்.

''வேணும்மா... இந்த ஏழை வீட்டுக்கு உங்களைப் போன்ற பெரியவங்க வந்து டீ சாப்பிட்டுட்டுப் போவதே எனக்குப் பெரிய பரிசும்மா... கீரையை நான் சும்மா தரேன். சாப்பிட்டுட்டு எங்களை நினைச்சுக்குங்க. பணம் வாணும்.''

அத்தனை கீரையையும்அவர் அருகில் உள்ள டவுன் மார்க்கெட்டில் விற்றால் நாலு நாளைக்கு வேண்டிய தேயிலையும் சர்க்கரையும் வாங்கிக் கொள்ள முடியும். அந்த வறுமை நிலையில் பிறருக்குத் தர வேண்டும் என்ற தாராளமனம். என் மனம் கரைந்து போனது.

அன்பைக் கலந்து உடைந்த கப்புக்களில் அவர் ஊற்றித் தந்த தேநீர் நாவில் இனித்தது. நமத்துப் போன பிஸ்கட்டுகள் தின்னத் தின்னச் சுவையாக இருந்தன.

''ஏம்மா நீங்க இந்தப் பக்கத்துக்காரங்க இல்லை போல பேச்சிலே தோணுதே!'' கிழவர் கண்டு பிடித்து விட்டார்.

''இந்தியாவிலிருந்து வந்தவள். ஏன் கேட்கிறீர்கள்?''

''எங்க பாட்டி இந்தியாவிலிருந்து வந்தவங்க. எங்கம்மா நான் எல்லாம் இந்த நாட்டிலேயே பொறந்தவங்க. பாட்டி சொல்லக் கேட்டிருக்கேன். அங்கே யெல்லாம் பெரிய பெரிய கோவில்கள் இருக்குமாமே!ம்...அதுக்கெல்லாம் போகக் குடுப்பினை இல்லை. வயசு ஆச்சு. வசதி இல்லே... ஒண்ணு செய்வீங்களா?''

''சொல்லுங்க, செய்யறேன்.''

''தாய் நாடு எப்பவாச்சும்போனீங்கன்னு இதை,ஏதாச்சும் ஒரு கோயில் உண்டியிலே போட்டுடுங்க.''தமது பாண்ட் பையிலிருந்து ஒரு ரூபாய் மதிப்புள்ள அந்த நாட்டு நாணயத்தைஎடுத்து என் கையில்வைத்தார்.

''செய்திடறேன் தாத்தா.'' மனம் நெகிழ்ந்து வாங்கிக் கொண்டேன் அந்த நாணயத்தை. நான் அங்குள்ள கோயில் உண்டியில் போட்டுவிட்டு ஒரு முறைதாய் நாட்டுக்கு வந்தபோது அதன் மதிப்பு அளவு ரூபாயைச்சுற்றுப்பயணத்தின்போது கோயில் ஒன்றின் உண்டியலில் அவரது காணிக்கையாகச் செலுத்தி விட்டேன். கடமையை முடித்துக் கொண்டேன். ஆனால் நினைவை மறக்க இயலவில்லை.

'வரகரிசி சோறும் வழுதுணக்காய்' என அரசன் அளித்த விருந்தை ஔவை பாட்டி புகழ்ந்தது போல இந்தக் கிழவர் அளித்த தேநீர் விருந்தை என்னால் கவிபாடி பெருமைப்படுத்த முடியவில்லை. ஆனால் வாழ்க்கையிலேயே அதை ஒரு இனிய நினைவாகக் கருதுகிறேன்.

நரம்பு தளர்ச்சி உள்ளவர்களுக்கு தேன் மிகவும் நல்லது. இரவில் படுக்கையை நனைக்கும் பழக்கமுள்ள குழந்தைகளுக்கு படுக்கைக்கு செல்லுமுன் ஒரு கரண்டி தேன் கொடுத்து வந்தால் படுக்கையை நனைப்பது நின்று விடும். குழந்தைகள் வாயு தொல்லையால் அவதி பட்டால் கரும் துளசி சாறோடு தேனை கலந்து குடிக்கக் கொடுக்கலாம்.

பத்மா



'ரச'மான சில ரசங்கள்

வேப்பம்பூ ரசம்

அரை லிட்டர் ரஸத்துக்கு
சிறிய எலுமிச்சம் பழ அளவு புளி
இரண்டு பெரிய தக்காளிப் பழம்
நாலு வற்றல் மிளகாய்
ஒரு டீஸ்பூன் துவரம் பருப்பு,
அரை டீஸ்பூன் வெந்தயம்
பெரிய மிளகளவு பெருங்காயம் (பொடி செய்து கொள்க.)
ஒரு டீஸ்பூன் வேப்பம் பூ.

புளியை நன்றாகக் கரைத்துக் கொண்டு தக்காளிப் பழத்தை நன்றாகக் கசக்கிப்போட்டு வேண்டிய உப்பு, ரசப் பொடி, சேர்த்து பருப்பு, மிளகாய், வெந்தயம் பெருங்காயத்தை எண்ணெயில் காந்தாம வறுத்து புளி ஜலத்தில் கொட்டி புளியங் கொட்டை அளவு வெல்லம் போட்டு, அடுப்பில் வைத்துக் கொதிக்க விடவும். நன்றாகப் பொங்கியதும் வேண்டுமென்ற அளவுக்கு ஜலம் ஊற்றி இறக்கிய பின் கறிவேப்பிலையையும் வேப்பம் பூவையும் எண்ணெயில் தாளித்துக் கொட்டவும். இது பித்தத்துக்கு நல்லது.

மிளகு ரசம்

அரை லிட்டர் ரஸத்துக்கு:
எலுமிச்சம் பழ அளவுள்ள புளி,
ஒரு டேபிள் ஸ்பூன் துவரம் பருப்பு,
ஒரு டீஸ்பூன் மிளகு,
நாலு மிளகாய் வற்றல்,
ஒரு டீ ஸ்பூன் சீரகம்,
கொஞ்சம் கடுகு,
இரண்டு ஆர்க் கறிவேப்பிலை,
இரண்டு சிறிய தக்காளிப் பழங்கள்,

மிளகாய், பருப்பு மிளகு முதலியவைகளை நன்றாக வறுத்துக் கொண்டு பொடி செய்து கொள்ளவும். புளியையும் தக்காளியையும் நன்றாகக் கரைத்துக் கொண்டு அதில் வறுத்த பொடியைப் போட்டு நன்றாகக் கொதிக்க விடவும். சீரகத்தை அரைத்துச் சேர்த்து வேண்டுமென்ற அளவுக்குத் தண்ணீர் விளாவி நெய்யில் கடுகு, கறிவேப்பிலை தாளிதம் செய்யவும். இது அஜீர்ணத்துக்கு நல்லது.

பொரித்த ரஸம்

அரை லிட்டர் ரசத்துக்கு:
ஒரு டேபிள் ஸ்பூன் கடலைப் பருப்பு,
நாலு மிளகாய் வற்றல்,
ஒரு டீஸ்பூன் மிளகு,
ஒரு டீஸ்பூன் கொப்பரைத் துருவல்,
புளியங்கொட்டை அளவு பெருங்காயம்,
நடுத்தரத் தக்காளிப் பழங்கள் இரண்டு
இரண்டு பச்சை மிளகாய்,
ஒரு சர்க்கு கறிவேப்பிலை,
அரை டீஸ்பூன் கடுகு,
புளியங்கொட்டை அளவு வெல்லம்,
ஒரு டீஸ்பூன் தனியா.

பருப்பு, மிளகாய் முதலியவற்றை எண்ணெயில் வறுத்துக் கொண்டு, கடைசியில் கொப்பரைத் துருவலைப் போட்டு எல்லாவற்றையும் ஒன்றிரண்டாகப் பொடி செய்து கொண்டு உப்பையும் தக்காளிப் பழத்தையும் ஜலத்தில் கரைத்துக் கொண்டு அதில் பச்சை மிளகாய், கறி வேப்பிலை, கடுகு முதலியவற்றை நெய்யில் தாளிதம் செய்து பொடியையும் போட்டு அடுப்பில் வைத்துக் கொதிக்க வைத்து பருப்பு ஜலம் விளாவி, வெல்லத்தைப் போட்டு இறக்கிவிடவும். மணமாக, சாப்பிட ருசியாக இருக்கும்.

கண்டதிப்பிலி (மோடி) ரஸம்

அரை லிட்டர் ரசத்துக்கு:
எலுமிச்சம் பழம் அளவு புளி,
நாலு வற்றல் மிளகாய்,
ஒரு டீஸ்பூன் உளுத்தம் பருப்பு,
ஒரு டீஸ்பூன் மிளகு,
சிறிய புளியங்கொட்டை அளவு பெருங்காயம்
கண்டதிப்பிலி (மோடி) பத்து துண்டுகள்.


மிளகாய் முதலியவற்றை எண்ணெயில் வறுத்துக்கொண்டு, கடைசியில் தனியா, கண்டதிப்பிலியை பச்சையாக இல்லாமலும் காந்தாமலும் சிவக்க வறுத்துக்கொண்டு மற்ற சாமான்களை நன்றாகப் பொடி செய்து கொண்டு, புளி ஜலத்தில் உப்போடு இந்தப் பொடியைக் கலந்து, அடுப்பில் வைத்து அளவோடு பொங்க விட்டு ஜலம் விளாவி கடுகு, கறிவேப்பிலை, நெய்யில் தாளிதம் செய்யவும். உடம்பு வலிக்கு மிகவும் நல்லது. அவரவர்கள் ருசிக்குத் தக்கபடி தண்ணீரைக் குறைவாகவோ அதிகமாகவோ ரசத்தில் கலந்து கொள்ளவும்.

-கே. ஜெயலக்ஷ்மி



"ஸ்..ஸ்..பாரும்மா,
ரொம்ப அரிக்குது..எரியிதும்மா."
உபயோகியுங்கள்
நைஸில்.
உடனடி நிவாரணம்
அளிக்கும்
வியர்க்குரு பவுடர்.
2 தினுசு
டப்பாக்களில்
கிடைக்கிறது
'நீலம்' மற்றும்
'சந்தனம்'.
Glaxo
nycil
PRICKLY HEAT POWDER
வாங்குவீர்
நைஸில்
விரட்டுவீர்
வியர்க்குருவை.
மருந்துப் பொருட்கள்
அடங்கிய—நைஸில்:
1. அதிக வியர்வையைத் தவிர்க்கிறது.
2. வியர்வையை உறிஞ்சுகிறது.
3. துர்நாற்றம் ஏற்படுத்தும் கிருமிகளை அழிக்கிறது.
4. சருமத்திற்கு இதமளிக்கிறது.
CASGLN-4-182 TAM

ராசி பலன் (டிசம்பர் '81)



மேஷம்

உங்களுடைய, தானாக எதையும் சிந்தித்துச் செய்யும் ஆற்றல் விரைவில் நல்ல நிலைமைக்குக் கொண்டு வரும். ஆனால் எதுவும் தனக்குத்தான் தெரியும் என்பது போலப் பேசுவதைக் கைவிடுங்கள். இம்மாதத்தின் இறுதிக்குள்ளேயே உங்களுடைய திறமைக்கான வாய்ப்பு காத்திருக்கிறது. உங்களைச் சுற்றியுள்ள நண்பர்களைப் பயன்படுத்திக் கொண்டால் நல்ல எதிர்காலம் நிச்சயமாக உண்டு.



ரிஷபம்

உங்களைவிட இளையவர்களின் நட்பு விரைவில் கிடைக்கவிருக்கிறது. அதை அலட்சியப் படுத்தாமல் போற்றினீர்களானால் தொழில் ரீதியாக முன்னேறுவீர்கள். இம்மாதத்தின் மூன்றாவது வாரத்தில் எதிர்பாராத பண வரவு இருக்கும். குழந்தைகளிடமிருந்து மகிழ்ச்சிகரமான செய்திகள் கிடைக்கும். ஒதுங்கி நிற்கும் உங்கள் சுபாவத்தை மாற்றிக் கொண்டாலே போதும், மேலும் நல்ல முன்னேற்றத்தை அடையலாம்.




மிதுனம்

முதல் இரண்டு வாரங்கள் கொஞ்சம் தொல்லைகள் நிறைந்த வாரமாக இருக்கும். மேலதிகாரிகளின் கோபத்துக்கோ, வீட்டில் சண்டை சச்சரவுக்கோ மனதைத் தளரவிடாதீர்கள். உங்களுடைய நிதானமான போக்கின் மூலம் இவற்றை வெற்றிகொண்டு முன்னேற வாய்ப்புண்டு. பண நிலைமை சகஜமாக இருக்கும்.



கடகம்

நீண்ட நாளாகத் தடைப்பட்டு வந்த சுப காரியம் ஒன்று இம்மாதம் நிச்சயமாகும். அதனால் இதுநாள்வரை குடும்பத்தில் இருந்த சச்சரவுகள் நீங்கி, சந்தோஷம் உண்டாகும். பண வரவு கஷ்டமானதாக இருந்தாலும், விரைவில் சமாளித்து விடுவீர்கள். கொடுக்கல் வாங்கல் விவகாரங்களில் வெற்றியே உண்டாகும். தெய்வ காரியங்கள் நிறைவேறும்.



சிம்மம்


உங்களுடைய குடும்பத்தாரின் எதிர்பாராத ஒத்துழைப்பினால், நீங்கள் ஒரு பெரும் வெற்றியை அடையப் போகிறீர்கள். இம்மாதத்தின் இரண்டாவது வாரத்தில் நடைபெறும் இந்நிகழ்ச்சியால் தடங்கல்களும் தயக்கங்களும் மாறி ஒளிமயமான எதிர்காலத்தைக் காண்பீர்கள்.



கன்னி

சொத்து விவகாரங்களில் சிக்கல்கள் அதிகமாகவும், வெற்றிக்குக் கொஞ்ச நாள் காத்

திருக்க வேண்டியதாகவும் இருக்கும். இம் மாதத்தின் இறுதிவரை அதற்கான வாய்ப்புக்கள் இல்லை. உங்களுடைய மனதினுள் இருக்கும் எண்ணங்களையும் வெளியிடாமல் இருப்பது நல்லது.



துலாம்

மிக நல்லவராக அவேவரின் கண்களுக்கும் இருப்பதால், உங்களை ஏமாளியாக்கும் சூழ்நிலை ஏற்படும். எனவே, உறவினர்களிடமும், நண்பர்களிடமும் கவனமாகப் பேசுவது நல்லது. பின்னர் வருந்திப் பயனில்லை. பண வரவுக்கு இதுவே தருணம். மற்றவற்றைத் தவிர்த்து உங்கள் எதிர்காலத்தைப் பாருங்கள்.



விருச்சிகம்

மீண்டும் உடல் நலம் குன்றுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு. முதல் மூன்று வாரங்கள் வரை உடல் நிலையைக் கவனித்துக் கொள்வது நல்லது. வெளியூர்ப் பயணங்களும் ஏற்பட வாய்ப்புண்டு. மனம் விட்டு குடும்பத்தினரிடம் பேசுவதால், அவர்கள் கொண்டுள்ள தவறான எண்ணங்களைப் போக்கலாம்.



தனுசு

புதிய வியாபார முயற்சிகளில் ஈடுபடும் போது கவனமாக இருங்கள். எதிர்பாராத தவறுகளும் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. உங்களுடைய வேலையில் மேலும் அதிகமான பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வதால் உடல் நலமும் பாதிக்கக் கூடும். தெய்வ நம்பிக்கையும், குறையாத தன்னம்பிக்கையுமே இனி உங்களை முன்னேற்றம் காணச் செய்யும்.




மகரம்

நீங்கள் தீர்மானித்து வைத்திருக்கும் செய்தியை வெளிப்படுத்த இம்மாத முதல் வாரமே சிறந்தது. வெற்றி உங்கள் பக்கமே உண்டாகும். எதிர்பார்த்த உறவினர்களின் வரவால் விரைவில் சுமுகநிலை உண்டாவதுடன், பண வரவும் ஏற்படும். புனிதப் பயணங்களும் ஏற்பட்டு, அமைதியான மாதமாக இம்மாதம் கழியும்.



கும்பம்

இம்மாதம் ஓரளவு உற்சாகம் குறைந்த மாதமாகவே இருக்கும். எதிர்பார்த்தபடி உங்களுடைய இளையவர்களின் வெற்றி உங்களைப் பாதிக்கக் கூடும். அவர்களிடமிருந்து அதிகம் எதிர்பாராமல் இருப்பது நல்லது. விடாமுயற்சியாலும் தன்னம்பிக்கையாலும் மட்டுமே இனி நிலைமை சீர் திருந்த இடம் உண்டு.



மீனம்

சொந்தமான தொழில் வைத்திருப்பவர்களுக்கு இம்மாதம் மிகுந்த சுமுகமான மாதமாக இருக்கும். அரசாங்கத்திலும் சுலபமாகக் காரியங்கள் முடியும். திட்டமிட்டபடி வேலைகள் நடந்து கொண்டிருக்கும். பொழுது போக்குக்கோ, குடும்பத்துக்கோ நேரம் செலவு செய்ய இருக்காது. பண விவகாரம் சாதாரணமாக இருக்கும்.

பரிசு பெற்ற சமையல் குறிப்புக்கள்



முதல் பரிசு

சைனீஸ் நட் ரைஸ்

தேவையான பொருட்கள்:

வறுக்காத வேர்க்கடலை அரை லிட்டர்
பிரியாணி அரிசி அரை லிட்டர்.
சோயா பீன்ஸ் கால் லிட்டர்
பச்சைப் பட்டாணி 150 மி.லி. (உரித்தது)
டால்டா 50 மி.லி.
கறிவேப்பிலை சிறிது
வறுத்த வேர்க்கடலை 75 மி.லி.
உப்பு தேவையான அளவு
மஞ்சள் பொடி ஒரு ஸ்பூன்
உடைத்த மிளகு ஒரு ஸ்பூன்
ரொட்டி அரை
கண்டஸ்டு பால் பவுடர் ஐந்து ஸ்பூன்.
பெரிய வெங்காயம் மூன்று
எலுமிச்சம் பழம் ஒன்று
தேங்காய் எஸ்ஸென்ஸ் இரண்டு ஸ்பூன்
மிளகாய் ஐந்து.

மசாலாவுக்குத் தேவையான சாமான்கள்:

(இவற்றை நைஸாக அரைத்துக் கொள்ள வேண்டும்.)

மிளகாய் ஐந்து
பூண்டு ஒன்று
கொத்தமல்லி சிறிது
புதினா சிறிதளவு
பட்டை, சோம்பு, கசகசா சிறிதளவு
சீரகம் ஒரு ஸ்பூன்.

செய்முறை:

முதல் நாள் இரவே சோயா பீன்ஸ், வேர்க்கடலை இவற்றை ஊறவைக்க வேண்டும். மறுநாள் இரண்டையும் மிதமான வெந்நீர் சேர்த்து மையாக அரைத்துப் பால் எடுத்து வடிகட்டிக் கொள்ளவும். இந்தப் பால் ஒன்றேகால் லிட்டர் இருக்க வேண்டும். மசாலாச் சாமான்களை நைசாக அரைத்துப் பாலில் கலக்க வேண்டும். மஞ்சள் பொடி, உப்பு, பால் பவுடர், தேங்காய் எசென்ஸ், இவற்றையும் பாலுடன் சேர்க்க வேண்டும். வாணலியை அடுப்பில் வைத்து டால்டாவை ஊற்றி அது காய்ந்ததும் ரொட்டியைச் சிறு துண்டுகளாக்கி பொரித்துக் கொள்ள வேண்டும். மீதமுள்ள டால்டாவில் உடைத்த மிளகு, கருவேப்பிலை, பச்சைப் பட்டாணி, வறுத்த வேர்க்கடலை, வெங்காயம், மிளகாய் (இவற்றை நீளவாக்கில் அரிந்து போட வேண்டும்.) இவற்றைப் போட்டுச் சிவக்க வறுத்து பாலில் சேர்க்கவும். இதை அடுப்பில் வைத்துக் கொதி வந்ததும் அரிசியைக் களைந்து நீரில்லாமல் போட வேண்டும். இது வெந்து பதமானதும் ஒரு தட்டில் தணலைக் கொட்டி மூடி பத்து நிமிடம் 'தம்' போடவும். பின் இதை இறக்கி எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து அந்தச் சாற்றைக் கலந்து நன்றாகப் புரட்டி விடவும். சாறு நன்றாகச் சேர்ந்ததும் ரொட்டித் துண்டுகளைக் கலந்து பரிமாறவும். இதைக் குக்கரிலும் செய்யலாம். இது சத்துள்ள உணவாகும்.

இதற்குத் தயிர்ப் பச்சடி தொட்டுக் கொள்ள வைக்கலாம்.

கோகுலா

இரண்டாம் பரிசு

வேர்க்கடலை கோப்தா

தேவையான பொருட்கள் :

வேர்க்கடலை இரண்டு ஆழாக்கு
பெரிய வெங்காயம் மூன்று
தேங்காய் அரை மூடி
பச்சை மிளகாய் ஏழு அல்லது எட்டு
எலுமிச்சம் பழம் அரை மூடி
உப்பு தேவையான அளவு
பொரிப்பதற்கு எண்ணெய்
தாளிக்க கடுகு ஒரு டீஸ்பூன்
உளுத்தம்பருப்பு ஒரு டீஸ்பூன்
கறிவேப்பிலை, கொத்தமல்லி கொஞ்சம்
பெருங்காயம் ஒரு சிட்டிகை
மேல் மாவு தயாரிக்க:
கடலை மாவு ஒன்றரை ஆழாக்கு

அரிசி மாவு அரை அழாக்கு
காரப்பொடி ஒன்றேகால் டீஸ்பூன்
உப்பு கொஞ்சம், சமையல் சோடா சிறிதளவு

செய்முறை:

வேர்க்கடலையை முதல் நாள் இரவு ஊற வைக்கவும். மறுநாள் அந்த நீரை வடிகட்டி பின் புது ஜலம் விட்டு 10 நிமிடம் ஊற வைத்து அதனுடன் உப்பு, மிளகாய், பெருங்காயம் சேர்த்து கெட்டியான விழுதாக அரைத்து வைத்துக் கொள்ளவும். தேங்காயைத் துருவி வைத்துக் கொள்ளவும். பொடிப் பொடியாக வெங்காயத்தை நறுக்கிக் கொண்டு, வெங்காயம், தேங்காய்த் துருவல் கொத்தமல்லி, கருவேப்பிலை ஆகியவற்றை வேர்க்கடலை அரைத்த விழுதுடன் கலக்கவும். கடுகு, உளுத்தம் பருப்பைத் தாளித்துக் கொட்டி அரை மூடி எலுமிச்சம் பழத்தைப் பிழியவும்.

மேல் மாவுக்குச் சொன்ன சாமான்களைக் கெட்டியாக அரைத்துக் கொள்ளவும். வாணலியில் எண்ணெயை வைத்துஎண்ணெய் காய்ந்தவுடன் வேர்க்கடலை விழுதினைச் சிறிய உருண்டைகளாகச் செய்து வைத்துக்கொள்ளவும். அதனை மாவில் போட்டு நாலு பக்கமும் புரட்டிக் கொண்டு எண்ணெயில் போட்டு சிவக்க வேகவிட்டு எடுக்கவும். உடலுக்கு நன்மை பயக்கும் மாலை நேர சிற்றுண்டி.

உஷாமோகன்

மூன்றும் பரிசு

கரகரப்ரியா

தேவையான பொருட்கள் :

நிலக்கடலை (முழுப் பருப்பு) கால் கிலோ
மிளகாய் வற்றல் 15-20
இஞ்சி: ஒரு அங்குல நீளத் துண்டு
பெருஞ்சீரகம் அரைத் தேக்கரண்டி
உப்பு ஒரு மேஜைக் கரண்டி (தேவைக்கேற்ப)
கறிவேப்பிலைக் கொத்து (15 பைசா)
கடலை மாவு ஒரு சிட்டிகை
ஓ.கே. ஆயில் அல்லது கடலை எண்ணெய்

செய்முறை :

முதலில் இஞ்சி, பெருஞ்சீரகம், உப்பு, கறிவேப்பிலை, மிளகாய் வற்றல் இவைகளை அம்மியில் வைத்து நைஸாக அரைத்து வைத்துக்கொள்ளவும். அடுப்பில் வாணலியை வைத்து எண்ணெய் விடாமல்நிலக் கடலையை வெது வெதுப்பாக சூடாக்கிக் கொண்டு அரைத்து வைத்துள்ள விழுதில் கொட்டி அத்துடன் மஞ்சள் பொடி, கடலை மாவு ஆகியவற்றைச் சேர்த்துச் சிறிதளவு தண்ணீர் சேர்த்து பிசறவும். கடலையின் மேல் மசாலா, கடலை மாவு ஆகியவை நன்றாக ஒட்டிக் கொள்ள வேண்டும். ஒரு பெரிய பகோடாவைப் போல் உதிரி உதிரியாகப் போட்டுக் கொள்ளவும். சிறிது உலர்ந்த பின் அடுப்பில் வாணலியை வைத்து அதில் கடலை எண்ணெய் விட்டு அது காய்ந்தவுடன் உதிர்த்த மசாலா சேர்ந்த கடலையைக் கொஞ்சம்கொஞ்சமாகஎண்ணெயில் போட்டு பொன் நிறமாக வறுத்து எடுக்க வேண்டும். இவ்வாறு கடலை எல்லாவற்றையும் வறுத்து எடுக்க வேண்டும். இது மிகவும் கரகரப்பாகவும் ருசியாகவும் இருக்கும். இதனை மூடி காற்றுப் புகாத டப்பாவில் போட்டு வைத்தால் நீண்ட நாட்களுக்குக் கரகரப்பாக இருக்கும்.

சு. மீனாட்சி

ஆறுதல் பரிசு

சிம்பிளி

தேவையான பொருட்கள்:


வறுத்த வேர்க்கடலை 300 கிராம்
வறுத்தஎள்ளு 100 கிராம்
அரை மூடி துருவிய கொப்பரைத் தேங்காய்
கேழ்வரகு மாவு 200 கிராம்
வெல்லம் அரை கிலோ
ஏலக்காய் எட்டு

செய்முறை:

கேழ்வரகு மாவை ஒரு சிட்டிகை உப்புச் சேர்த்துத் தண்ணீர் விட்டு கெட்டியாகப் பிசைந்து கொள்ளவும். இதைச் சிறு சப்பாத்திகள் போல் தட்டிக் கொண்டு, தோசை கல்லில் போட்டு, மாவு வெந்து இரண்டு பக்கமும் பொன்னிறமாக சுட்டு எடுக்கவும்.

உரலைச் சுத்தம் செய்து சுட்ட கேழ்வரகு அடைகளை பிட்டுப் போட்டு அதனுடன் வறுத்த தோலுரித்த வேர்க்கடலை, வறுத்த எள்ளு, கொப்பரைத் தேங்காய், ஏலக்காய் முதலியவற்றைச் சேர்த்து இடிக்கவும். எல்லாம் சேர்ந்து தூளானவுடன் வெல்லத்தைப் போட்டு நன்றாக இடிக்கவும். நல்ல வாசனையுடன் கலந்து வரும் இதைச் சிறு உருண்டைகளாகச் செய்து எடுத்து புசிக்கவும். சுவையாக இருக்கும். உடம்புக்கு வலு கொடுக்கக் கூடியது. செலவும் குறைந்தது.

திருமதி லஷ்மணன்



ஆறுதல் பரிசு

வேர்க்கடலை போண்டா

தேவையான பொருட்கள்:

வறுத்த வேர்க்கடலை ஒரு கப்
முந்திரிப் பருப்பு அரை கப்
ரொட்டித் துண்டுகள் ஒன்றரைகப்
பால் அரை கப்
வெங்காயம் ஒன்று
பச்சை மிளகாய் மூன்று
இஞ்சி ஒரு துண்டு
சிறிது கறிவேப்பிலை
உப்பு தேவையான அளவு
எண்ணெய் தேவையான அளவு

செய்முறை:

வேர்க்கடலை, முந்திரிப் பருப்பு, வெங்காயத் துண்டுகள், இஞ்சித் துண்டு அவற்றைக் கல்லில் போட்டு நைஸாக அரைத்து எடுக்கவும். அதில் பச்சை மிளகாய் நறுக்கி போடவும். அத்துடன் கறிவேப்பிலையைப் போடவும். பிறகு பால் ஊற்றி நன்கு கலக்கவும். கடைசியாக உப்புப் போட்டுக் கிளறவும். இந்தக் கலவையைக் கொதிக்கும் எண்ணெயில் போண்டா போல் சுட்டு நன்கு சிவந்ததும் எடுக்கவும்.

திருமதி சரஸ்வதி வெங்கடேசன்

ஆறுதல் பரிசு

கிரௌண்ட் நட் கேக்

தேவையான பொருட்கள்:

முற்றிய பச்சை வேர்க்கடலைப் பருப்பு ஒரு கப்
முந்திரிப் பருப்பு 50 கிராம்
திராட்சைப் பழம் உலர்ந்தது 50 கிராம்
ரோஸ் எசென்ஸ் கால் ஸ்பூன்
அஸ்கா அரை கிலோ
தேங்காய் ஒரு மூடி
கேசரி பவுடர் ஒரு டீஸ்பூன்
ஏலக்காய் 8

செய்முறை:

முதலில் ஏலக்காயைத் தோல் உரித்து நன்றாகப் பொடி செய்து கொள்ள வேண்டும். வேர்க்கடலைப் பருப்பை ஒரு மணி நேரம் நீரில் ஊறவைக்க வேண்டும். தேங்காயைத் துருவிக் கொள்ள வேண்டும். முந்திரிப் பருப்பு பாதியுடன், தேங்காய்த் துருவலையும் வறுத்த வேர்க் கடலைப் பருப்பையும் சேர்த்து நன்றாக மை போல அரைத்து எடுக்க வேண்டும். மீதி பாதி முந்திரிப் பருப்பையும், திராட்சைப் பழத்தையும் சிறிது டால்டாவில் நன்றாக வறுத்துக் கொள்ளவும். ஒரு அடுப்பில் சுயம் பூசிய அடிக் கனமுள்ள பாத்திரத்தை வைத்துச் சிறிது நீர் ஊற்றி, அஸ்காவை அதில் போட்டுக் கரைய விட வேண்டும். கம்பிப் பாகு வந்தவுடன் (சிறிது பாகைத் தண்ணீரில் விட்டால் பாகு கரையாமல் இருக்கும்.) அரைத்து வைத்த விழுதை போட்டு நன்றாக விடாமல் கிண்ட வேண்டும். மற்றொரு அடுப்பில் டால்டாவைக் கொதிக்க வைக்க வேண்டும். விழுதை கிளறிக்கொண்டு இருக்கும்போது அதில் கொதிக்க வைத்த டால்டாவை விட்டுக் கொண்டே அடிப் பிடிக்காமல் நன்கு கிளற வேண்டும். பாத்திரத்தில் ஒட்டாமல் சுருண்டு வரும்போது, எஸன்ஸை விட வேண்டும். அத்துடன், ஏலக்காய்ப் பொடி, வறுத்த முந்திரி, திராட்சைப் பழம் முதலியவற்றைத் தூவ வேண்டும். நெய் அல்லது டால்டா தடவிய தட்டில் கிளறிய கேக் விழுதைக் கொட்டித் துண்டுகள் போடவும். அழகிய கலர் வர சிறிது கேசரிப் பவுடர் சேர்க்கலாம்.

ஆறிய பிறகு துண்டுகளை எடுத்துச் சாப்பிடலாம். விருந்தினர் வந்தால் சுலபமாக இந்தக் கேக்கைச் செய்யலாம்.

-குமாரி ஆனந்தி கணேசன்

ஆறுதல் பரிசு

வேர்க்கடலைப் பொடி

தேவையான பொருட்கள்:

வேர்க்கடலை ஒரு ஆழாக்கு
காய்ந்த கொப்பரை கால் மூடி
மிளகாய் வற்றல் 15
பெருங்காயம் ஒரு சிறிய துண்டு
வேண்டிய அளவு உப்பு

செய்முறை:

வேர்க்கடலையை எண்ணெய் விடாமல் வாணலியில் வறுத்துக் கொள்ள வேண்டும். மிளகாய், பெருங்காயத்தையும் எண்ணெய் விட்டு நன்றாக வறுத்துக் கொள்ள வேண்டும். கடலை நன்றாக சூடு ஆறிய பிறகு கையால் தேய்த்துப் புடைத்தால் தோலி நன்றாக விட்டு விடும். கல்லுரலில் முதலில் கொப்பரை, மிளகாய், பெருங்காயம் மூன்றையும் சேர்த்துப் பூப்போல இடித்துக் கொண்டு அத்துடன் கடலை, உப்பையும் போட்டு நன்றாக இடித்துக் கலந்துவிட வேண்டும். இது ரொம்பவும் ருசியாகவும் இருக்கும். இட்லி, தோசைக்கும் உபயோகப்படும். சாதத்தில் கலந்து சாப்பிட நன்றாக இருக்கும்.

-சரோஜா ராகவன்

எவ்வகை உணவாயினும்
அதனை முழுமையாக்குவது
டி. எஸ். ஆர். ஊறுகாய்களே!


புதிய
கிடாரங்காய்
ஊறுகாய்




டி.எஸ்.ஆர்

டி. எஸ். ஆர். & கோ
"கோகுல் கார்டன்ஸ்"
கும்பகோணம்

CRITERION




1



2

மேஜை விரிப்பு



தேவையான பொருட்கள்:

1. பின்னி கேஸ்மெண்ட் துணி:- 1 மீட்டர் (டார்க் ப்ளு அல்லது டார்க்கலர் எதுவானாலும் பரவாயில்லை)

2. 1 செ.மீ. அகலமுள்ள வெள்ளை நாடாகருள் - 2.

3. Single Thread வெள்ளை கலர் 4. உருண்டை (நீள லைனில் உள்ளது)

4. துணி தைக்கும் வெள்ளை நூல்: 1 கண்டு (கோட்ஸ் No60 (Counts)


5. சாதா தையல் ஊசி ஒன்று; நோட் புக் தைக்கும் ஊசி ஒன்று. கொடுக்கப்பட்டுள்ள டிசைனை துணியின் நான்கு பக்கங்களிலும் வரைந்து கொள்ளவும். பூ. இலை உள்ள இடங்களில் படம் 1ல் காட்டியுள்ளபடி நோட்புக் தைக்கும் ஊசியில் வெள்ளை நாடாவை கோர்த்து தைத்து விடவும். அதாவது பூவரைந்துள்ள கோட்டின் ஆரம்பத்தில் குத்தி மேலே இழுத்து, கோட்டின்






அடுத்த முனையில் மறுபடியும் ஊசியைக் குத்தி மேலே கொண்டு செல்லவும்.

படம் 2ல் உள்ளது போல் நாடாவை இதழ் போல் விரித்து சுற்றிலும் வெள்ளை நூலால் ஹெம் செய்து இதழ் போல் ஆக்கவும். இதே போல் எல்லா பூக்களையும் இலைகளையும் செய்து முடிக்கவும். கொடிகளை வெள்ளை கலர் Single Thread ஆல் காம்பு தையல் தைக்கவும். பெயின்டிங் தெரிந்தவர்கள் தங்கள் இஷ்டம் போல் பூக்களுக்கும், இலைகளுக்கும் பெயின்டிங் செய்தால் மிகவும் எடுப்பாக இருக்கும். டேபிள் கிளாத் சுற்றிலும் இழை பிரித்து ஹெம் செய்யவும்.





பத்மா ராமநாதன்

நச்சரிடம் சொல்லி வட்டப் பலகையை கீழ்கண்டமுறையில் செய்து வாங்கிக்கொள்ள வேண்டும். பலகையின் நடுவில் பல்பின் ஒயர் தொங்க விட ஒரு அங்குல விட்டத்துக்கு பெரிய துவாரம். நாலா பக்கமும் கம்பி போட்டு விளக்குக் கூட்டை அழுத்தமாக வயரில் கட்டத் துவாரங்கள். நடுவில் உள்ள பலகையை படம் 2ல் கொடுக்கப்பட்டபடி மூன்றாகப் பிரித்து உள் வட்டத்தில் ஆறு துவாரங்கள், நடு வட்டத்தில் 12 துவாரங்கள், வெளிப் பகுதி மூன்றாவது வட்டத்தில் 24 துவாரங்கள் செய்து கொள்ளவும். துவாரங்கள் சம சதுரத்தில் இருப்பதோடு நூல் நன்றாக நுழையும்படி அளவோடு இருக்க வேண்டும். பலகை மிகவும் பழையதாக இருந்தால் வளையல் கலரிலேயே பெயிண்ட் வாங்கி அடித்துக் கொள்ளவும்.


காக இருக்கும். இவ்விதம் எல்லா துணி வட்டங்கள், வளையல்களையும் உபயோகித்து சுமார் 11 டஜன் டமார வடிவங்களைத் தயாரிக்கவும்.


பிறகு டாட்டிங் நூலில் (அல்லது வேறு அழுத்தமான நூல்) ஊசியைக் கோத்துக் கொண்டு டமார வடிவத்தின் நடுவில் இருக்கும் துணியில் வளை ஓரமாக ஊசி நூலால் அழுத்தித் தைத்து (தொங்க விடும்படி) ஒரு குழாய் மணியை அதன் மேல் கோர்த்து பிறகு மற்றும் ஒரு டமார வடிவத்தைத் தைக்கவும்.

இவ்விதம் ஒரு வட்டம் நடுவில் ஒரு குழாய் மணி, பிறகு ஒரு வட்டம் முடிவில் 3 குழாய் மணி என்று 24 வெளிப்புற துவாரங்களுக்கும் 24 நீட்டமான தொங்கல்களை தயாரிக்க வேண்டும். (படம் 3ல் இருப்பது போல்)

வளைகளாலான விளக்குக் கூடு

படம்-2





படம்-1


பிறகு படம் 1ல் காட்டியுள்ளபடி துணியாலான வட்டங்களைத் தயாரிக்க வேண்டும். ஒரு மீட்டர் துணியையும் நான்காக மடித்து நன்றாக பிரஸ் செய்து கொள்ள வேண்டும். பிறகு வாங்கிய வளையல்களில் ஒன்றை அளவுக்காக உபயோகித்துத் துணியின் மேல் வைத்துப் பென்சிலால் வளையின் வெளி வட்டத்தில் அழுத்தி வரையவும். இவ்விதம் மடித்த துணியில் நெருக்கி எவ்வளவு வட்டம் வரைய முடியுமோ வரைந்து கொண்டு கூரான கத்திரியால் பிசிறில்லாமல் வட்டங்களைக் கட்பண்ணி எடுக்கவும். துணி நாலாக மடிப்பதால் ஒரே சமயத்தில் நான்கு மடங்கு வட்டங்கள் கிடைக்கும். பிறகு இரண்டு வளையல்களை எடுத்து, மேல் பகுதியில் தாராளமாக பெவிகோலைத் தடவி, நடுவில் கட் பண்ணிய ஒரு வட்டத் துணியைவைத்து இரண்டு வளையல்களையும் அழுத்தி ஒட்ட வேண்டும். இது டமாரம் வடிவத்தில் அழ


நூலை ஒவ்வொரு தடவையும் தாராளமாக விட்டுக் கட்பண்ண வேண்டும்.

அடுத்து நடு வட்டத்தில் உள்ள துவாரங்களில் தொங்கவிட 4 டமார வடிவ வட்டங்கள் 6 குழாய் மணிகள் என்று படம் 3-ல் உள்ளபடி தயாரிக்கவும். உள் வட்ட ஆறு துவாரங்களுக்கு 6 வட்டங்கள் 8 குழாய் மணிகள் கோத்துக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு தொங்கலின் கீழ் வட்டத்தின் கீழ்ப் பகுதியில் ஒரு பிளாஸ்டிக் பெல் அழகாகக் கோத்துத் தொங்க விடவும். பிறகு வரிசையாக தயாரிக்கப்பட்ட பலகையில் உள் வட்டத்திலிருந்து ஆரம்பித்து அந்தந்த வட்டத்திற்குத் தயாரித்த தொங்கல்களை வட்டப் பலகையில் துவாரத்தில் கோர்த்து பின் பக்கம் கொண்டுவந்து இழுத்து கீழே விழா வண்ணம் அழுத்தி முடிய வேண்டும்.

இவ்விதம் மூன்று வட்டத்தில் உள்ள துவாரங்களையும் தொங்க விட்டு முடித்த பிறகு





படம் -4

நான்கு மூலையில் உள்ள துவாரங்களிலும் கனமான கம்பியைக் கோர்த்து வளைத்து பல்ப் பொருத்தத் தொங்கும் ஒயரில் குறடின் உதவி கொண்டு இழுத்து முடித்துவிட வேண்டும். விளக்குக் கூட்டை ஒயரில் தொங்க விட்ட பிறகு பல்பைப் பொருத்திக்கொள்ளலாம்.

இவ்விதம் செய்து முடிக்கப்பட்ட விளக்குக் கூடு படம் 4ல் காண்பிக்கப்பட்டிருக்கிறது. இது இரவில் விளக்கின் ஊடே பளபளப்பாக மிக அழகாகத் தோன்றும். நச்சு வேலைபோல் தோன்றினாலும் ஒரு வாரத்தில் செய்து முடித்து விடலாம். செய்முறை எளிதாக இருப்பதால் டமார வடிவங்களைத் தயாரிக்க, குழல் மணிகளைக் கோக்க வீட்டுக் குழந்தைகளும் உதவலாம். இதைச் செய்து முடிக்க சுமார் 60 முதல் 70 ரூபாய்வரை செலவாகும். இதையே சின்ன அளவில் வளையலின் எண்ணிக்கை, பலகையின் அளவைக் குறைத்தும் செய்து பார்க்கலாம்.

-மாதங்கி சுந்தரராஜன்

****

குழந்தை பிறக்கும் போதே இசையை விரும்பிக் கேட்கும் காதுகளுடன் பிறக்கின்றன. தாயின் வயிற்றில் இருக்கும் போதே தாயின் இருதயத் துடிப்பின் ஓசையையும், தன்னைச் சுற்றி ஓடும் இரத்த ஓட்ட ஒலியையும் விரும்பிக் கேட்கப் பழகி இருக்கின்றன. இந்த ஓசையைப் பதிவு செய்து மெல்லியதாக ஒலிக்கச் செய்தால் உணவூட்ட அதை எழுப்பவும் முடியும் என்று ஒரு 'சயின்ஸ் ஜேர்னல்' கூறுகிறது.

ஏ. வி. தேவன்






புதுமைக் கோலங்கள்



நீர் மேல் கோலம்

அண்மையில் தமிழ், சமஸ்கிருத பிற இந்திய மொழிகளின் ஆராய்ச்சி நிறுவனத்தில் கோலக் கண் காட்சி நடை பெற்றது. இதனை நடத்தியவர் இத் துறையில் பல ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்து வரும் சாமி தம்பிராக அவர்கள்.

உலகின் வேறு எந்தப் பாகத்திலும் காணப்படாத ஒரு கலை, இந்தக் கோலம் போடும் கலையாகும். காலையில் எழுந்த வுடன் கோலம் போடாத பெண் உண்டா?



1,06,625 புள்ளிகளாலான ஒரே கோலத்தைக்கூட போட்டிருக்கிறார்கள். இக்கண் காட்சியில் இதைப் போட்டவர் திருமதி லீலா வெங்கடராமன்.


'முத்திடித்து மாக்குழித்து-கண்ணே
முத்தமெல்லாம் கோலமிட்டு...'


என்று பெரிய அளவில் நம் பெண்கள் வளர்த்த கலை இன்று குறுகிவிட்டது. இப்படி நம் பெண்களிடம் மறைந்த கலைகள் எத்தனையோ?


கொஞ்சம் சிந்தியுங்கள் பெண்களே!


நீர் இடைக் கோலம்.


தஞ்சாவூர் சித்திரம்
நீர் மேல் ரங்கோலி


உருக்கைக் கோலம்




வீணைக் கோலம்

ஹோமியோபதி வைத்தியம்

அடிக்கடி பேதி மருந்து சாப்பிடலாமா?

குழந்தைப் பருவத்தில் சில மாதங்களுக்கு ஒரு முறை பேதி மருந்து கொடுக்க வேண்டியது அவசியம். இப்போதுதான் மலச் சிக்கல் ஏற்படாமல் இருக்கும் என்ற ஓர் எண்ணம் பொதுவாக இருக்கிறது. இது உண்மைதானு — என்று கேட்டால், இல்லை என்று அழுத்தம் திருத்தமாய்ச் சொல்லலாம். மலச்சிக்கலுக்குப் பேதி மருந்து கொடுப்பதே சரியல்ல என்பது ஹோமியோபதி தத்துவங்களில் ஒன்று.

மலச்சிக்கலுக்கு மருத்துவம் பார்ப்பதில் மற்ற முறைகளுக்கும் ஹோமியோபதிமுறைக்கும் உள்ள அடிப்படை வித்தியாசமே இதுவாகும். மலச் சிக்கல் என்றுலே குடல் வாயில் ஏதோ இடையூறு இருப்பது போலவும், பேதி மருந்து மூலமாக அந்த அடைப்பை நீக்கிவிட்டால், கோளாறு சரியாகிவிடும் என்பது போலவும் மற்ற சில முறைகள் கருதுகின்றன. பேதி மருந்து கொடுத்ததும், உடனடியாக வேகமாக மலப் பெருக்கு வெளிப்படுவது உண்மைதான். ஆனுல் இதன் விளைவு என்ன? பேதி மருந்து சாப்பிடுவதே பழக்கமாகி, பேதி மருந்து சாப்பிடாவிட்டால் மலக் கழிவு ஏற்படாது என்ற நிலை அல்லவா ஏற்பட்டுவிடும்?


இதனுல்தான் ஹோமியோபதியில் மலச் சிக்கலுக்கான காரணம் என்னவோ அதை நீக்குவதற்கு மருந்து கொடுக்கிறோம். மூல காரணம் அகற்றப்பட்டவுடன் மலச் சிக்கலும் தீர்கிறது.

மலச் சிக்கலுக்கு என்ன காரணம்? குழந்தைகளுக்கு தாய்ப் பால் அளிக்காமல், செயற்கை உணவுகளை (டப்பா உணவு) அளிப்பதாலோ, தாயாரின் உணவு முறைகளில் உள்ள கோளாறினுலோ மலச் சிக்கல் ஏற்படுகிறது. கண்ணு பின்னுவென்ற உணவுப் பழக்கங்கள், கண்ட நேரத்தில் உணவு கொள்வது, காப்பி, டீ போன்றவைகளை அடிக்கடி அருந்துவது, மது குடிப்பது, அளவுக்கு அதிகமாகத் தூங்குவது, மலம் கழிக்க வேண்டும் என்ற உந்துதல் ஏற்பட்டும், அதை அடக்கி விடுவது, அடிக்கடி கண்ட கண்ட பேதி மருந்துகளைச் சாப்பிடுவது போன்ற காரணங்களினுல் பெரியவர்களுக்கு மலச்சிக்கல் ஏற்படுகிறது.

மூலகாரணத்தையே ஹோமியோபதிநீக்கி விடுவதால் மலச்சிக்கல் நீங்குவது மட்டும் அல்லாமல், பொதுவாக உடல் நலமும் பெருகுகிறது. மலச் சிக்கலுக்கு என்ன மருந்து சாப்பிடலாம்?

பேதி மருந்துகளை அடிக்கடி சாப்பிட்டதனுல் ஏற்பட்ட மலச் சிக்கலைப் போக்கச் சாப்பிட வேண்டிய மருந்து Nux Vomica.

மலச் சிக்கலோடு குமட்டலும், சோர்வும் காலையில் எழும்போதே இருத்தல், வயிற்றில் ஒரு கனமான உணர்வு, தலை பூராவும் வலி, சரிவரத் தூங்க முடியாமை ஆகியவைகளுக்கும் இந்த மருந்தைத் தரலாம். மது குடிப்பதால் ஏற்படும் மலச் சிக்கல், காப்பிப் பழக்கத்தை நிறுத்தியதால் ஏற்படும் மலச் சிக்கல், கண்ட கண்ட உணவையோ, அளவுக்கதிகமாகவோ சாப்பிட்டதால் ஏற்படும் மலச் சிக்கல், எப்போதும் படித்துக் கொண்டே இருப்பதால் ஏற்படும் மலச் சிக்கல் ஆகியவைகளுக்கும் இதுதான் மருந்து.



வயிற்றுப் போக்கை அடுத்து ஏற்படும் மலச் சிக்கல், அல்லது பொதுவாக மனச் சோர்வுடன் கூடிய மலச் சிக்கல் ஆகியவைகளுக்கும் Nux Vomica கொடுக்க வேண்டும்.

போதுமான அளவு பலன் கொடுக்கவில்லை என்றுல் அடுத்து Bryunia என்ற மருந்து பலன் அளிக்கும்.

குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் ஆகியோருடைய மலச்சிக்கலுக்கு சிறந்த மருந்து Cycopodium தான்.

மூல வியாதியோடு கூடிய மலச்சிக்கலுக்கு Sulphur என்ற மருந்தும் Nux Vomica என்ற மருந்தும் அருந்துணை செய்யும்.

மிகச் சிரமப்பட்டு சிறிது சிறிதே மலம் கழிக்க முடிகிறது. அதுவும் ஆட்டுப் புழுக்கை போல விழுகிறது என்றுல் அந்த

எம்.வி.எல்.நரசிம்மன்


நிலையில் கொடுக்க வேண்டிய மருந்து Alumina.

நீண்ட பயணத்தின்போதோ அதை அடுத்தோ மலச்சிக்கல் ஏற்பட வாய்ப்பு உண்டு. அந்த நேரத்தில் Platina என்ற மருந்து நிவாரணம் கொடுக்கும்.

பலநாள் மலமே கழிக்காமல் தவிப்பவர்கள் உண்டு. அப்படிச் சிறிதளவு கழித்தாலும், மலத் துவாரத்தில் கடுமையான வலி ஏற்படும். அப்படிப்பட்ட நிலையில் துணை செய்யக் கூடியது Graphites.

மலச் சிக்கலைத் தவிர்க்க எளிமையான வழி ஒன்று உண்டு. இரவு படுக்கச் செல்லு முன் ஒரு டம்ளர் குளிர்ந்த நீர் குடித்துவிட்டுப் படுத்துக் கொள்ளுங்கள். அதே போல காலையில் எழுந்ததும் ஒரு டம்ளர் குளிர்ந்த நீர் அருந்துங்கள். மலச்சிக்கல் இன்றி அன்றாடம் மலம் பிரியும்.

கொக்கிக் காதணி



தேவை: ப்ரா கொக்கிகள் 14. (இரண்டு காதணிக்கு.)

ப்ரா ஜாக்கெட் இவைகளில் பயன் படுத்தப்படும் கொக்கியின் பக்கத் தோற்றம். (காதின் ஓட்டையில் மாட்ட வேண்டிய இடம்.)

கொக்கியின் நேர் தோற்றம்.

ஒரு கொக்கியை எடுத்துக் கொண்டு படத்தில் உள்ளது போல் விரித்துக் கொள்ளவும்.

விரிக்கப்பட்ட கண்ணில், ஒவ்வொரு கொக்கியை மாட்டவும்.

காதில் மாட்டிக் கொள்ளும் கொக்கி.

இப்போது நான்கு கண்ணிலும் (ஓட்டை) நான்கு கொக்கிகளை மாட்டிவிடவும். (கொக்கிக் காதணியின் முழுத் தோற்றம்)

பெண் குழந்தைகள் முதல், கல்லூரிப் பெண்கள்வரை அணியலாம். எளிமையானது. மலிவானது. அழகானது. மற்ற பிளாஸ்டிக் காதணிகளைப் போல் காதைப் புண்ணாக்காது. தோல் பாதிக்காது. எங்கள் குழந்தைகளின் காதில் மாட்டியுள்ளதைப் பார்த்துப் பாராட்டாதவர் வெகு குறைவு.

—மல்லிகா ராஜேந்திரன்

மீண்டும் ஒரு வாழ்வு

•குறுநாவல்•



மதி குமாரசாமி

வெளுத்துப்போன ரோஜாப்பூவின் நிறம், கருகருவென்று முரட்டுத்தனமாக அலை-பாய்ந்து நீண்டு தொங்கும் அடர்த்தியான கூந்தல், குளம் போன்ற நீரோட்டமுள்ள அகன்ற குளிர்ச்சியானகண்கள், சின்ன மூக்கு, உதடு என்று மிகவும் கவர்ச்சியான தோற்றமுடையவள் ஜோதி.

அவள் பிறந்து வளர்ந்த விளச்சனூர்க் கிராமத்திலேயே சில சமயங்களில் ஜோதி, தன் நெருக்கமான சிநேகிதி மோகனுவுடன் ஆற்றுக்குக் குளிக்கப் போவதுண்டு. அப்போதெல்லாம், அக்கம் பக்கத்தில் குளித்துக்கொண்டிருக்கும் பெண்கள், தவிர்க்க முயன்றும், முடியாமல், அனிச்சையாய் இவளையே பார்ப்பார்கள்.

'இப்படியொரு நிறமா! ஒரு பெண்ணுக்கு இவ்வளவு அதிகமாகக்கூட தலைமுடி இருக்க முடியுமா!'

உற்று உற்றுப் பார்ப்பார்கள். மின்னல் ஒன்று கொஞ்சம் கரிய மேகத்துடன் புறப்பட்டு வந்து மௌனமாக நீராடுவதைப்-போலக் குளித்துக் கொண்டிருக்கும் ஜோதியைக் கண்டு பிரமித்துப் போவார்கள்.

இந்த அழகிய தோற்றம்தான் ஜோதியை ஜெகதீசன் மனைவியாக்கியது. ஜெகதீசன் மூலமாக வாழ்க்கையின் வசந்தங்களைக் காண வைத்தது. வானில் தேவதையாய்ப் பறக்க வைத்தது. வறுமையைப் போக்கியது. வசதியாக வாழ வைத்தது.

இதெல்லாம் பொய்யாய், பழங் கதையாய், இலைகள் காய்ந்து உதிர்ந்து போன மலர்க் காம்பாய் ஆகிப்போய், அந்தத் தளிர்க்கொடி தழுவிய கொழு கொம்பை இழந்துவிட்டு, இப்போது தனியாய், தாமரை இலைத் தண்ணீராய், தவியாய்த் தவிப்பது தான் இன்றைய உண்மை.

ஜெகதீசனின் வாழ்க்கை முடிந்துபோய் முப்பது நாட்களாகி யிருந்தன. ஜோதி இன்னமும் அந்த வீட்டில்தான் இருந்து கொண்டிருந்தாள். ஆதரவு கொடுக்க நெருக்கமான உறவுக்காரர்கள் இல்லை. இருப்பவர்கள் இவளை வைத்துப் பாதுகாக்க வேண்டும் என்ற அளவுக்குப் பாசமும், பொறுப்பும் உடையவர்கள் அல்ல. விசேஷ கால ஆஜர் பட்டியல்! ஜஸ்ட் ரிலேட்டிவ்ஸ்!

கல்லாலும், மண்ணாலும், சிமெண்டாலும் கண்ணாம்பாலும் கட்டப்பட்டதுதான் என்றாலும், இந்த வீடுகளுக்கும் உயிரும் உணர்ச்சியும் இருக்குமோ என்னமோ, ஜெகதீசன் போன பின், அந்த வீடு ரத்தம் முழுவதும் வடிந்துபோன வெற்றுடலாய், வெறிச்சிட்டுப்போய், சோகத்தனமாகக்காணப்பட்டது. தரைப் புழுதி படிந்து போய், அழகிழந்து



காணப்பட்டது. ஆங்காங்கே ஒட்டடைத் தோரணங்கள்.

ஹாலின் நடுவில் ஜோதியின் எட்டு மாதக் குழந்தை, மயூரப்பிரியா தொட்டிலிலே தூங்கிக் கொண்டிருந்தது. உலகத்தின் இன்ப துன்பங்களை அறியாத பருவம். பால் மணம் மாறாத பச்சிளம் சிசு. நிர்மலமாய் ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்தது. பக்கத்திலே, வெற்றுத் தரையில் இரண்டு கைகளையும் பின்வாகாக மடக்கி, தலைக்கு அடியில் வைத்துக்கொண்டு ஒரு காலை மடக்கியும், மறு காலை நீட்டிக் கொண்டும், மல்லாக்காகப் படுத்திருந்தாள் ஜோதி. மெல்லிய சாயம் போன வாயில் புடவை அவள் உடலை அசிரத்தையாய்ச் சுற்றிக் கொண்டிருந்தது. வயிறு' உட்குழிந்து பள்ளமாகக் காணப்பட்டது. கண்கள் வீட்டின் விட்டத்தைக் காரணமின்றி வெறித்துக் கொண்டிருந்தன. அவ்வப்போது ஆழமாக அவளுக்குள்ளிருந்து எழும்பும் பெருமூச்சால், அவளது மார்பு எழுந்து எழுந்து தணிந்ததைத் தவிர அவளிடம் வேறு சலனமே இல்லை. ஜோதியின் சோகத்தை உணர்ந்தது போல், இருள் காடாய் மண்டிக் கிடக்கும் அவளது கருங்கூந்தல், தரையிலே பரவி, அவளைச் சுற்றிலும் கருமையை ஏற்படுத்தி, அவளுக்காகத் துக்கம் அனுஷ்டித்துக் கொண்டிருந்தது. நெற்றி, கழுத்து, கைகால்கள், காது, மூக்கு என எல்லாமே வெறுமையாகிப் போன ஜோதி, கூரையற்ற குட்டிச்சுவரைப் போல் உலர்ந்து வெறிச்சிட்டுக் காணப்பட்டாள். சிந்திக்கக் கூடத் திராணியின்றி, செயலற்று, காற்றுப் போன பலூனாய்க் கிடந்த ஜோதியின் நிலையைக் கலைப்பது போல், வெளியே கதவு தட்டப்பட்டது.

'யாராயிருக்கும்?'

ஜோதி இன்னமும் படுத்துக் கொண்டிருந்தாள். எழுந்திருக்க முயற்சி செய்யவில்லை. கதவு மீண்டும் தட்டப்பட்டது. மெல்ல எழுந்து, மேலாக்கை இழுத்து விட்டுக் கொண்டு ஜன்னலைத் திறந்து எட்டிப் பார்த்தாள். அப்படிப் பார்த்த பின்தான் கதவைத் திறக்க வேண்டும் என்பது ஜெகதீசனின் அன்புக் கட்டளை.

வெளியே மோகனு நின்று கொண்டிருப்பது தெரிந்தது. கதவைத் திறந்து விட்டாள்.

''தூங்கிக்கிட்டிருந்தியா ஜோதி, நான் வந்து எழுப்பிட்டேன் போலருக்கு...''

''இல்லையில்லை, சும்மாதான் படுத்திருந்தேன். உள்ளே வா...'' ஜோதி சுரத்தில்லாமல் முணு முணுத்தாள்.

''சாயங்காலம்தானே வர்றதா உங்கிட்ட சொல்லிட்டுப் போயிருந்தேன். திடீர்னு காலையிலேயே புறப்பட்டுட்டேன். பஸ் ஸூம் திருவா அடிச்சிக்கிட்டு வந்துட்டான். மயூரா எங்கே ''

உள்ளே நுழைந்த மோகனு கையிலிருந்த ஒயர் கூடையை ஓரமாக வைத்துவிட்டு, தோளில் தொங்கிக் கொண்டிருந்த ஷோல்டர் பேக்கைக் கழற்றி ஆணியில் மாட்டினாள், மோகனு உள்ளே வந்ததும், கதவைத் தாள் போட்டுவிட்டுத் திரும்பிய ஜோதி மோகனுவுக்குப் பதில் சொல்லவில்லை. இதற்குள் மோகனுவே தூளியில் தூங்கிக் கொண்டிருக்கும் குழந்தையைப் பார்த்துவிட்டு அருகில் சென்றாள்.

தொட்டிலை இரண்டு கையாலும் விரித்துப் பிடித்த மோகனு, ''மயூரா, மயூராக் கண்ணு'' என்றவள், ''நல்ல தூக்கம், தூங்கட்டும், தூங்கட்டும்''என்றபடி, முற்றக் குறட்டில் கால்களைத் தொங்கப் போட்டுக்



கொண்டு உட்கார்ந்தாள். இயந்திரம் போல் அவளைத் தொடர்ந்த ஜோதியும், அவளுக்குப் பக்கத்திதில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

கன்னத்திலே கையை வைத்துக் கொண்டு, மௌனமாய், தலை குனிந்து, முடியெல்லாம் பறந்து போய் சருகு போல் காணப்பட்ட ஜோதியின் தோற்றம் மோகனாவின் வயிற்றைக் கலக்கியது. குமுறிக் கொண்டு வந்த அழுகையை மிகச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள். கண்களில் மளமளவென்று ஊறிய நீரைப் புடவைத் தலைப்பால் ஒற்றிக் கொண்ட மோகனா.

''என்னடி அநியாயம் இது. தலையையாவது சீவக்கூடாதா பறந்து கிடக்கு'' என்று உரிமையோடு அதட்டிக் கொண்டே ஜோதியின் அருகில் நகர்ந்தாள்.

ஜோதியின் அருகே வந்தவள் அவள் தலையைத் திருப்பித் தரையில் புரண்டு கொண்டிருந்த கூந்தலைக் கைகளாலேயே கோதி, சிர்பண்ணி, கொண்டையாக முடிந்துவிட்டாள்.

''ஏதாவது சாப்பிட்டியா ஜோதி கைக் குழந்தைக்காரி. வயித்தைக் காயப் போட்டின்னு குழந்தைக்குப்பால் இல்லாமே போயிடும்....''

''ம்ம்... சாதம் சாப்பிட்டேன்...'' மறுபடியும் முனகல்தான்.

சற்று நேரம் இருவரும் அமைதியாக உட்கார்ந்திருந்தார்கள்.

''ஏன் ஜோதி, வீட்டுக்காரர் வந்தாரா, விஷயத்தைச் சொன்னியா ''

''சொல்லிட்டேன். நீங்க இன்னும் ஒரு மாசம் வேணுமின்னாலும் கூசாமத் தங்கியிருங்கன்னு சொன்னாரு...''

''நல்ல மனுஷனாயிருப்பார் போலருக்கு.''

''போன மாசத்தோட அட்வான்ஸ் பணம் வாடகைக்குச் சரியாப் போயிட்டுது. இந்த மாசம் வாடகையை நேத்து வந்திருந்தப்பக் குடுத்தேனா, வாங்கிக்கவே மாட்டேனுட்டாரு. நான்தான் பிடிவாதமா குடுத்துட்டு, காலி பண்ற விபரத்தையும் சொல்லிட்டேன்.''

''அதுதான் நல்லது. அவர் பணம் நமக்கெதுக்கு ''

''அப்புறம், மயூரா அப்பா உபயோகிச்ச கட்டில், மேஜை, நாற்காலி இதையெல்லாம் விக்க வேண்டாம்னு உங்கிட்டச் சொல்



யிருந்தேன்ல.... அதையும் நேத்து குடுத்திட்டேன்..'' ஜோதிக்குத் தொண்டை அடைத்தது.

''ஏன் குடுத்தே. நான்தான் சொல்லிட்டுப் போயிருந்தேன்ல. உனக்கு எது எது வேணுமோ, எவ்வளவு சாமான்னாலும் பரவாயில்லே, அங்கே இடம் இருக்கு. கொண்டு போயிரலாம்னு.... ''

''அதுக்கில்லே. அவரே போயாச்சு. இதெல்லாம் இருந்து என்னாகப் போவுது. மேலும், நானே உனக்குப் பெரிய சுமை, இதிலே....''

''அசடே, இப்படியெல்லாம் பேசக் கூடாதுன்னு எத்தனை தரம் சொல்றது? அதைவிடு. இப்ப மத்த எல்லாத்தையும் எடுத்து வெச்சுட்டல்ல ''

''ம்....ம்...''

''அப்ப சாயங்காலமே புறப்பட்டுடலாமா ஜோதி ''

''சரி மோகனா.''

அன்று மாலை ஐந்து மணிக்கு ஜோதியின் எஞ்சிய உடைமைகளான ஒரு பெரிய மரப் பெட்டி, இரண்டு சூட் கேஸ், ஒரு தோல் பை, இவைகளை மாட்டு வண்டியில் ஏற்றி விட்டு ஜோதிக்காக வெளியில் காத்துக் கொண்டிருந்தாள் மோகனா. ஜோதி, கடைசி முறையாகத் தோட்டத்தைப் பார்க்கப் போனாள்.

கணவனும், தானுமாகக் கொத்திய தோட்டம். போட்டி போட்டுக் கொண்டு பூப் பறித்தது, காய் பறித்தது, துக்கம் தாளாமல் உள்ளே வந்தாள், சமையலறை. கணவனுக்காகப் புதிது புதிதாகச் சாப்பாட்டு வகையறாக்களை, அக்கம் பத்துக்குப் பெண்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டு ஆர்வமாய்ச் சமைத்தது. ஆசை ஆசையாய்ப் பரிமாறிய இடம், அப்புறம் ஹால். அவனும் அவளுமாக சீட்டுக் கட்டு, வெட்டுப் புலி, தாயக் கட்டம் விளையாடி அட்டகாசம் செய்த இடம்.

கொஞ்ச நேரம் அங்கே நின்றுவிட்டு தட்டுத் தடுமாறி மெல்ல நடந்தாள். முன்புறமாய் அமைந்த படுக்கை அறை வாசலுக்கு வந்தாள். உள்ளே போக முடியவில்லை.

ஜெகதீசனைப் பற்றிய நினைவுகள் அலை அலையாய் வந்து மோத, அலைகளின் வேகத்தைத் தாங்க மாட்டாதவளாய்ச் சுவரிலே சாய்ந்துகொண்டு, வயிற்றில் இருப்பது வாய்க்கு வந்துவிடும் போன்றதொரு ஆக்ரோஷத்தோடு, வயிற்றை எக்கிக்கொண்டு ஆனால் சத்தமின்றி அழலானாள்.

எல்லாவிதமான உணர்வுகளாலும் ஆட்டுவிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் எல்லாவிதமான மனிதர்களையும் பாரபட்சமின்றிச் சுமந்துகொண்டு, தலை போகும் அவசரத்தில் வைகை எக்ஸ்பிரஸ் சென்னையை நோக்கி ஓடிக் கொண்டிருந்தது.

ஜன்னல் ஓரச் சீட்டில் கால்களைக் குறுக்கி கைகளால் கட்டிக் கொண்டு, ஜோதி அமர்ந்திருந்தாள். பக்கத்திலே மோகனா. மயூராவை மடியில் கிடத்திக் கொண்டு, அவளைத் தூங்கப்பண்ணிக்கொண்டிருந்தாள்.

ஜோதியும் மோகனாவும் விளச்சனூர்க் கிராமத்தைச் சேர்ந்தவர்கள். அடுத்தடுத்த வீடு. ஏறக் குறைய ஒரே வயது. பக்கத்து டவுன் பள்ளிக்கூடத்தில் ஒன்பதாம் வகுப்பு வரை ஒன்றாகப் படித்தவர்கள். ஒரே சமயத்தில் புஷ்பவதியாகி வீட்டுக்குள் அடங்கியவர்கள்.

குடும்பங்களின் வறுமைச் சூழ்நிலை அந்த யுவதிகளை எந்த விதத்திலும் பாதித்திருக்கவில்லை. புத்தம் புது மலர்களாய், உடலில் வனப்பையும், உள்ளத்தில் கனவையும் ஏகமாய்ச் சுமந்து கொண்டு, துள்ளலும் ஓட்டமுமாய், சின்னக் குரலில் அவ்வப்போது எதையாவது கூடிக் கூடிப் பேசிக் கொண்டு, சதா சர்வ காலமும் சிரித்துக் கொண்டு சந்தோஷமாய் வளைய வந்து கொண்டிருந்தார்கள்.

ஒரு வித்தியாசம். ஜோதி சிவப்பழகி. மோகனா கருப்பழகி. அவள் தந்தப் பொம்மை. இவள் கருங்காலியில் கடைந்தெடுத்த சிற்பம்.

ஜோதியின் தகப்பனார் குமரகுரு, டவுனில் அச்சு வெல்லம் மண்டியொன்றில் கணக்கராக வேலை பார்த்துக் கொண்டிருந்தார். சொற்ப வருமானம். மண்டிக்காரருக்குச்





உடம்பில் தோன்றும் வெள்ளைத் திட்டுகளை (தேமல்) போக்குவதற்கு தினமும் சில பேரீச்சம்பழங்களை (விதையோடு) சுட்டு அதை படையின் மேல் போடவேண்டும். தினமும் ஒரு முறை விதம் ஒன்று அல்லது இரண்டு மாதங்களுக்கு போட்டால் குணமாகிவிடும். மஞ்சள் பொடி, உப்பு இரண்டையும் கலந்து அதனால் பல் தேய்த்தால் பல், ஈறு பலப்படும். வாய் துர்நாற்றம் நீங்கும்.

-அனிதா ராமச்சந்திரன்

சொத்தாக விளச்சனூரில் ஒரு பெரிய தோட்டம்இருந்தது. குமரகுருவின் நாணயத்திலும், நன்னடத்தையிலும் திருப்தியுற்ற மண்டிக்காரார், அந்தத் தோட்டத்து வீட்டிலேயே குமரகுருவை வாடகை ஏதும் வாங்கிக்கொள்ளாமல் குடியிருக்க அனுமதித்திருந்தார். இந்த நன்றிக் கடனை, தகப்பனும் மகளும் தோட்டத்தை நன்ருக பராமரிப்பதன் மூலம் தீர்த்துக் கொண்டிருந்தார்கள்.

பக்கத்து மனை உள்ளூர்க் கோவிலைச் சேர்ந்தது. அக்கோயிலுக்கு வருஷத்துக்கு ஐந்து ரூபாய் பகுதி கட்டிவிட்டு, அங்கே சின்னதாக வீடொன்றைக் கட்டிக் கொண்டு ரெத்தின சபாபதி குடியிருந்தார்.

ரெத்தினத்தின் மனைவி சோலையம்மாவுக்கு இளகிய மனம். அப்போதுதான் அந்த வீட்டுக்கு வந்திருந்தாலும், புது வீட்டில் வேலை அதிகமிருந்ததாலும், சோலை குமரகுரு குடும்பத்தோடு அதிகம் பழகியிருக்கவில்லை. வேலை செய்த நேரம் போக, எஞ்சிய பொழுதில் தன் ஒரு வயது மகன் மோகனுவைக் கவனிக்கவே சோலைக்குச் சரியாய் இருக்கும். ரெத்தினம் கொத்தனுர் வேலை செய்து கொண்டிருந்தார்.

அந்தச் சமயத்தில்தான் குமரகுருவின் மனைவி மூன்றுமாதக்கைக்குழந்தை ஜோதியை விட்டு விட்டுச் செத்துப் போனுள். இந்த சம்பவம் இரண்டு குடும்பத்துக்கும் இடையே தொடர்பை ஏற்படுத்தி வைத்தது. கைக்குழந்தையை வைத்துக் கொண்டு குமரகுரு தவித்தபோது, சோலை தன் உதவிக் கரத்தை நீட்டினுள்.

மோகனு ஒன்பதாம் வகுப்புப் படித்துக் கொண்டிருக்கும்போது, ஒரு நாள் வழக்கம் போல் வேலைக்குச் சென்றிருந்த ரெத்தினம், கால் இடறி, சாரத்திலிருந்து கீழே விழுந்து அதே இடத்தில் உயிரை விட, சோலை வேலைக்குப் போக வேண்டியதாயிற்று. மகனை வீட்டிலே நிறுத்திக் கொண்டாள். ஜோதிக்கும் தனியாகப் பள்ளிக்கூடம் போகப் பிடிக்காததால் அவள் படிப்பும் நின்று போனது.

கறங்கு காலம் போல் வேகமாய்ச் சுழன்று பெண் குழந்தைகள் இருவரையும் பேரழகிகளாய் மாற்றி வைத்தது. பெற்ருேர்கள் உள்ளங்களிலே பெருஞ் சுமையை ஏற்றி வைத்தது.


அப்போதுதான் விளச்சனூரில் அந்தப் பேச்சு பலமாக அடிபட்டது. சின்னக்-குழந்தை முதல் தொண்டு கிழவர் வரை, ஒருவரை யொருவர் பார்த்துக் கொள்ள நேரும்போதெல்லாம், 'நம்ம ஊருக்குச் சினிமாக் கொட்டா வருதாமில்ல' என்று அக்கறையோடு மறக்காமல் விசாரித்துக் கொண்டார்கள், அதிசயப்பட்டுக் கொண்டார்கள். மனம் மகிழ்ந்து போனுர்கள். ஆயிரம் தியேட்டர்கள் பக்கத்து டவுன்களில் இருந்தாலும் உள்ளூரில் ஒன்று இருந்தால் அந்த வசதியே தனிதானே.

இந்தச் சினிமா தியேட்டர் வரவு, முக்கியமாகக் கன்னிப் பெண்களுக்கு அதிக சந்தோஷத்தைக் கொடுத்தது. இனிமேல் அடிக்கடி சினிமாப் பார்க்கலாம். சினிமாவுக்குப் போவதைப் பற்றித் தடை இருக்காது. உள்ளூர்தானே, அக்கம் பக்கத்து மனிதர்கள் என்ன பேசுவார்களோ என்று பயப்படாமல் சினிமா பார்க்கலாம். அகமகிழ்ந்து போனுர்கள்.

இந்த விஷயம் ஜோதிக்கும், மோகனுவுக்கும் ரொம்பவே சந்தோஷத்தைக் கொடுத்தது. தினமும் துணி துவைக்கக் குளத்துக்குப் போவது போல், குளத்துக்கு எதிரே சினிமாத் தியேட்டர் வரவிருக்கும் மைதானத்தைப் பார்க்கப் போய் விடுவார்கள். அங்கே, தியேட்டர் அமைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் பணியாளர்களிடம், கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுத்தான் வீடு திரும்புவார்கள்.

மைதானத்தைச் சீர்படுத்தியது, சுற்றிலும் முள் வேலி கட்டியது, கொட்டகைக்கு மூங்கில் ஊன்றியது, கூரை போட்டது, திரை கட்டியது, கீழே மணல் பரப்பியது, தாழ்வான மூங்கில் பாய்களை வைத்துக் கட்டி, பெண்களுக்கான இடம் ஒதுக்கியது, முதல் வகுப்பு என்று சில பெஞ்சுகளைத் தனியே ஆபரேட்டர் ரூம் கட்டியது, டிக்கட் கொடுக்குமிடம் அமைத்தது. இப்படி அதன் முழு வளர்ச்சியையும் அங்குலம் அங்குலமாகப் பார்த்து ரசித்தார்கள்.

எல்லா வேலைகளும் முடிந்த பின்னர், கடைசி கடைசியாக ஆபரேட்டர் ரூமுக்கு கண்ணுடி அடித்துக் கொண்டிருந்தார்கள். மோகனுவும், ஜோதியும் அன்றும் அங்கே நின்றுகொண்டு வேடிக்கை பார்த்தபோதுதான் அந்த டாக்சி வந்து நின்றது. சத்தம் கேட்டுத் திரும்பிய தோழிகளைப் பார்த்துக் கொண்டே ஜெகதீசன் டாக்சியிலிருந்துஇறங்கினுன்.



பால்பாயிண்ட் பேனுவினுல் உடைகளில் கறை ஏற்பட்டால் அவை சாதாரணமாக சோப்பு போட்டு சுத்தம் செய்தால் போகாது. சிறிது பஞ்சை எடுத்து ஓடிகோலன் அல்லது ஸ்பிரிட் நனைத்து கறைபட்ட இடத்தில்தேய்த்தால்கறைமறைந்து விடும்.

—பிரியா

அடுத்த நாள், அந்த டூரிங் தியேட்டர் 'மாய மான் டூரிங் டாக்கீஸ்' என்ற முகவரியுடன் அலங்காரமாக நின்று கொண்டிருந்தது. முதல் சினிமாத் தியேட்டர், முதல் படம், முதல் நாள் விளச்சனூர் மக்களில் பாதிப்பேர் அங்கேதான் நின்று கொண்டிருந்தார்கள். லவுட் ஸ்பீக்கர் பல புதுப் படப் பாடல்களைக் காது செவிடு படும்படி அலறிக் கொண்டிருந்தது.

அந்தத் தீபாவளிக்கு வாங்கியிருந்த புதுச் சேலையைக் கட்டிக் கொண்டு, நிறைய மஞ்சள் பூசிக் குளித்த முகத்தில் பொட்டும், தூக்கி முடிந்த கொண்டையில் கட்டுக் கதம்பமும் கைப் பையில் தின்பண்டப் பொட்டலங்களுமாய் ஊர்ப் பெண்கள், சுற்றமும் நட்பும் புடைசூழ நின்றுகொண்டு, லவுட் ஸ்பீக்கரை விட அதிகச் சத்தம் போட்டுக் கொண்டு பேசிக் கொண்டிருந்தார்கள்.

டிக்கட் கொடுப்பதற்காக மணி அடிக்கப் பட்டது. கியூ நகர ஆரம்பித்தது. டிக்கெட் கொடுப்பவர் டிக்கெட்டோடு ஒரு சாக்லேட்டையும் சேர்த்து வழங்கிக் கொண்டிருந்தார்.

படம் ஆரம்பிக்கப் போகும் நேரம். ஆண்களும் பெண்களுமாய் ஆரவாரித்துக் கொண்டு உள்ளே அமர்ந்திருந்தனர். குழந்தைகள் தாழ்வான தட்டிகளைத் தாண்டித் தாண்டி அடிக்கடி அப்பாவுக்கும் அம்மாவுக்கும் இடையே ஓடிக் கொண்டிருந்தனர். வெளியே, சோலை, மோகனனையும் ஜோதியையும் இழுத்துக் கொண்டு அவசரம் அவசரமாகக் கௌண்டரை நோக்கி ஓடிக்கொண்டிருந்தான். கூட்டத்தைப் பார்வையிட்டுக் கொண்டு ஆப்பரேட்டர் ரூம் வாசலில் நின்று கொண்டிருந்த ஜெகதீசன் இப்பொழுது இரண்டாம் முறையாகத் தோழிகளைப் பார்க்க நேர்ந்தது.

ஆறுமாதங்கள் அவசரமாய் ஓடி மறைந்தன. அன்று ஞாயிற்றுக் கிழமை. குமரகுருவுக்கு ஓய்வு நாள். டவுனுக்குச் சமீபத்தில் வந்திருந்த புதிய படம் ஒன்று மாரீசனில் ஓடிக் கொண்டிருந்தது.

ஜோதி சினிமாவுக்குக் கிளம்பிக்கொண்டிருந்தாள். அடுப்பிலே கொதித்துக் கொண்டிருக்கும் சாதத்தை அடிக்கொரு தடவை வெந்து போய் விட்டதா என்று பார்த்துக் கொண்டே தன்னையும் அலங்கரித்துக்கொண்டிருந்தாள்.

வெளியே, மாப்பிள்ளைத் திண்ணையில் குமரகுரு ஓய்வாகச் சாய்ந்து கொண்டிருந்தார். வாயிலே வெற்றிலை பாக்கு. கையிலே பிய்ந்து போன, பழுப்பேறிக் கிடந்த புராதன விசிறி மட்டை. அவ்வப்போது லேசாக விசிறிக் கொண்டார். அந்த விசிறியிலிருந்து வந்த காற்றை விட 'சரக், புரக்' என்ற சத்தமே அதிகமாக இருந்தது.

வாயில் சேர்ந்துவிட்ட எச்சிலைத் துப்புவதற்காக, குமரகுரு மெல்ல எழுந்து தெருப் பக்கம் வந்தார். எச்சிலைத் துப்பிய உடன், வாய் கொப்பளிக்க வேண்டும் போல் இருந்தது. தண்ணீர் கேட்டு, சினிமாவுக்குக் கிளம்பிக் கொண்டிருக்கும் மகளைத் தொல்லைப் படுத்துவானேன் என்று எண்ணியபடி, தானே உள்ளே செல்ல நினைத்தவராய், திண்ணையில் கிடந்த மேல் துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டவர், வீட்டுக்கு நேரே நிழலாடுவதைக் கண்டு திரும்பினார். ஜெகதீசன் நின்று கொண்டிருந்தான்.

'மாரீசன் முதலாளி எதற்கு வந்திருக்கிறார்!'

''அடடே, வாங்க, வாங்க'' என்ற குமரகுரு, வீட்டின் உள் பக்கம் திரும்பி, ''ஜோதி, அந்தப் புதுப் பாயை போடம்மா'' என்றார்.

மெல்லச் சிரித்துக் கொண்டே படியேறி வந்த ஜெகதீசன், சற்றுத் தயங்கி நின்றான்.

வெள்ளை வெளேர் என்று தழையத் தழைய வேட்டியும், சட்டையும் அணிந்திருந்தான். சுருட்டை முடி, மேல் நோக்கி சுருண்டுநின்று கொண்டு, முன் பக்கம் நெற்றியை அகலமாகக் காட்டியது. அடர்ந்த புருவத்திலும் மீசையிலும் கொஞ்சம் முரட்டுத்தனம் தெரிந்தது. இடது கையிலே வாட்ச் வலது கையிலே ஒரு பெரிய பொட்டலம். உள்ளே ஆரஞ்சுப் பழங்கள். ஒரு டஜனாவதுஇருக்கும். வாசனையடித்தது.


குமரகுருவின் அருகிலே, திண்ணையில் பொட்டலத்தை வைத்துவிட்டு, மெல்ல நிமிர்ந்த ஜெகதீசன், குமரகுருவைப் பார்த்து மறுபடியும் சிநேகமாய்ச் சிரித்தான். அப்போது கதவிடுக்கு வழியே பாய் ஒன்று நீட்டிக் கொண்டிருப்பது தெரிந்தது. அந்தப் பாயைப் பிடித்து நீட்டிக் கொண்டிருக்கும் கையை மட்டுமே ஜெகதீசனால் பார்க்க முடிந்தது.

'மலராத தாமரை மொட்டு!' மெல்லச் சிரித்துக் கொண்டான்.

''என்னயிது, தன்னாலே சிரிக்கிறீங்க.... உக்காருங்க...'' பாயை விரித்துப் போட்டார் குமரகுரு.

ஆஸ்துமா நோய் உள்ளவர்கள் குளிர்காலத்தில் கஷ்டப்படுவோர்கள். மூன்று அல்லது நான்கு உரித்த பூண்டுகளை பாலில் போட்டுக் காய்ச்சி தினமும் இரவு படுக்கைக்குப் போகுமுன்பு சாப்பிட்டால் ஆஸ்துமா தொந்தரவு இருக்காது.

-அனிதா ராமச்சந்திரன்



ஜெகதீசன் பாயில் அமர்ந்ததும், ''என்ன சாப்பிடறீங்க, காப்பி பரவாயில்லீங்களா'' என்றார்.

''அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். நீங்களும் உக்காருங்க'' என்றான்.

சற்று நேரம் இருவரும் மௌனமாக அமர்ந்திருந்தனர்.

''ஸாருக்கு நம்ம ஊர்ல தொழில் எப்படி நடக்குதுங்க '' – குமரகுரு மௌனத்தைக் கலைத்தார்.

''ரொம்ப நல்லாவே நடக்குதுங்க. ஊர் ஜனங்களும் ரொம்ப நல்லவங்க...''

''அப்ப நம்ம ஊர் ஸாருக்கு ரொம்பப் புடிச்சுப் போச்சுன்னு சொல்லுங்க...'' குமரகுரு சிரித்துக் கொண்டே பேசினார்.

''ஆமாங்க. அதுதான் இந்த ஊர்க்காரனாவே ஆயிடலாம்னு முடிவுக்கு வந்துட்டேன்....''

''ரொம்ப சந்தோஷங்க. நம்ம கொட்டா பக்கத்திலேயே நல்ல மனையெல்லாம் விலைக்கு இருக்குதுங்க. ஒன்னே வாங்கிப் போட்டுட்டீங்கன்னு ஒரு வீட்டைக் கட்டிக்கிட்டு குடும்பத்தைக் கூட்டியாந்திரலாம்.''

''குடும்பமே இனிமேத்தாங்க வரணும்'' ஜெகதீசன் முகம் சிவந்தான். சிரித்துக் கொண்டே பேசினான்.

''அப்பபடீங்களா... சீக்கிரமே வரட்டும், வரட்டும்'' குமரகுருவும் சிரித்துக்கொண்டே பேசினார்.

''உங்க வாக்குப் பலிக்கணும். அது சம்பந்தமாத்தான், உங்க கிட்ட ஒரு முக்கியமான விஷயமா பேச வந்திருக்கேன்...'' ஜெகதீசன் இங்கே தயங்கினான்.

''என்ன விஷயம்...'' நிமிர்ந்து உட்கார்ந்தார் குமரகுரு. கொஞ்சம் அதிர்ந்தார்.

''ஐயா, எனக்குச் சுத்தி வளைச்சுப் பேசத் தெரியாது. என் சார்பாக இந்த விஷயத்திலே எனக்காக எடுத்துப் பேச நெருக்கமான மனுஷங்களும் கிடையாது. அதனால, நானே நேரடியாய் உங்க கிட்டக் கேட்டுடலாமுன்னுதான்...'' மீண்டும் தயக்கம்.

''சொல்லுங்க...''

''வந்து....''

''பரவாயில்லே, சொல்லுங்க.''

''உங்க மகளை எனக்குக் கல்யாணம் செய்து கொடுத்து என்னை உங்க மருமகனா ஏத்துக்கணும்.''

''என்னது, ஜோதியவா'' குமரகுரு அதிர்ந்து விழித்தார்.

''ஆமாங்க, ஜோதியைத்தான்'' ஜெகதீசன் சற்று சரளமானான்.

''இதென்னது, இப்படித் திடுதிப்புன்னு வந்து கேட்டா, எனக்கு ஒண்ணும் புரியலியே''

''திடுதிப்பென்று எடுத்த முடிவில்லே இது. உங்க மகளைப் பார்த்த வுடனேயே எனக்கு ரொம்பப் புடிச்சுப் போச்சு. அதுக்கப்புறம், ஒரு தடவைக்குப் பல தடவையா நானே யோசிச்சு யோசிச்சுத்தான் இந்த முடிவுக்கு வந்தேன். உங்களைப் பத்தியும் நல்லா விசாரிக்கத் தெரிஞ்சுக்கிட்டேன். ஒத்து வரும் போல இருந்தது. வந்துட்டேன்....''


''நீங்க என்னைப் பத்தியும் நல்லா, நிதானமா விசாரிங்க. நிச்சயமா என்கிட்ட எந்தக் குறையும் கிடையாது.''

''அதுக்கில்லே... இப்ப நான் என் பொண்ணுக்குக் கல்யாணம் செய்யற அளவுக்கு முன்னேற்பாடா இல்லீங்களே, அதனாலே...

''முன்னேற்பாடுதானே, இந்த சிர் விவகாரம்தானே ஐயா. நீங்க அதைப் பத்தி யோசிக்கவே வேண்டாம். அதைப் பத்திக் கவலையே படாதீங்க. பொண்ணோட, பொருளையும் சேர்த்துக் கேட்கிற அற்பமான புத்தி எனக்கில்லே. அப்படிக் கேட்கிறது மகா தப்பு. பெரும் கேவலம்னு நெனைக்கிறவன் நான். இப்பவும் நான் என் சொந்தக் கால்லதான் நின்னுக்கிட்டு இருக்கேன். போன வருஷம் தமிழ்நாடு லாட்டரியிலே ஒரு லட்சம் ரூபாய் பரிசு கிடைச்சது. அதுக்கப்புறம்தான் இந்த மாரீசனெல்லாம். அதுக்கு முன்னால கரம்பட்டியில, குறுஞ்சாவடி இப்படி பல இடங்கள்ல சினிமா ஆபரேட்டரா இருந்துக்கிட்டிருந்தேன். தெரிஞ்ச தொழில்னு இப்ப இதிலே இறங்கி இருக்கேன்.''

முட்டைகளை வைக்கும்போது கூர்மையான பக்கம் கீழே வரும்படி வைத்தால் முட்டை சீக்கிரத்தில் கெடாது.

–பிரியா



''......''

இந்தத் தொழிலே போனாலும், மானமா வாழ, எந்த நியாயமான வேலையையும் செய்ய நான் ஒருபோதும் தயங்க மாட்டேன். உங்க மகளை நல்லபடியா வெச்சுக்கு வேன்னு என்னால உறுதியாச் சொல்ல முடியும். 'என்னை நம்புங்க. கல்யாணம்கிறது மனப் பரிமாற்றம், அன்புப் பரிமாற்றம், பொருள் பரிமாற்றம் இல்லே. உங்க ஆசீர்

வாதத்தை மட்டுமே எதிர்பார்க்கிறேன்...''

ஜெகதீசன், தான் சொல்ல நினைத்தது அத்தனையையும், மடமடவென்று சொல்லி முடித்தான். இன்னமும் குமரகுரு மௌன மாக அமர்ந்திருக்கவே ஜெகதீசனே மீண்டும் பேசினான்.

''என்ன யோசிக்கிறீங்க? வேறு இடத் திலே, ஜோதிக்கு ஏற்பாடு ஏதாவது....''

''அப்படி இல்லே. எனக்கு ஒரு வாரம் டயம் குடுங்க. அப்புறம் நானே வந்து உங்களைப் பார்க்கறேன். இப்ப ஒரு மாதிரி குழப்பமா யிருக்கு'' குமரகுரு உண்மையி லேயே பெரிதும் குழம்பிப் போயிருந்தார்.

''நிச்சயம், ஒரு வாரம் என்ன, அதுக்கு மேலேயே கூட நீங்க டயம் எடுத்துக்குங்க. ஒரு விஷயம், என்னைப் பத்தி உங்க கிட்ட விவரமா எடுத்துச் சொல்லிட்டேன். முடிவு, உங்க இஷ்டப்படி. அப்ப வரட்டுங்களா ''

கூடத்தின் நடுவே ஏராளமான புகையைக் கக்கிக்கொண்டு, சூழ்நிலையை பொலிவு பண்ணிக் கொண்டு, காடா விளக்கு எரிந்து கொண்டிருந்தது. வாசல் கதவுக்கு நேராக, சுவரை யொட்டிப் போடப்பட் டிருந்த பெஞ்சில் சாய்ந்துட்கார்ந்திருந்தார் குமரகுரு. நிலைப்படியருகே, கதவில் சாய்ந்து கொண்டு தரையில் அமர்ந்திருந்தாள் சோலை. சற்றுத் தள்ளி உள்ளே, ஜோதியும் மோகனு வும்.

விவகாரம் கடந்த ஒரு வார காலமாகப் பேசப்பட்டு, இன்று பலமாக அலசப்பட்டது.

''எனக்கென்னமோ அண்ணே, பலவகை யிலும் பார்க்கும்போது, இந்தச் சினிமாக் கொட்டகைக்காரருக்குச் சரின்னு சொல்லி விடலாமுன்னுதான் தோணுது.''

''உம்.''


''உங்க மண்டிக்கார மனுசர் என்ன சொல்றாரு ''

''அவரென்ன சொல்றாரு. பேசாம முடிச்சுடுங்கறாரு.''

யோசனை

நிறைமாத கர்ப்பிணிகள் வெந் தயக்குழம்பு இட்டு சாப்பிட்டு வாருங்கள்: சுகப்பிரவசம் உண் உண்டாகும்.

-எஸ். எஸ். மணியம்



''என்னடி ஜோதி, அந்த ஆளை, அதான் அந்த சினிமாக் கொட்டகைக்காரரை உனக் குப் புடிச்சிருக்கா ''

தகப்பனும், மோகனுவின் தாயும் பேசு வதை யெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த ஜோதி, சோலையின் திமர்க் கேள்வியால் சற்றுத் தடுமாறிப் போனாலும் சட்டென்று சுதாரித்துக் கொண்டாள்.

''அத்தே, இந்த நிமிஷம் வரை, எனக்கு அவர் யாரோதான். வேத்து மனுஷன்தான். மத்தபடி தனிப்பட்ட முறையில் எதுவும் இல்லே. என் கல்யாண விஷயத்தைப் பொறுத்தவரைக்கும், இப்பன்னு இல்லே, எப்பவுமே, அப்பா சரின்னா சரி, இல்லேன்னா இல்லேதான்.''

''அடி சக்கை, சினிமாக்காரன் கிட்டக் கொடுத்த காசு வீண் போகலே. அண்ணே, என்னா போடு போட்றா பாத்தீங்களா!'' சோலை சிரிப்பும், வியப்பும், கேலியுமாய்ப் பேசினாள்.

ஜோதிக்கு வெட்கமாய்ப் போய்விட்டது. மோகனுவின் தோளிலே முகம் புதைத்துக் கொண்டாள். நெஞ்சு படபடத்தது.

''என்ன யோசிக்கிறீங்க'' சோலை மறுபடி யும் குமரகுருவிடம் பேச்சுக் கொடுத்தாள்.

''ம்...''

''என்னஇது, எதுக்கெடுத்தாலும் உம் கொட்டிக்கிட்டு. ஆளைப் பத்தி நல்லா விசா ரிச்சுட்டீங்கல்ல?''


''ஓ, நல்லா விசாரிச்சுட்டேன். ஒரு தப்பு தண்டா கிடையாது. என்கிட்டச் சொன்ன தெல்லாம் நூத்துக்கு நூறு உண்மை.''

''அப்ப என்ன, ஜோதிக்கும் வயசாகலே? நாளைக்கே போயி அந்த மாப்பிள்ளைப் புள் ளையை ஒருநடை பாத்துட்டு வந்துடுங்க. நல்ல காரியத்தைத் தள்ளிப் போடக் கூடாது. சீக்கிரமாவே முடிச்சுடுங்க.''

முடித்துவிட்டார். ஜோதி ஜெகதீசனின் மனைவியானாள். திருமணம் முடிந்த மறு நாளே ஜெகதீசன் தன் மாமனாரையும் மனைவி யையும் தன்னுடன் அழைத்துச் சென்று விட்டான். குமரகுரு மகளோடு சென்று விட்டார் என்றாலும், பெரும்பாலும் வெல்ல மண்டியிலேயே தங்கிவிடுவார். மகளுடன் தங்க நேரும்போதெல்லாம் மருமகனின் பண்பைக் கண்டு மகிழ்ந்து போவார். இந்த மகிழ்ச்சிக்காகவே, அதுநாள்வரை உயிர்வாழ்ந்தவரைப் போல, மகளின் திரு மணம் முடிந்த நான்காம் மாதம், திடீரென ஏற்பட்ட நெஞ்சு வலியால் குமரகுரு உயிர் விட்டபோது, நிறைவும், நிம்மதியும் சூழ்ந் திருந்த அவர் மனதிலே எந்தவிதமான கவலை யும் இல்லை.

அதற்குப் பின் இரண்டு மாதங்களில், ஜெக தீசனின் காண்ட்ராக்ட் அங்கு முடிந்துபோனது. அடுத்த காண்ட்ராக்ட் ஜெகதீசன் மதுரைக்குப் பக்கத்திலே சக் குளம் கிராமத்தில்எடுத்திருந்தான். கணவன் ஒரு பெரும் தூணாக நின்று ஜோதியைத்

உள்ளிப் பூண்டு சாற்றையோ அல்லது பூண்டையோ போட்டுக் காய்ச்சி ஆறவைத்த எண்ணெயைச் சில சொட்டுகள் காதில் விட்டுவந்தால் காது நோய்கள் குணமாகும். -ப்ரியா



தாங்கிக் கொண்டதால், தந்தையின் மரண அதிர்ச்சியிலிருந்து அப்போதுதான் ஓரளவு மீண்டிருந்த ஜோதிக்கு, சொந்த ஊரையும் விட்டுப் போக வேண்டும் என்றபோது முதலில் கொஞ்சம் வருத்தமாகத்தான் இருந்தது. ஆனாலும், இட மாற்றமும் தனக்குத் தேவைப் படுவது போல் உணர்ந்த ஜோதி, சோலையிடமும், மோகனாவிடமும் பிரியா விடை பெற்றுக் கொண்டு கணவனுடன் புறப்பட்டு விட்டாள்.

விளச்சனூரில் நல்ல லாபகரமாக ஓடிய அளவுக்கு சக்குளத்தில், ஜெகதீசனுக்குத் தொழில் பிடித்துக் கொள்ளவில்லை. ஏதோ நஷ்டமின்றி நடந்து கொண்டிருந்தது. ஆனால் வேறு ஒரு மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சி நடந்தது. கணவனும், மனைவியும் வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது, சக்குளத்துக்கு வந்த மூன்றாவது மாதம் உறுதி செய்யப்பட்டது.

ஜோதிக்கு மூன்று மாதம்!

'இன்னும் ஏழு மாசம் போனால் குடும்ப எண்ணிக்கை மூன்றாகிவிடும்' — ஜெகதீசன் மகிழ்ச்சியில் மூழ்கிப் போனான். மனைவியை அதிகமாகக் கவனிக்க ஆரம்பித்தான். ஆனாலும் தொழில் நிலவரம் அவ்வப்போது அவன் மனதை நெருடிக் கொண்டுதான் இருந்தது.

ஜோதி குஷியாக வளைய வந்து கொண்டிருந்தாள். தான் கருவுற்றிருப்பதை உறுதியாகச் தெரிந்து கொண்ட பின்னர், உடனேயே மோகனாவுக்குக் கடிதம் எழுதி விட்டாள். கடிதத்தில், இனிமேல் தனக்கு மோகனாவும், அவள் தாயும்தான் உற்ற துணை என்றும், தன்னுடனேயே தங்கிவிடும் படியாகப் புறப்பட்டு வரும்படியும், அன்புடனும், உரிமையுடனும்எழுதியிருந்தாள். அதற்குப் பதில் இல்லாமல் போகவே, தலைகால் புரியாத சந்தோஷத்தில் தான்தான் விலாசத்தைத் தவறாக எழுதியிருக்க வேண்டும் என்ற முடிவில் மறுபடியும் எழுதினாள். ஒரு வாரத்துக்குப் பின் விலாசதாரர் அந்த விலாசத்தில் இல்லை என்ற குறிப்புடன் கவரில் அடித்த பந்தைப் போல் ஜோதியின் கடிதம் ஜோதிக்கே திரும்பி வந்த பின் ஜோதிக்கும் மோகனாவுக்கும் தொடர்பில்லாமல் போயிற்று.

சக்குளம்வந்தவுடனேயே, தான்இதுவரை சேமித்துவைத்திருக்கும் பணத்தைக்கொண்டு மதுரையில் நல்ல வீடொன்றைச் சொந்தமாக வாங்கிவிட வேண்டும் என்று திட்டமிட்டிருந்த ஜெகதீசனை தியேட்டர் வரும்படி ஊக்குவிக்கவில்லை. எதற்கும் ஜோதியின் விஷயம் முதலில் நல்லபடியாக முடியட்டும் என எல்லாத் திட்டங்களையும் ஜெகதீசன் ஒத்திப் போட்டிருந்தான்.

அந்த நேரம்வரை நன்றாக இருந்துகொண்டிருந்த ஜோதியின் உடல்நிலை பிரசவ நேரத்தில் சிக்கலாக மாறியது. துணைக்கு வேறு நெருக்கமான மனிதர்கள் இல்லாமல் போய் விட்டது. மனக் கஷ்டமும், பொருள் நஷ்டமும் ஏகமாய் இழுத்துக் கொண்டு போய் அப்படி இப்படி என்று கைநிறைய மகளை எடுத்துக் கொண்டு ஜோதி மனுஷியாக வீடு திரும்புவதற்குள் ஜெகதீசனின் இருப்பு குறிப்பிடத்தக்க அளவு கரைந்து போனது. உடல் நலிவுற்றிருக்கும் ஜோதியிடம், இந்தப் பொருளாதாரப் பிரச்னைகளை ஜெகதீசன் முழுமையாக மறைத்து விட்டிருந்தான்.

குழந்தைக்கு 'மயூரப் பிரியா' என்று பெயர் வைத்தார்கள். மனைவிக்கு, குழந்தைக்கு என்று குடும்பத்தில் செலவுகள் அதிகரித்த நேரத்தில் தொழிலும் நொடிக்க ஆரம்பித்தது. தனக்குத் தெரிந்த அத்தனை யுக்திகளையும் கையாண்டு, தொழிலை இழுத்துப் பிடிக்க முயன்றதில் ஜெகதீசனின் இருப்பு முழுவதும் கரைந்து போனது. உடல் ஆரோக்கியம் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டது.

பல்லைக் கடித்துக் கொண்டு காண்ட்ராக்ட் காலம் முடியும்வரை காத்திருந்த ஜெகதீசன் இனிமேலும் இதை இழுத்துப் பறித்துக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை என்று இந்த டூரிங் சினிமா தியேட்டர் விவகாரத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தான்.

அன்று மாலை வீடு திரும்பிய ஜெகதீசன், ஜோதியைஅழைத்து, நடந்துபோன தொழில் நடவடிக்கைகளைப் பற்றி அவளிடம் விளக்கமாகப் பேசினான். முதலில் சற்று அதிர்ச்சியடைந்தாலும், அதை விநாடிக்குள் சமாளித்துக்கொண்டு, கணவனுக்கு ஆறுதல் கூறினாள். தைரியம் சொன்னாள். அதற்குப் பின்

வெகுநேரம் பலவாறாகப் பேசி, கையில் இருக்கும் பணத்தை பேங்கில் போட்டு விடுவது. ஜெகதீசன் மதுரை தியேட்டர்களில் ஏதேனும் ஒன்றில் ஆபரேட்டர் வேலை வாங்கிக் கொள்வது என்ற முடிவுக்கு வந்தனர்.

மறுநாள் காலை மதுரைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்த ஜெகதீசனுக்கு, லேசாக வயிற்றை வலிப்பது போல் இருந்தது. கடந்த மூன்று மாத காலமாகவே ஜெகதீசனுக்கு இப்படி வயிற்றை வலித்துக் கொண்டுதான் இருந்தது. வேலைக் கவலையில் அதை முழுவதுமாகப் புறக்கணித்திருந்தான். இன்று கொஞ்சம் அதிகம் வலிப்பது போல் இருக்கவே, மனைவியைக் கூப்பிட்டான்.

''ஜோதி, வயிற்றை வலிக்குது'' — வலியின் தீவிரம் அவன் முகத்திலும் குரலிலும் அப்பட்டமாகத் தெரியவே, ஜோதி பயந்து போனாள்.

''என்னங்க, என்னாச்சு, ஏன் வலிக்குது'' என்றாள்.

''தெரியலே. அடிவயிற்றைக் குத்தற மாதிரி வலிக்குது'' என்றான்.

'ஒருவேளை வாயுத் தொல்லையோ?'

''கொஞ்சம்? இருங்க இதோ வந்திடறேன்.''

வேகமாக ஓடிய ஜோதி, கொஞ்சம் ஓமம், இரண்டு வெற்றிலை, ஒரு சிறிய பெருங்காயத் துண்டு இவைகளை அம்மியில் வைத்து அவசரம் அவசரமாக அரைத்து வழித்துக் கொண்டு ஓடி வந்தாள். தானே அந்த மருந்தை அவன் வாயிலே ஊற்றிக் குடிக்க வைத்தாள்.

மருந்தைக் குடித்த ஜெகதீசன் படுக்கையிலே சாய்ந்து படுத்துக் கொண்டான்.

கண்களை மூடிப் படுத்திருந்த ஜெகதீசன் சற்று நேரத்தில் 'விசுக்'கென்று எழுந்து உட்கார்ந்தான்.

''ஜோதி, ரொம்ப வலிக்குது'' என்றான், அடிவயிற்றைப் பிடித்தபடி.

தினமும் காலை ஒரு கரண்டித் தேனை தவறாது உட்கொண்டால் நரம்புகள், இரத்த நாளங்கள் ஈரல் சுவாசப்பை ஆகியவை சுத்தமடைகின்றன. அதனால் உடலில் ஏற்படும் களைப்பும் சோர்வும் நீங்கி புத்துணர்ச்சி ஏற்படுகிறது.

-பிரியா பாலு



'ஒருவேளை உஷ்ணமாக இருக்குமோ'

மறுபடியும் உள்ளே விரைந்த ஜோதி, விளக்கெண்ணெய் பாட்டிலுடன் ஓடிவந்தாள். தொப்புளைச் சுற்றியும், அடி வயிற்றிலும் நன்றாகத் தடவி விட்டாள்.

என்ன செய்தும், மாலைவரை வலி தொடரவே, பயந்துபோன ஜோதி, கணவனைக் கட்டாயப்படுத்தி, டாக்டரிடம் இழுத்துக் கொண்டு ஓடினாள்.

அன்று ஆரம்பித்த இந்த ஓட்டம் ஒரு நீண்ட தொடர் கதையாகியது. ஜெகதீசனுக்குப் புற்று நோய் என்ற தலைப்புடன் மூன்று மாதத்துக்குப் பின் அது சோகமாக முடிந்துபோனபோது, ஜோதி, வெலவெலத்து ஓய்ந்து போனாள்.

'பாடியை எடுத்துக் கொண்டு போகலாம்' என்று ஆஸ்பத்திரியில் கூறிய பின்னர், துணையாக வந்திருந்த சிறு உள்ளூர் நண்பர்கள், மற்ற ஏற்பாடுகளைக் கவனிக்க ஆரம்பித்தார்கள். அவர்கள் சுறுசுறுப்பாக சோகம் கப்பிய முகத்தோடு அங்கும் இங்கும் நடமாடுவதை, யாரோ மூன்றாம் மனுஷி பார்வையிடுவது போல், தோளிலே தூங்கும் குழந்தையைப் போட்டுக் கொண்டு, ஸ்மரணையின்றி ஜோதி நின்று கொண்டிருந்தபோது, ''ஜோதி'' என்று யாரோ அழைப்பது கேட்டது.

சட்டென்று திரும்பிய ஜோதி திகைத்துப் போய்விட்டாள். இந்த இடத்தில், இந்தக் கோலத்தில் இவளைப் பார்த்த மோகனாவுக்கும் ஒன்றும் புரியாமல் போகவே அவளும் திகைப்புற்றாள்.

எதிரே நிற்பது தன் ஆருயிர்த் தோழி மோகனா என்பதை உணர்ந்த மாத்திரத்தில், பாய்ந்து அவளருகே ஓடியவள், மோகனாவைக் கட்டிக் கொண்டு கதறி அழலானாள்.

அதன் பிறகு காரியங்கள் மடமடவென்று நடந்தன. ஓர் ஆண் மகனின் துணிவோடும், பொறுப்போடும் அத்தனையையும், தன் செலவிலேயே, தானே முன்னின்று செய்து முடித்தாள் மோகனா. ஒரு வழியாக எல்லாம் முடிந்த பிறகு ஜோதியிடம் கேட்டாள்.

''ஜோதி, உன்னை எங்க கூட கூட்டிக்கிட்டுப் போயிடலாமுன்னு நினைக்கிறேன். நீ என்னம்மா சொல்றே?''

''சொல்றதுக்கு என்ன இருக்கு.. போறதுக்குத்தான் வேற எங்க இடமிருக்கு?'', ஜோதி கேவினாள்.

''அசடே, கண்ணைத் துடை. நான் இருக்கும்போது உனக்கென்ன, அப்ப இன்னைக்கே புறப்படுவோமா, ஜோதி?''

''இல்லை மோகனா. இங்கே கொஞ்சம் கடன் இருக்கு. நகை எல்லாம் பேங்கில இருக்கு. எல்லாத்தையும் வித்து ஒரு வழி பண்ணியாகணும்.''

நகைகள், பத்திரங்கள், மற்ற விற்கக்கூடிய ரேடியோ, சில ஃபர்னிச்சர்கள் போன்ற பொருட்கள் எல்லாமே விற்கப்பட்டன. எல்லாக் கடனும் போக,, பத்தாயிரம் ரூபாய்

மிஞ்சியது. அதை மயூரப்ரியாவின் பேரிலே ஃபிக்ஸட் டிபாசிட்டில் போட்டுவிட்டு, நாலு நாள் காத்திருக்கும்படியும், தான் வந்து அழைத்துப் போவதாகவும் கூறிச் சென்ற மோகனு, அந்த நான்காவது நாள் சொன்ன நேரத்துக்கு முன்பாகவே வந்திருந்தது. ஜோதியின் மனத்தை நெகிழச் செய்தது. மோகனுவுடன் சென்னை சென்றவுடன் கொஞ்ச நாட்களில் வேறு ஏதாவது வேலை பார்த்துக் கொள்ள வேண்டும்.

அவள் துணையோடு, ஆனால் அவளுக்குப் பாரமாக இல்லாமல் இருந்து கொள்ள வேண்டும் என்ற முடிவுகளுடன் தான் மோகனுவுடன் புறப்பட்டிருந்தாள் ஜோதி.

பழைய நினைவுகளில் மூழ்கிப் போயிருந்த ஜோதியை மெல்லத் தோளில் தட்டினுள் மோகனு.

''ஜோதி, உன் பொண்ணு தூங்கிட்டா. நீயும் கொஞ்சம் இப்படிப் படுத்துக்கொள் ளேன்'', என்றுள்.

''இல்லேயில்லே. எனக்குத் தூக்கம் வர்ற மாதிரியில்லே. நீ வேணு படுத்துக்கொள்.''

''எனக்கும் தூக்கம் வரவில்லே. ஆனு, சோம்பலா, ஒரு மாதிரியா அசதியா இருக்கு. கொஞ்சம் காப்பி குடிப்போமே'' என்றபடி எழுந்தாள் மோகனு. பிளாஸ்கில் மீதி யிருந்த காப்பியை பிளாஸ்க் மூடிகளில் ஊற்றி ஒன்றை ஜோதியிடம் நீட்டினுள்.

மோகனுவையே உற்றுப் பார்த்துக் கொண் டிருந்த ஜோதி, கையிலிருந்த காப்பியைக் குடித்தவாறே கேட்டாள்:

''மோகனு, நீ எப்படி மெட்ராஸ் போனே, எப்பப் போனே, என்ன வேலே செய்யறே, அத்தை எப்படி இருக்காங்க, அதெப்பத்தி எங்கிட்டச் சொல்லவே மாட்டேங்கறியே'' என்றுள்.

இதே கேள்வியை, இதற்கு முன்னும் துக்கத்திற்கிடையேயும், ஓரிரு முறை கேட் டிருந்தாள். அப்போதெல்லாம் 'என்னேப் பத்தி என்ன, உன் கவலேயே என்னேத் தின் னுடும் போல இருக்குது. அப்புறமா ஒரு நாளைக்கு விவரமா எல்லாத்தையும் உனக்குச் சொல்றேன்' என்று பதிலளித்திருந்தாள் மோகனு.

இப்போதும் ஜோதி, தன்னேப் பற்றிக் கேட்டவுடன் சிறிது நேரம் அவளேயே உற்றுப் பார்த்துவிட்டு, ஒரே வார்த்தையில் ''சொல்றேன்'' என்றுள்.

சொல்லவில்லே. சொல்ல இயலவில்லே. சற்று நேரம் மௌனமாக அமர்ந்திருந்தவள், சடக்கென பிளாஸ்க்கை மூடி ஓரத்தில் வைத்துவிட்டு, ''ஜோதி, முதுகு வலிக்குது. கொஞ்ச நேரம் படுத்துக் கொள்ளட்டுமா? ஏதாவது வேணும்னு எழுப்பு'' என்றபடி, ஜோதியின் பதிலுக்கும் காத்திராமல் மேலே ஏறிப் படுத்துக் கொண்டாள்.

'வலித்தது முதுகா, மனமா?

'சொல்கிறேன் என்றுளே! எதைச் சொல் வாள்! எப்படிச் சொல்வாள்!



நாலைந்து கிராம்புகளை நசுக்கி கால் கோப்பை தண்ணீரில் போட்டுக் கொதிக்க வைத்துக் குடித்தால் களைப்பு, கைகால் ஓய்ச்சல் நீங்கும். -ப்ரியா

ஜோதி ஜெகதீசனுடன் சக்குளம் போன பின், தான் மட்டும் தனியாகத் தவித்த தையா, மாரிசன் ரீங் போன பிறகு அதே மைதானத்தில் 'கற்பகம் ரீங்' வந்த தையா, சினிமாவுக்குப் போய், அங்கு வந்திருந்த பிலிம் டிஸ்ட்ரிபியூட்டர் கேசவன் கண்ணில் பட்டதையா, அவன் சினிமாவில் சேர்த்து விடுகிறேன் என்று ஆசை காட்டியதையா, அதை நம்பி இவள், அம்மாவையும் அழைத்துக் கொண்டு, சென் னேக்கு வந்ததையா...? சென்னேக்கு வந்த வுடன் கேசவனிடம் வசமாக மாட்டிக் கொண்டதையா? அப்புறம், அவனுக்கும், அவனேச் சேர்ந்தவர்களுக்கும் ஆசை நாயகி ஆனதையா, மகளின் அவலத்தைக் கண்டு மனம் நொந்து சோலே மாண்டு போனதையா இப்போது ஒழுங்காக வாழ நினேத்தும் அது முடியாமல் போனதையா? இந்தச் சமயத்தில் ஒரு டாக்டருக்கு கால் கேர்ளாக மதுரைக்கு வந்ததையா? அங்கு ஜோதியைக் கண்டு உரு கிப் போனதையா? இன்று உண்மையான அன்புக்கு ஏங்கித் தவிப்பதையா, அதை ஜோதியின் நிழலிலே காணத் துடிப்பதையா?

எதைச் சொல்வாள், எப்படிச் சொல் வாள்? இன்னும் எத்தனே நாளைக்கு மூடி மறைக்கப் போகிறுள், அவளின் முகத் திரையின் ஆயுள் என்ன....?

மோகனு மேல் பெர்த்திலே படுத்துக் கொண்டு, மௌனமாய்க் கண்ணீர் பெருக் கினுள்.

மோகனு அலங்காரம் செய்து கொண் டிருந்தாள். ஷாம்பு போட்டுக் குளித்த தலேயை அழகாகச் சீவி பின் பக்கம் அப் படியே தொங்க விட்டுக் கொண்டாள். இடை வரை விரிந்த கூந்தல், நுனியில் சீராக வெட்டப்பட்டு, ஒரே நீளத்தில் தொங்கிக் கொண்டிருந்தது. முகப் பூச்சை முடித்து

விட்டு, புருவங்களைத் தீர்க்கமாகத் தீட்டினாள். லேசாக உதட்டில் சாயத்தை ஏற்றிக் கொண்டவள், டிரஸ்ஸிங் டேபிள் கண்ணாடி வழியே ஜோதியைப் பார்த்துச் சிரித்தாள்.


''என்ன ஜோதி, ஆச்சரியமா இருக்கா'' என்றாள்.

மோகனா அலங்கரித்துக் கொள்ளும் நேர்த்தியைப் பார்த்து வாயடைத்துப் போய் அமர்ந்திருந்த ஜோதி, ''மோகனா, மெட்ராஸ் வந்து நீ ரொம்ப மாறிட்டே. உன்னை விளச்சனூர்க்காரின்னு எப்படி அடிச்சுச் சொன்னாலும் ஒத்துக்க மாட்டாங்க'' என்றாள்.

''ஆமாம் ஜோதி, நான் விளச்சனூர் மோகனா இல்லைதான். தலைகீழா மாறித் தான் போயிட்டேன்.''

யோசனை

தேயிலைத் தண்ணீரில் ஒரு எலுமிச்சைப் பழத்தை சாறு பிழிந்து, நன்றாகச் சேரும் வரை ஆற்றிக்குடியுங்கள்: விடாமல் ஏற்படும் வயிற்றுக் கடுப்பு நீங்கும். எஸ். எஸ். மணியம்



''அதுக்கென்ன பண்றது. நீ வேலை பார்க்கிறதோ ஒரு பெரிய இடத்து அம்மாகிட்டேங்கிறே. அவங்களுக்குப் புடிச்ச மாதிரி டிரஸ் பண்ணிக்கிறதிலே தப்பொண்ணும் இல்லை. அதோட இந்த ஊர்ல நெறையப் பேரு இப்படித்தானே இருக்காங்க....'' தோழிக்கு சமாதானம் சொல்வது போல் பேசினாள் ஜோதி.

ஜோதி சக்குளம் போன பின்பு, விளச்சனூருக்கு வந்திருந்த ஒரு பெரிய பணக்கார தாய் சோலையையும் தன்னுடன் துணைக்கு அழைத்து வந்ததாயும், வந்த சில நாட்களில் சோலை காவராக் கண்டு இறந்து போனதாயும், தான் புளுகியதை அப்படியே நம்பிக்கொண்டு கள்ளமின்றிப் பேசிய ஜோதியை மோகனாவால் நேருக்கு நேர் பார்க்க முடியவில்லை.

புடவை மடிப்புக்களைச் சரி பார்ப்பது போல் குனிந்து கொண்டே, ''ஜோதி, அந்த அம்மா கிட்ட மூணு நாள்தான் லீவு கேட்டிருந்தேன். அதனாலேதான் போக வேண்டியிருக்கு. நீ பத்திரமா, கதவை உள் பக்கமாப் பூட்டிக்கிட்டு இரு. யார் வந்து எதைக் கேட்டாலும் கதவைத் திறக்காதே. விளக்கமா பதில் பேசிக்கிட்டிருக்காதே. பத்திரம் ஜோதி, பத்திரம்.''

''அட நான் என்ன பச்சைப் பிள்ளையா? கவலைப்படாமப் போடியம்மா'' ஜோதி சிரித்துக் கொண்டாள்.

''அதற்கில்லை ஜோதி. இந்த ஊர் ரொம்பப் பொல்லாதது....'' மோகனாவுக்கு சடக்கென குரல் கம்மிப் போனது. கண்களில் நீர் கரந்தது.

''அடடே, நீ எதுக்கு இப்பக் கண் கலங்கறே, முதல்ல நீ கெளம்பு. நான் பத்திரமா உன்னையே இருக்கேன். கவலைப்படாமே போ மோகனா'' ஜோதி, தோழியை அணைத்துக் கொண்டாள்.

காலம் ஓடிற்று. ஜோதிக்கு மோகனாவின் நடவடிக்கைகள் லேசாக உறுத்த ஆரம்பித்திருந்தன. இயற்கையிலேயே பெண்களுக்குச் சூட்சும புத்தி அதிகம். எதையும் எளிதாக அடையாளம் கண்டு கொள்வார்கள். ஜோதி திருமணமானவள். வயது குறைந்தவளானாலும் அவளுக்கு நேர்ந்த அனுபவங்கள் ரொம்பவே அதிகம். இனி புதிதாக, அதிக வேதனை தரக் கூடியதாக நேருவதற்கு ஒன்றுமில்லை.

மோகனாவின் நடை, உடை, பாவனைகளை அருகிலிருந்து நுணுக்கமாகப் பார்க்க நேர்ந்த போது, தோழி தவறாக வாழ்ந்து கொண்டிருக்கிறாள். போகக் கூடாத வழியில் நடந்து கொண்டிருக்கிறாள் என்பதை ஜோதியால் உணர முடிந்தது. அதற்குப் பின் ஜோதியால் மோகனாவுடன் மனம் திறந்து பேச முடியாமல், கூசாமல் சாப்பிட முடியாமல் முள் கிரீடம் தரித்தவள் போல் ஒவ்வொரு விநாடியும் தவிக்க ஆரம்பித்தாள்.

'கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரிப்பதே மெய்' இன்று எப்படியும் மோகனாவிடம் இதைப் பற்றி நேரிடையாகவே பேசிவிட வேண்டும் என்ற முடிவுடன் ஜோதி மோகனாவரும்வரை காத்துக் கொண்டிருந்தாள். சாப்பிடவில்லை.

இரவு பத்து மணிக்கு வந்த மோகனா சாப்பிட உட்கார்ந்தாள். கூடவே அன்று ஜோதியும் சாப்பிட அமரவே, மோகனா தோழியைக் கடிந்து கொண்டு, இனி தனக்காகக் காத்திருக்கக் கூடாது என்று அன்புடன் கூறியபடி சாப்பிட்டு முடித்தாள். பின், இருவருமாக வழக்கம் போல சற்று நேரம் ஆசுவாசப் படுத்திக் கொள்ள மொட்டை மாடிக்குப் போனார்கள். ஜோதி நேரிடையாகவே விஷயத்துக்கு வந்தாள்.

''மோகனா, உங்கிட்டக் கொஞ்சம் பேச வேண்டியிருக்கு.''

''என்ன ஜோதி...'' மோகனா நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

''மோகனா, நான் அறியாத சிறு பெண் இல்லே. இத்தனை சின்ன வயசுக்குள்ளே நெறைய அடிபட்டுட்டேன். மோகனா, உன்னோட நடவடிக்கைகள் எனக்கு விநோதமாயிருக்கு. அது நல்லதாயிருக்கும் என்றும் தோணலே. மண்டை வெடிச்சுப் போகும் அளவுக்குக் குழம்பி நிக்கறேன். தயவு செஞ்சு எந்த உண்மையையும் மறைக்காமே எங்கிட்டச் சொல்லு. உங்கிட்ட ஏதோ சரியில்லே. அதைக் கண்டுக்காம போறதுக்கு நான் யாரோ மூன்றும் மனுஷி இல்லே. உன்னைச் சரிப்படுத்த வேண்டியதுதான் என்னோட முதல் கடமை. அதுக்காக என் உயிரைக்கூட விடத் தயாரா இருக்கேன். சொல்லு. உனக்கு என்ன பிரச்னே, ஏன் இப்படி மூடு மந்திரமா நடந்துக்கறே...'' ஜோதி உருக்கமாகப் பேசினாள்.

மோகனா மௌனம் சாதித்தாள். தலையைக் குனிந்து கொண்டு, தரையில் காரையைப் பெயர்க்க முயற்சித்துக் கொண்டிருந்தாள்.

''என்னடி, ஏன் இப்படி இடிச்ச புளி மாதிரி உட்கார்ந்திருக்கே. எதுக்கு இப்படி முழிக்கிறே. உனக்கு என்னாச்சு, வாயைத் தொற. தொறந்து ஏதாவது பேசித் தொலே சனியனே,'' ஜோதிக்கு அழுகையும் ஆத்திரமுமாக வந்தது. அடக்க முடியவில்லை. குனிந்து அமர்ந்திருந்த மோகனாவைப் பிடித்து உலுக்கினாள்.

ஒரு சிறு துரும்பின் பின்னே அடைபட்டுக் கிடக்கும் நீர், அந்தத் துரும்பு அகன்றபோதே அடித்துக் கொண்டு ஓடுவதைப் போல, ஜோதியின் உரிமையான அதட்டலில் உடைந்துபோன மோகனா, தோழியைக் கட்டிக் கொண்டு வெகு நேரம் கதறி அழுதாள். ஒன்று விடாமல் ஜோதியிடம் கொட்டிக் கொட்டி அரற்றினாள். மனச் சுமையை மோகனா ஒட்டு மொத்தமாகக் கரைத்து முடித்தபோது இரவு மணி இரண்டு. கொஞ்ச நேரம் வரை ஜோதிக்கு என்ன பேசுவது என்றே புரியவில்லை. மோகனாவின் வாழ்வு இப்படிச் சிதைந்து போனதைக் கேட்ட பின் மனம் இளகிப் போனாள். அதிலே தன் துன்பத்தையும் மறந்துபோன ஜோதி மெல்லப் பேசினாள்.

''மோகனா, உனக்கு எப்படி ஆறுதல் சொல்றதுன்னே புரியல்லே. உனக்கு ஏற்பட்ட வேதனைகள் புண்களாய் இருந்தால் மருந்து போடலாம். வடுக்கள்ல ஏற்பட்டுப் போச்சு....''

''ஜோதி...'' மோகனா மறுபடியும் தேம்பினாள்.

''மோகனா, இப்படி ஏற்பட்டுப் போச்சேங்கறதினாலே, அதையே தொடரணும்னு அவசியமில்லே. இங்கே இனி ஒரு நிமிஷம் கூட இருக்கக் கூடாது. பொழுது விடிஞ்சதும் முதல் வேலையா நாம எல்லாத்தையும்மூட்டை கட்டிக்கிட்டு ரெண்டாம் பேருக்குத் தெரியாம நம்ம விளச்சனூருக்குப் போயிடுவோம், என்ன சொல்றே?''


''அங்கே போயி மட்டும் என்னாகப் போகுது? வாடின பூ இரும்பவும் மலரவா போகுது?''

''மோகனா, நான் அப்படி நினைக்கலே. நீ நினைக்கிற மாதிரி நீ வாடிப்போகவும் இல்லே. இந்த விஷப் புகை மண்டலத்தை விட்டு வெளியேறி நீ மறுபடியும் நல்லா வாழணும்னு நெனைக்கிறேன். என்மேலே நம்பிக்கை இல்லையா, மோகனா?''

''ஐயோ, ஜோதி, நீ உலகம் புரியாதவ. இந்த கேசவன் இருக்கானே, அவன் பெரிய பழிகாரன். இங்கே நான் இல்லேன்னா, கண்டிப்பா விளச்சனூர்லேதான் இருப்பேன்னு அங்கே ஓடி வந்திடுவான். அவன் கிட்டேருந்து அவ்வளவு சுலபமா தப்பிக்க முடியாது ஜோதி.''

''அப்ப ஒண்ணு செய்வோம். வேற ஏதாவது ஊருக்குப் போயிடுவோம். வேலை செஞ்சு பொழைப்போம்.''

''ஜோதி, இப்படி நான் எத்தனையோ முறை தப்பிக்கப் பார்த்திருக்கிறேன். அத்தனை தடவையும் எனக்குத் தோல்விதான். நான் சிலந்தி வலையில் மாட்டிக்கிட்ட ஈ. தப்பிக்கவே முடியாது. அப்படி ஏதாவது இப்ப செய்து, அவன் கிட்ட இரண்டு பேரும் மாட்டிக்கிறதை நான் விரும்பலே. ஜோதி, நாய் விற்ற காசு குரைக்காதும்பாங்க. உன்னையும் மயூராவையும் கண் கலங்காம வெச்சுக் காப்பாத்துவேன். கடைசி காலத்தை உன் நிழல்ல முடிச்சுக்குவேன். பேசாம, இதையெல்லாம் கண்டுக்காம இருந்திடு. என்ன அப்படிப் பார்க்கறே, எதையும் நடைமுறை சாத்தியமா யோசனை பண்ணணும். சரிசரி, எழுந்து வா, தூக்கம் வருது'' பேசிக் கொண்டே, மோகனா எழுந்து இறங்க ஆரம்



துணிகளை சோப்புப் பவுடரில் ஊற வைக்கும்போது அதனுடன் சிறிதளவு உப்பைப்போட்டு ஊற வைத்தால் அழுக்கு நீங்கி துணிகள் மிக வெண்மையாயிருக்கும். -றபி முன்னிஸா

பித்தாள். அவளைத் தொடர்ந்து ஜோதியும் அதற்கு மேல் ஒன்றும் பேசத் தெரியாமல் மௌனமாக மாடிப் படிகளில் இறங்கலானாள்; மௌனத்தில் கட்டுண்டு போன பெண்கள் இருவரும், மௌனமாக அவரவர் படுக்கையில் போய் விழுந்தார்கள்.

மன பாரம் குறைந்து விட்டதாலோ என்னவோ, படுத்தவுடனேயே அசந்து தூங்க ஆரம்பித்தாள் மோகனா.

ஆனால் ஜோதிக்கோ மனதில்பாறாங்கல்லை ஏற்றியது போல இருந்தது. தூக்கம் எங்கேயோ தொலை தூரத்தில் ஓடிப்போய் மறைந்து போக, சிந்தனையில் ஆழ்ந்து போனாள். மறுபடியும் அவள் வாழ்வில் ஒரு திருப்பு முனையில் இருப்பது போல் உணர்ந்தாள். மோகனாவை இனி தன் வழியில் திருப்புவதென்பது அவ்வளவு எளிதல்ல என்பதைப் புரிந்து கொண்டதால், இன்றே, இந்த க்ஷணமே, தன்னைப் பற்றியதொரு நல்ல முடிவை உடனேயே எடுக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டவள் பலவிதமாக யோசிக்க ஆரம்பித்தாள்.

வெகு நேர யோசனைக்குப் பின் தன்னுடைய அடுத்த நடவடிக்கை என்னதாக இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு ஜோதி வந்தபோது காலை மணி ஆறு.


அதற்கு மேல் படுக்கை கொள்ளவில்லை. சற்றுத் தள்ளிப் படுத்திருந்த மோகனாவைப் பார்த்தாள். நல்ல தூக்கம். பார்வையைத் திருப்பிப் பக்கத்தில் படுத்திருந்த மகளைப் பார்த்தாள். மலர்ந்த கண்களுடன் தாயைப் பார்த்துப் பெரிதாகச் சிரித்தாள் மயூரா.

'அம்மா, நீ எடுத்த முடிவுதான் நல்ல முடிவு — நிரந்தரமான முடிவு' என்று சொல்லாமல் சொல்லுகிறாளா?

குழந்தையை அள்ளி எடுத்துக் கொண்டு எழுந்தாள். தூக்கமின்மையால் சற்றுத் தடுமாறி, சமாளித்துக் கொண்டு பாத்ரூம் பக்கம் போனாள். கண்கள் நெருப்பாய் எரிந்தன. குளிர்ந்த நீரை அள்ளி, அள்ளிக் கண்களில் அடித்துக் கொண்டாள். கொஞ்சம் இதமாய் இருந்தது. பற்களைச் சுத்தம் செய்துவிட்டுத் தன் அறைக்குச் சென்றாள்.

இருமல் வியாதியால் அவதிப்படுபவர்கள் விளாம்பழச் சாறுடன் சிறிது தேனைக் கலந்து தினமும் உட்கொண்டால் நல்ல குணம் தெரியும்.

-ப்ரியா பானு



தலை கருங்கல்லாய்க் கனத்தது. பொருட்படுத்திக்கொள்ளவில்லை.

மடமடவென்று தன் உடைமைகளை மூட்டை கட்டி வைத்துவிட்டு, வீட்டைக் கூட்டிச் சுத்தம் செய்தாள். அதே வேகத்துடன் அடுக்களைக்குள் நுழைந்து கொஞ்சம் ரவா உப்புமாவைக் கிளறி, வேறு கின்னத்தில் சூட்டோடு எடுத்து மாற்றி வைத்து மூடினாள். பிளாஸ்க் நிறைய காப்பியைப் போட்டு நிரப்பி வைத்தாள். பாத்திரங்களை பளபளவெனத் தேய்த்து மேடையில்கவிழ்த்து முடித்த பின் குளிக்கப் போனாள்.

காலை ஒன்பதரை மணிக்கு எழுந்த மோகனாவுக்குத் தூக்கி வாரிப்போட்டது. 'இத்தனை நேரமா தூங்கியிருக்கேன்?'

சட்டென்று நேற்றைய இரவு மனத்திலே வந்து புகுந்து கொண்டு கஷ்டப்படுத்தியது. போர்வையை மடித்துப் போட்டு, படுக்கையை ஒழுங்கு செய்து விட்டு ஹாலுக்குள் நுழைந்த மோகனா ஜோதியின் கோலத்தைக் கண்டு சிலையாகிப் போனாள்.

மோகனாவைப் பார்த்துச் சிரித்தாள் ஜோதி. மடியிலே மயூரா. பக்கத்திலே மூட்டை முடிச்சு.

''என்ன பார்க்கறே மோகனா. முதல்லே பல் தேய்ச்சுக் காப்பி குடிச்சுட்டு வா... விபரமாச் சொல்றேன்.''

''!....!....!...''

''அடப் போன்னா...திகைச்சுநின்னுட்டே'' தோழியைப் பிடித்துத் தள்ளிக் கொண்டு போய் பல் தேய்க்க வைத்து, காப்பியைக் கையில்கொடுத்துக்குடிக்க வைத்து ஹாலுக்கு அழைத்து வந்தாள்.

''மோகனா, நான் விளச்சனூருக்குக் கிளம்பிட்டேன். என்னை ட்ரெயின் ஏத்திவிட்டுடு. இப்பவும் சொல்றேன். என்னோட வந்துடுடி.''

''உனக்கு என்னாச்சுன்னு இப்ப எனக்குப் புரியல்லே.''

''மோகனா, நான் அதிகம் படிக்காதவள். ஏழை விதவை. இதிலே இளம் கைம்பெண். உத்தமமான பூழ்க்கை வாழணும்னு நினைக்கிறேன். ஒரு பெண் குழந்தையை நல்ல விதமா வளர்க்க வேண்டிய பொறுப்பு வேறே இருக்கு. எங்காவது வீட்டு வேலை, வயல் வேலை எடுபிடி வேலை இப்படி ஏதாவது செஞ்சுதான் காலத்தை ஓட்டணும். வேலைக்கு வெச்சுக்கிறவங்களுக்கும் நிம்மதியா, நமக்கும் பயம் இல்லாம....''

''ஜோதி, உன் மனசு எனக்கு நல்லாப் புரியுது. நான் தடுமாறி சகதியிலே விழுந்து விட்டவள்தான். ஆனால், உறுதியா, நிச்சயமா, என்னுடைய கெட்ட மூச்சுக் காற்று கூட உன் மேலேயோ, மயூரா மேலேயோ படாது. மேலும்... மேலும்... உன்னை விட்டால் எனக்கு... எனக்கு... வேறு யார் இருக்கா ஜோதி....'' மோகனா மனம் கலங்கி பேசினாள்.

மோகனாவின் சொற்கள் ஜோதியையும் வருத்தப்படுத்தின. ''மோகனா, உன்னை தனியாத் தவிக்க விட்டுட்டுப் போறேன்னு

தயவு செஞ்சு நினைக்காதேடி. இப்பவும் சொல்றேன், என்கூட விளச்சனூருக்குப்புறப்படு. இல்லே, உனக்குப் பாதுகாப்பான வேற இடத்துக்குப் போயிடுவோம். இந்த வேலே மட்டும் வேண்டாண்டி மோகனு....''

''ஜோதி, உனக்கு விஷயம் புரியாது. இத்தக் கேசவன் ரொம்பப் பொல்லாதவன். நான் அவன் வலேயிலிருந்து தப்பிச்சு எங்க போனாலும் மோப்பம் பிடிச்சுக்கிட்டு அங்க வந்திடுவான். அவமானத்துக்கு ஆளாக்குவான். என் கதை இங்கேதான், இப்படித்தான், இவனேடுதான் முடிஞ்சாகனும். உன்னேயும், மயூராவையும் வசதியா வாழ வைக்கனும். உன்னேட அன்பான துணேயோட என் மனப் புண்களே ஆத்திக்கனும்னு நெனேக்கிறேன்.''

''மோகனு, எனக்கும் உன்னே விட்டா வேறே நாதி கிடையாது. ஆனாலும் அதுக்காக.....''

''ஜோதி. நீ இங்கேயிருந்து போயிடணும் கிறதை விட்டுட்டு இங்கே இருந்தா என்ன ஆயிடும்னு கொஞ்சம் யோசி. சின்ன வயசிலே கஷ்டப்பட்டாலும் உன் புருஷன் கூட கொஞ்ச நாள் நல்லா வசதியா வாழ்ந்தவள். இப்ப எதுக்கு வெளியே போயி வேலே செஞ்சு கஷ்டப்படணும்னு நினேக்கிறே ஜோதி. அவசரப்படாதே. இன்னும் கொஞ்சம் யோசிச்சுப் பாரம்மா...''

''மோகனு, இதிலே யோசிக்கிறதுக்கு என்ன இருக்கு? ஒண்ணுமே இல்லே. வசதி, பணம், காசு, படாடோபம் இதுக்கெல்லாம் ஏதாவது வரம்பு இருக்கா, லிமிட்டு இருக்கா? இவைகளுக்கும் மனச் சந்தோஷத்துக்கும் தான் சம்பந்தமிருக்கா. கிடையவே கிடையாது. ரண்டே ரெண்டு செட் பாவாடை தாவணியோட, இறுக்கி இறுக்கி முடிஞ்சு சேத்து வைக்கிற முப்பது காசை எடுத்துக்கிட்டுச் சினிமாப் பார்க்கப் போவமே!பழைய சோத்தைக் குண்டான்ல போட்டுக்கிட்டு, வெங்காயத்தைக் கடிச்சுக்கிட்டு, திண்ணேயில உக்கார்ந்துக்கிட்டுச் சாப்பிடுவமே, கால் செருப்பில்லாம, கையிலே குடை யில்லாமெ, வெய்யிலேயும், மழையையும் கண்டுக்காம தொண தொணன்னு பேசிக்கிட்டுப் பள்ளிக்கூடத்துக்கு நடந்தே போவமே அப்ப இருந்த சந்தோஷமும், சந்துஷ்டியும், இப்ப இந்த பாலியெஸ்டர் புடவையில, செண்ட்டுல நுரை மெத்தையில, நகையில், விதம் விதமான சாப்பாட்டுல, இல்லேங்கறது உன்னுல மறுக்க முடியாத உண்மை இல்லேயா மோகனு?''

''ஜோதி.....''

''இன்னேக்கித் தேதியில எடுத்துக்கிட்டா, பிரபலமானவங்கள்ல, பெரிய பதவியில இருக்கிறவங்கள்ல பல பேர் ஏழையாப் பிறந்து, ஏழ்மையில வளர்ந்த வங்கதான். இவங்கள்லாம் ஒரு காலத்தில வறுமையில் வாழ்ந்தவங்கன்னுயாரும் அதைக் கேவலமாப் பேசறது கிடையாது. ஒழுக்கம்கிறது ரொம்பப் பெரிசு. ஒழுக்கமில்லாதவர்கள் கண்டிப்பா அழிந்துதான் போவாங்க. அவங்களாலே வாழ்க்கையிலே உன்னதமான இடங்களேப் பிடிக்கவே முடியாது. ஏன்னு, ஏழ்மைங்கிறது. ஒரு தனிப்பட்ட மனுஷனேட பொருளாதாரப் பிரச்னே. அது சம்பந்தப்பட்டவர்களேத்தான் கஷ்டப்பட வைக்கும். ஆனு, அதே தனி மனுஷன் ஒழுக்கம் தவறி நடந்துட்டா அது அந்தப் பாரம்பரியத்தையே மட்டமாக்கிடும். அந்த அவலச் சொல் காலம் காலத்துக்கும் பேசப்பட்டு, தலேமுறை, தலேமுறையாகச் சொல்லப்பட்டு, அவமானத்தை உண்டாக்கும். எக்காரணம் கொண்டும் என்வரை காப்பாத்தப் பட்டு வந்த பாரம்பரியக் குடும்பப் பெருமையை நான் மாசுபடுத்த விரும்பலே. கண்ணியமா' வாழ வேண்டியது என் கடமைன்னு நெனேக்கிறேன். ஒரு ஆரோக்கியமான சமுதாயம் உண்டாகனும்னு, அதன் அடிப்படை ஒழுக்கத்திலேதான் இருக்குது.''

''ஜோதி, நீ சொல்றது எல்லாம் எனக்கும் புரியுது. தெரியுது. ஒத்துக்கறேன். ஆனல் என் நிலேமை வேறே. அது சரி, நீ என்கூட இருந்தால்கூட உன் பாரம்பரியம் கெட்டுடும்னு நெனேக்கிறியா? காலப் போக்கிலே எங்கே நம்மையும் இவள் இதிலே இழுத்து விட்டுடுவாளோன்னு என் மேலே அவநம்பிக்கைப் படறியா ஜோதி?''

''மோகனு, நான் சின்ன வயசுக்காரி. வாழ வழியில்லாதவள். கையிலே குழந்தை வேறு. இங்கே தங்கி யிருந்தா, சந்தேகத்துக்கிடமில்லாமல் சம்சயம் உண்டாகத்தான் செய்யும். இந்த விஷயத்திலே நான் விளேயாட விரும்பலே. நான் ஏழையாப் பொறந்துட்டாலும், எங்க குடும்பத்தோட நேர்மையும், ஒழுக்கமும் எனக்கு நல்ல வாழ்க்கையைத்தேடிக் கொடுத்தது. எனக்குத்தான் கொடுத்து வைக்கவில்லே. என் மகளுக்கு என்னுல பணபலத்தை உண்டாக்க முடியாது. மயூரா நல்ல குடும்பத்துப் பொண்ணுங்கிற பக்க பலத்தையாவது காப்பாத்தித் தரனுமில்லே... அப்புறம், வந்து....''

''சொல்லு ஜோதி, ஏன் தயங்கறே, சும்மா சொல்லு.'' மோகனு சற்றுக் கோபமாகவே குறுக்கிட்டாள்.

உடலே சீராக வைத்துக்கொள்ள உணவு உண்டவுடன் சிறிது தேன் அருந்தினுல் போதுமானது. உடல் பெருக்கவேண்டுமா? தினமும் இரவு பாலுடன் தேனேக் கலந்து அருந்தினுல் நல்ல பலன் கிடைக்கும்.

-ப்ரியா பாலு

"என்னை மன்னிச்சிடு மோகனா. உன் மனதை நோகச் செய்யணும்னு இதை நான் சொல்லலே. தவறான வழியில வர்ற காசில மயூராவை வளர்க்க நான் விரும்பலே. நாய் வித்த காசு குரைக்கும்னு நம்பறேன்."

"ஜோதி, நீ நல்லாவே பேசறே. பேசக் கூடிய நெலமையிலே நீ இருக்கே. உன் வாழ்க்கையிலே ஏற்பட்ட அனுபவங்கள் வேற மாதிரி. என் மாதிரி உனக்கும் ஏற்பட்டிருந்தா, ஒருவேளை, நீ... என்னை...." மோகனா முடிப்பதற்குள் பட்டென இடைமறித்தாள் ஜோதி.

"மோகனா, மானத்துக்காக எதையும் இழக்கலாம். ஆனா, எதுக்காகவும் மானத்தை இழக்கக் கூடாது. உன் நிலைமை எனக்கு வந்திருந்தா, வந்திருந்தா என்ன, இனிமே இந்த உலகத்திலே தனியா எதிர் நீச்சல் போடப் போற எனக்கு வரப் போற சோதனைகள் நெறைய இருக்கும். அப்படி, உனக்கு வந்த நிலை என்னையும் மீறி எனக்கு வருமானால்...."

"......"

"மோகனா, நோய் வாதனை அதிகமாகி அதிகமாகி அவதிப்படறவங்களை, அந்த நோய் சரியாகாதுங்கற நிலைமையிலே நோயாளிக்கு ஊசி போட்டுக் கருணைக் கொலை செய்திடற மாதிரி, சரியான வாழ்க்கை வாழ முடியாதுங்கற நிலைமை எனக்கு வந்திட்டா, தவறான வாழ்க்கையினால் ஏற்படப் போற மன வேதனையைக் குறைக்க, அந்த நிமிஷமே மயூராவோட நான் மாண்டு போவேன். உயிர் என்ன வெல்லக் கட்டியா? அப்படியும் வாழத்தான் வேண்டுமா என்ன? அப்படி வாழ்ந்துதான் என்னத்தைச் சாதிக்கப் போகிறோம்? யோசிச்சுப் பாரு..."

பேசி முடித்துவிட்ட ஜோதி, தோழியைத் திரும்பிப் பார்த்தாள்.

மோகனா வாயைத் திறக்காமல் சற்றுநேரம் மௌனமாக அமர்ந்திருந்தாள். பின் சடக்கென எழுந்து, "ஓ.கே. ஜோதி, ரெடி பண்ணிக்க. இதோ குளிச்சிட்டு வந்துடறேன்" என்றபடி விரைந்து பின் பக்கம் சென்றாள்.

எழும்பூர் இரயில்நிலையம். இரயில்நகரும் வரை நின்று கொண்டிருந்த மோகனா தானும் கூடவே நகர்ந்து கையசைத்து ஜோதிக்கு விடை கொடுத்தாள். அந்த நிமிஷம்வரை மோகனா ஒருவேளை தன்னுடன் வந்துவிடக் கூடும் என்ற ஆவலாசையில் உட்கார்ந்திருந்த ஜோதி, அவள் அப்படி வராமல் போகவே, நிரந்தரமாகத் தன் ஆருயிர்த் தோழியைப் பிரிந்து போகிறோமே என நினைத்துக் கண்ணீர் பெருக்கினாள்.

"மோகனா, உனக்காக ஜோதி, உன் ஜோதி எப்போதும் அவள் வீட்டுக் கதவைத் திறந்தே வைத்திருப்பாள், எத்தனை காலமானாலும் சரி, எந்த நிலைமையிலும் சரி, அவள் உன்னைச் சேர்த்துக் கொள்ளத் தயங்கவே மாட்டாள். இதை நீ என்னைக்கும் மனசிலே வெச்சுக்கோ. மனசு நிறைய வேதனையோடதான்டி போறேன்..."

வண்டியின் வேகம் அதிகரித்தது. மோகனா நின்றுகொண்டாள். தோழிகள் இருவரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டிருக்கும்போதே பார்வையிலிருந்து மறைந்து போயினர்.

வண்டி ஒரு புள்ளியாக மறையும் வரை அதையே பார்த்துக் கொண்டிருந்த மோகனாவுக்கு தான், தன் வாழ்க்கையின் சகலவிதமான அம்சங்களையும் இழந்து விட்டது போல் இருந்தது. பலவீனமாக உணர்ந்தாள். அப்படியே அருகிலிருந்த சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்து கொண்டாள்.


'உயிர் என்ன வெல்லக் கட்டியா? அப்படியும் வாழத்தான் வேண்டுமா என்ன? அப்படி வாழ்ந்துதான் என்னத்தைச் சாதிக்கப் போகிறோம்?! யோசிச்சுப் பாரு....'

ஜோதியின் வார்த்தைகள் மோகனாவைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தன. அவளது மனதைத் துளைத்தெடுத்தன. யோசித்தாள்.

ஒரு மணி நேரம் கழித்து எழுந்து, ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தவள் எதிர்ப் பக்கமாக அமைந்திருந்த பார்மஸிக்குச் சென்றாள். கைப் பையைத் திறந்து பிரிஸ்கிரிப்ஷனை எடுத்து நீட்டினாள். பில்லுக்கு ஆன காசைக் கொடுத்துவிட்டு, கடைக்காரர் நீட்டிய தூக்க மாத்திரைகளடங்கிய பாட்டிலை, சந்தேகத்துக்கிடமின்றி, வசீகரமான புன்னகையுடன் பெற்றுக் கொண்டவள், திரும்பி வீட்டை நோக்கிப் பயணப்பட்டாள், கேசவனுக்கும் தனக்குமான இறுதிப் பயணத்துக்கு ஏற்பாடு செய்ய!



3 மாதத்திற்குப் போதுமான இரும்புச்சத்துடன் குழந்தை பிறக்கிறது



3 மாதம் ஆனபின், குழந்தைக்குத் தேவையான இரும்புச்சத்து பாலில் மட்டுமே கிடைப்பதில்லை.

இரும்புச்சத்து அதிகமுள்ள **ஃபாரெக்ஸ்** கொடுங்கள்

''தாயிடமிருந்து ஏராளமான இரும்புச் சத்தைப் பெற்று குழந்தை பிறக்கிறது. பிறந்த பிறகு மெல்லமெல்ல இரும்புச் சத்தின் அளவுக் குறையத் தொடங்குகிறது. பால் நல்ல உணவாயிருப்பினும் இரும்புச் சத்துப் பற்றுக் குறையினால் அது முழுமையாவதில்லை. ஆகவே, குழந்தைக்கு இரும்புச் சத்து அடங்கிய திட உணவுத் தேவைப் படுகிறது.''

—Dr. Subhash C. Arya ''Infant & Childcare for the Indian mother''

டாக்டர்கள் ஃபாரெக்ஸ். சிபாரிசு செய்யக் காரணம்?


குழந்தைக்கு திட உணவைத் துவங்குவதற்கு தனிப்படத் தயாரிக்கப் பட்டது ஃபாரெக்ஸ்—குழந்தையின் இளம் ஜீரண சக்திக்கு ஏற்ப பக்குவம் செய்யப்பட்டது. இதில் விரைந்த வளர்ச்சிக்கான புரதச் சத்து; சக்திக்கான கார்போஹைட்ரேட், கொழுப்பு; எலும்புகளை திடமுடனும் பற்களை பலமுடனும் வளரச் செய்திடப் போதுமான கால்ஷியம், பாஸ்பரஸ், வைட்டமின்கள் உள்ளன. குழந்தையின் இரத்தத்திற்கும் உடல் ஆரோக்கியத்திற்கும் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் அவசியமான இரும்புச் சத்தும் ஏராளமாக அடங்கியது—ஃபாரெக்ஸ்.





டாக்டர்கள் சிபாரிசு செய்வது ஃபாரெக்ஸ்
குழந்தையின் விரைந்த முழுவளர்ச்சிக்கு உன்னதமான திட உணவு

CASGLF-30-203 TAM





புது வருட வாழ்த்து அட்டைகள்

ரமணி ரங்கநாதன்



ஸ்னோ வொயிட் டிராயிங் பேப்பர்
இது பெரிய பேப்பர் கடைகளில் சுலபமாகக்கிடைக்கும்
ஆகாய நீலத்தில் வெல்வெட் பேப்பர்
இண்டியன் இங்க் - கருப்பு வர்ணம்
தொட்டு எழுத மெல்லிய நெ. 0 பிரஷ் 1
வெட்டுவதற்குக் கத்தரிக்கோல்.
ஒட்டுவதற்கு பெவிகால் அல்லது பசை.
சாதாரண சிவப்பு இங்க்
பழைய பல் தேய்க்கும் பிரஷ் ஒன்று.
பென்சில் ஒன்று.

புது வருடம் பிறக்கப்போகும் நாளில் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் தங்கள் கையால் தயாரித்த வாழ்த்துக் கார்டுகளை அனுப்ப ஆர்வமும் ஆசையும் உள்ளவர்களுக்குச் சில கார்டுகள் செய்யும் வழிமுறைகளை இங்கே எழுதுகிறேன்.

செய்முறை:

வாழ்த்து அட்டைக்கான அளவில் டிராயிங் பேப்பரை வெட்டி எடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் வெட்டிய பேப்பர் புத்தகம் பிரிப்பது போல இரட்டையாக நீண்ட வாக்கில் இருக்க வேண்டும். 10க்கு 15 செ.மீ. அளவில் இருந்தால் கவர்ச்சியாக இருக்கும். புத்தகம் போல் பிரித்து, உட்பக்கம் இரண்டாம் பக்கத்தில் வலது பக்கம் வரும் அட்டையில் தான் நீங்கள் படம் வரையவேண்டும். முதலில் ஓர் அட்டையை 5 செ.மீ. குறுக்களவு வருமாறு வட்டமாகக் கத்தரித்துக்கொள்ளவும். இதை கார்டின் மத்தியில் வைத்து சிவப்பு இங்க் கொண்டு பல் தேய்க்கும் பிரஷ்ஷால் ஸ்பிரே செய்ய வேண்டும்.

இங்கியை ஒரு தட்டில் பரவலாக கொட்டி வைத்துக் கொண்டு பல்தேய்க்கும் பிரஷ்ஷை அதில் லேசாகத் தொட்டு, அதை வட்டமான அட்டைக்கு மேலாக வைத்துக்-கொண்டு பென்சிலால்நீவி விடுங்கள். சிவப்பு மை மிக நுண்ணிய புள்ளிகளாக கார்டில் தெளித்து விழும். அதை ஒரே சீராக வட்டத்தைச் சுற்றி விழும்படி அட்டை அசையாத வண்ணம் ஸ்பிரே செய்து கொள்ளவும்.

பிறகு வெல்வெட் பேப்பரை எடுத்து, (சுமார் கார்டின் பாதி அளவுக்கு) வெட்டி எடுத்து அதை இரண்டாக மடிக்கவும். மடிக்கும்போது வெல்வெட் பகுதி உட்பக்கமாக இருக்க வேண்டும். பின்னர் மடித்த ஒரு பகுதியில் ஒரு குருவியை (படத்தில் காணப்படும் குருவியை) அதில் டிரேஸ் செய்து இரட்டையாகவே கத்தரித்து எடுக்கவும். ஒரே சமயத்தில் ஒரே மாதிரியான குருவிகள் ஒன்றையொன்று பார்த்தது போல வந்து இருக்கிறது இல்லவா? இவைகளை ஒன்றுக்கொன்று சற்றே மேலும் கீழுமாக வட்டமாக ஸ்பிரே செய்த அட்டையின் மத்தியில் ஒட்ட வேண்டும். ஸ்பிரே செய்த பின் அட்டையில் நிலவு போல் வட்டம் வந்து இருக்கிறது. அதன் முன் பக்கம் இருப்பது போல் குருவிகள் காணப்படும்.

பிறகு இறகுகளையும் இலைகளையும் இண்டியன் இங்க் கொண்டு மெல்லிய பிரஷ்ஷால் பூர்த்தி செய்து குருவிகளுக்கு கண்களையும் புள்ளி போல் வைக்கவும். வாழ்த்துக்களை மேல் அட்டையில் எழுதுங்கள்.

ரோஜாப் பூக்கள்

கருப்பு, வெள்ளை, பச்சை, ஆரஞ்சு வர்ண, வெல்வெட் பேப்பர்கள்,
ஸ்நோ ஒயிட் டிராயிங் பேப்பர் கார்டு,
ஒட்டுவதற்கு பெவிகால்
கத்தரிக்கோல்
கார்பன் பேப்பர்
பென்சில்

படத்தில் காணப்படும் டிசைனில் இரண்டு ரோஜாக்களை வெள்ளை நிறமாகவும், இரண்டு ரோஜாக்களை ஆரஞ்சு வர்ணமாகவும் டிரேஸ் செய்யுங்கள். இலைகளை பச்சை நிறத்தில் டிரேஸ் செய்யவும். முன்பு செய்ததுபோல் டிராயிங் பேப்பரை இரண்டாக மடித்து உட் பக்கமாக ஓரங்களில் ஒரு செ. மீ. அளவு பார்டர் வரும்படி அளவு எடுத்துக் கருப்பு நிற வெல்வெட் பேப்பரை அதில் ஒட்டவும்.

இந்தக் கருப்புப் பின்னணியில்தான் டிசைன் செய்ய வேண்டும். டிரேஸ் செய்த ரோஜாக்களை வெட்டி எடுத்து அந்தக் கருப்புப் பேப்பரில் அமைப்பாக ஒட்டுங்கள். இலைகளையும் அப்படியே ஒட்டவும். வாழ்த்து அட்டை தயார்!

இயற்கைக் காட்சி

பச்சை, கருப்பு, ஆரஞ்சு வர்ண வெல்வெட் பேப்பர்
கருப்பு நிற இண்டியன் இங்க்
நீலம் மற்றும் மஞ்சள் நிற ஸ்கெட்ச் பென் அல்லது போஸ்டர் கலர்
கத்தரிக்கோல்
டிராயிங் பேப்பர்

தென்னை மரத்தின் இலைகளைச் சேர்த்து பச்சை நிற வெல்வெட் பேப்பரின் பின் பக்கம் வரைந்து அதை வெட்டவும். படகு கருப்பு வர்ணப் பேப்பரிலும், நிலவு மற்றும் படகின் மேல்புறத் துணி இரண்டும் ஆரஞ்சு வர்ணமாகவும் வரைந்து வெட்டி எடுக்கவும். முதலில் டிரேஸிங் பேப்பரில் ஓரத்தில் ஒரு செ. மீ. அளவு பார்டர் விட்டு மஞ்சள் நிற ஸ்கெட்ச் பேனாவால் பார்டர் வரைந்து கொண்டு தண்ணீர் மட்டம் வரை மஞ்சள் வானமாகப் பூச வேண்டும்.

பிறகு தென்னை மர இலையை ஒட்டி கருப்பு இண்டியன் இங்க் கொண்டு மரத்தின் தண்டு பாகத்தை வரையவும். கீழேயும் சில புற்கள் இருப்பது போல் காட்டவும். படகையும் தண்ணீர் பாகத்தில் ஒட்டவும். பிறகு நீலவர்ண பேனாவால் ஸ்கெட்ச் பேனாவால் தண்ணீரையும், படகின் பிரதிபிம்பத்தைக் கருப்பு இண்டியன் இங்கினாலும் பூர்த்தி செய்யவும். முன்பக்கம் வாழ்த்துக்களை எழுதவும். கவர்ச்சியாக எழுதத் தெரியாதவர்கள் எழுத்துக்களை வேறுகார்டுகளிலிருந்து டிரேஸ் செய்து எழுதலாம்!

ஸ்ரீ சேஷாத்ரி சுவாமிகள்

ஸ்ரீ வேணுகோபாலன்



சென்ற நூற்றாண்டின் பிற்பகுதி வரத ராஜ சாஸ்திரி என்பவருக்கு வெகு நாட்களாகக் குழந்தைகள் இல்லை. மகா பண்டிதர் அவர். தேவி உபாசகர். வடமொழியில் விற்பன்னர். பிள்ளை இல்லாக் குறை ஒன்று தான் அவர் மனத்தை வருத்திக் கொண்டிருந்தது.

அவரது மனைவி மரகதம்மாள் நல்ல குணவதி. அருமையாகப் பாடுவாள். காமாட்சி அம்மனின் பக்தை! அம்மனைத் தினமும் பாட்டால் வழிபடுபவள்.

இந்த லட்சிய தம்பதிகள் தங்கள் குறையோடு வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்தபோது, காமகோடி சாஸ்திரி என்பவர் ஒரு நாள் வந்து சேர்ந்தார்.

மரகதம்மாளின் சித்தப்பா அவர்.

காமாட்சி அம்மனின் பிரசாதமாக ஒரு திரள் வெண்ணெயைக் கொடுத்து, ''தேவியின் பிரசாதமிது! இதை ஏற்றுக்கொள்ளுங்கள்! உங்களுக்கு நல்ல புத்திரன் ஒருவன் பிறப்பான். அவன் பெரிய ஞான யோகியாகத் திகழ்வான்'' என்றார்.

தம்பதிக்கு ஒரே மகிழ்ச்சி!

காமகோடி சாஸ்திரி கூறியது போல் வெகு சீக்கிரம் மரகதம் கர்ப்பிணியானாள். 1870ம் ஆண்டு ஜனவரி 22ம் தேதி நடுநிசியில் ஓர் ஆண் மகவைப் பெற்றெடுத்தாள்.

பிறந்த தினம் சனிக் கிழமை! அந்தக் கிழமை திருப்பதிப் பெருமாளுக்கு உகந்த நாளானபடியால் குழந்தைக்கு சேஷாத்திரி என்று பெயர் வைத்தார்கள்.

குழந்தை ஆரோக்கியமாக வளர்ந்து வந்தது.

மூன்று வயதிருக்கும்போது குழந்தை சேஷாத்திரியை அழைத்துக் கொண்டு கோவிலுக்குப் போனாள்.. மரகதம். கோவிலில் திருவிழா. பல பொம்மைக் கடைகள் வந்திருந்தன. ஒரு பொம்மைக் கடையில் இருந்த கிருஷ்ணனைப் பார்த்த சேஷாத்திரி, ''அது வேணும்?'' என்று முரண்டு பிடிக்க ஆரம்பித்தான். தாயார் பேசாமல் இருக்க கடைக்காரன் குழந்தை தோற்றத்தில் கிறங்கி, ''பாப்பா! நீயே வச்சுக்க!'' என்று சொல்லி பொம்மையை அவன் கையில் கொடுத்தான். சேஷாத்திரி மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டான்.

மறுநாள் கடைக்காரன் சேஷாத்திரியைத் தேடி வந்தான். மரகதம்மாள் கேட்டபோது, ''அம்மா! இந்தக் குழந்தையின் கை சாதாரணக் கை அல்ல! பொன் கை! அதற்கு பொம்மை கொடுத்த வேளையிலே எனக்கு ரெண்டு மணி நேரத்துக்குள்ளே எல்லாப் பொம்மையும் வித்துடுத்து!'' என்றான்.

மரகதம்மாளுக்குப் பெருமையாக இருந்தது. சிறு வயதிலேயே சேஷாத்திரி தன் தந்தையிடமிருந்து வடமொழி, வேதாந்தங்களும், நியாய வியாக்ரணங்களும் கற்றுக் கொண்டான்.

தாயார் மரகதம்மாள் அவனுக்கு சங்கீதம் கற்றுக் கொடுத்தாள். சுவாமி மீது தோத்திரங்களும், பஜனைப் பாடல்களும் சொல்லிக் கொடுத்தாள்.

சேஷாத்திரி சிறுவனாக இருக்கும்போது, தந்தை வரதராஜ சாஸ்திரி இறந்தார்.

இதனால் அவன் சின்னத் தாத்தாவான காமகோடியிடம் அனுப்பப்பட்டான்.

அவரிடம் வேதாந்தம் கற்றுக்கொள்ள ஆரம்பித்தான் அவன்.

காமகோடி சாஸ்திரியிடம் இருந்துவந்த போது ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

தாசில்தார் ஒருவர் காமகோடியிடம் வந்து ராமாயணமும் பாகவதமும் பிரவசனம் செய்யும்படி கேட்டுக் கொண்டார். ''எனக்கு வயசாகி விட்டது! உடம்பும் சரியில்லை. என்னால் இயலாது! ஆனாலும் ஒன்று சொல்வேன். என் பேரன் சேஷாத்திரி இருக்கிறானே இந்தச் சிறு வயதிலேயே பெரிய பண்டிதனாக இருக்கிறான். அவனைப் பிரவசனம் செய்யச் சொல்கிறேன். நன்றாகவே இருக்கும்'' என்றார் காமகோடி. தாசில்தாரும் சம்மதித்தார்.

ராமாயணத்தையும் பாகவதத்தையும் ஒரு வருஷம் தொடர்ந்தாற்போல் எல்லோரும் போற்றும் வண்ணம் பிரவசனம் செய்து முடித்தான் சேஷாத்திரி.

பின்னர் தாத்தா காமகோடியோடு காஞ்சீபுரம் வந்தான் சேஷாத்திரி. அங்கே காமகோடி சாஸ்திரி சந்நியாசம் வாங்கிக்கொண்டார். சீக்கிரம் சமாதியும் ஆனார்.

தாயாரிடமே திரும்பினான் சேஷாத்திரி. மரகதம்மாள் அவனுக்குத் திருமணம் செய்து வைக்க எண்ணினாள். அவனுடைய நாத்தனார் பெண்ணைப் பற்றிப் பேச்சு எழுந்தது. ஆனால் மரகதம்மாளின் மைத்துனர், ''வேண்டாம். பையன் பெரிய ஞானியாகப் போகிறான். யோக வாழ்க்கைதான் அவனுக்கு உசிதமானது. அவனுக்குக் கல்யாணம் வேண்டாம்'' என்று கூறினார்.

மரகதம்மாள் பதில் ஏதும் சொல்லவில்லை.

சீக்கிரத்தில் அவள் நோய்வாய்ப்பட்டாள்.


ஒரு ஏகாதசி தினத்தில் மகன் சேஷாத்திரியின் மடியில் ஒரு கையைப்போட்டுக்கொண்டு சில தோத்திரப் பாடல்களைப்பாடினாள்.



யோசனை

எலுமிச்சையை வெது வெதுப்பான நீரில் போட்டு வைத்து சாறு பிழிந்தால் சாதாரணமாகக் கிடைக்கும் சாற்றை விடக் கூடுதலாகக் கிடைக்கும்.

பாத்திமுத்து



சேஷாத்திரியையும் பாடச் சொன்னாள். அதைக் கேட்டவாறு ''அருணாசலா! அருணாசலா! அருணாசலா!'' என்று கூறினாள். அவள் ஆத்மா விடுதலை அடைந்தது.

சேஷாத்திரி அனாதையானான். சிற்றப்பாவிடம் அடைக்கலம் புகுந்தான். புற உலக வாழ்க்கையில் அவனுக்கு ருசி குறைய ஆரம்பித்தது. சரியாகச் சாப்பிடுவதுமில்லை, தூங்குவதுமில்லை. மணிக் கணக்காக தியானத்திலேயே ஈடுபட்டான். ராமர், அருணாசலேச்வரர், காமாட்சி இம்மூவரும்தான் அவரது இஷ்ட தேவதைகள்.

இரவு இரண்டு மணிக்குத் திடீரென்று காமாட்சி கோவிலுக்குப் போவார். வலம் சுற்றியவாறு மூக பஞ்சதியைச் சொல்லுவார்.

சமயங்களில் சுடுகாட்டுக்குப் போய், இரவு முழுவதையும் அங்கேயே கழிப்பார்.

சித்தப்பா ''அவனைச் சுடுகாட்டுக்குப் போகாதே!'' என்று பலமுறை வற்புறுத்திப் பேசுவார்.

சேஷாத்திரி உடனே பதில் சொல்லுவான். ''சித்தப்பா! அங்கேதான் சிவன் நர்த்தனமாடினார். சிவனது பக்தனாகிய நான் எந்த இடத்தையும் கேவலமாக மதிக்கக் கூடாது!'' என்பான்.

அவனது இதே வார்த்தையைப் பல முறை கேட்ட பெரியவர் ஒருவர், ''சுடுகாட்டுக்குப் போய்விட்டு ஒருவர் நேராக வீடு திரும்பலாகாது!'' என்றார்.

சேஷாத்திரி யோசித்தான். ''அப்படியா?'' என்று சொல்லிச் சித்தப்பாவையும் சின்னம்மாவையும் வணங்கி விடை பெற்றான். வீட்டை ஒரேயடியாகத் துறந்து காஞ்சிபுரம் தெருக்களில் திரிய ஆரம்பித்தான்.

ஒரு நாள் பாலாஜி பாபா என்ற சன்னியாசியைக் கண்டு காலில் விழ அவர் சேஷாத்திரிக்குத் தீட்சைகொடுத்தார். ஆனால் கையில் திரிதண்டத்தையும், கமண்டலத்தையும் விரும்பாத சேஷாத்திரி ஒரு தத்தாத்ரேயர் போல் அவைகளையும் துறந்து மரத் தடிகளில் வாழ்ந்து கிடைத்த உணவை மட்டும் புசிக்க ஆரம்பித்தார்.

மரகதம்மாவின் வருடாந்தர திவசம் வந்தது. சேஷாத்திரியின் சித்தப்பாவெளியே போய் அவனைப் பிடித்து இழுத்து வந்து வீட்டுக்குள் ஓர் அறையில் அடைத்து வைத்தார்.

திவசம் முடிந்த பிறகு அறையைத் திறந்து பார்க்க சேஷாத்திரியைக் காணவில்லை.

அதே நேரத்தில் இருபது மைல் தொலைவில் உள்ள காவேரிப்பாக்கத்தில் அவர் தென்பட்டார்.

விஷயம் தெரிந்த சித்தப்பா பெரிதும் ஆச்சரியப்பட்டார்.

பிறகு பல ஊர்களில் அலைந்து திரிந்த சேஷாத்திரி, மௌன விரதம் பூண்டு கடைசியில் திருவண்ணாமலை வந்து சேர்ந்தார். அப்போது அவருக்கு வயது பத்தொன்பது.

திடமான உடலமைப்பும் அழகான தோற்றமும் கொண்ட சேஷாத்திரி திருவண்ணாமலையில் ஒரு அவதூதர் போல் அலைய ஆரம்பித்தார். தன்னைப் பற்றி அவர் அக்கறை எடுப்பதில்லை. அபூர்வமாகத்தான் குளிப்பார். யாராவது உணவு கொடுத்தால் உண்பார். எதையும் பற்றிப் பொருட்படுத்தாமல் வீதிகளில் ஒரு பைத்தியக்காரன் போல் திரியலானார்.

உன்மத்தமான ஒரு வாலிபன் தெருக்களில் அலைவதைக் கண்டால் சிறுவர்கள் விடுவார்களா?

சேஷாத்திரியை எப்போதும் சூழ்ந்து கொண்டு கேலி செய்து கூத்தாடுவார்கள்.

சேஷாத்திரி அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. அதற்கு மாறாக மேலும் உன்மத்தமான செயல்களைச் செய்ய ஆரம்பித்தார்.

தெருப் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு இஷ்டப்பட்ட தெருக்களில் சுற்றுவார். குப்பை வண்டி தென்பட்டால் அதில் ஏறி குஷியாக ஓட்டுவார். பையன்கள் கைகொட்டி ஆர்ப்பரிப்பார்கள்.

தெருவில் யாராவது பெண்களைக்கண்டால் காமாட்சி, மரகதம் என்று சொல்லி கீழே விழுந்து வணங்குவார்.

சமயங்களில் அவர்களை ஆசீர்வதிப்பார். அல்லது குழந்தையைப் போல் அவர்களுடன் விளையாடுவார்.

திடீரென்று தோன்றினால் சில வீடுகளுக்கு சென்று ''பசிக்கிறது'' என்பார்.

உணவுகொடுத்தால் சில சமயம்தான் உண்பார். சில சமயம் தூரத் தள்ளுவார். அல்லது அதை எடுத்து வந்து நாய்களுக்குக் கொடுப்பார்.

சில சமயம் திடீரென்று கடைகளுக்குள் புகுவார். அங்குள்ள சாமான்களை வாரி இறைப்பார். கடைக்காரர்கள் அவரை

எதுவும் செய்ய மாட்டார்கள். அவர் கடைக்குள் புகுந்தாலே அதை அதிர்ஷ்டம் என்று வரமாட்டாரா என்று ஏக்கத்தோடு காத்திருந்தார்கள்.

சேஷாத்திரி சுவாமிகள் திருவண்ணாமலை வந்த ஆறு வருடங்களுக்குப் பிறகுதான் ரமண மகரிஷி அங்கே வந்து சேர்ந்தார்.

ரமண மகரிஷியை ஊர்ப் பையன்கள்சுற்றி கலாட்டா செய்த வண்ணம் ஆரம்ப காலங்களில் சேஷாத்திரி சுவாமிகள் முயற்சிகள் எடுத்தார். ரமணரைத் தமது பிள்ளைபோல் கருதிப் பாதுகாத்து வந்தார்.

குகையில் ரமணர்இருந்தபோது இருவரும் சந்தித்திருக்கிறார்கள்.

ரமணரைச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்த சேஷாத்திரி சுவாமிகள், ''அவன் நினைப்பது எனக்குப் புரியவில்லை'' என்றார்.

''அருணாசலேசரைத் துதித்தால் அவர் நமக்கு மோட்சம் அளிப்பார்'' என்றார் சேஷாத்திரி.

''யார் யாரைத் துதிப்பது?'' என்றார் ரமணர்.

''எனக்கு அதெல்லாம் தெரியாது. எனக்குக் கும்பிடத்தான் தெரியும்''என்று சொல்லி மலையைப் பலமுறை வணங்கிவிட்டுப் போனார் சேஷாத்திரி சுவாமிகள்.

இருவரும் ஞானிகளாக இருந்தாலும் இந்த உரையாடல் இருவரது தனித் தனிக் கோணங்களைக் காட்டுகின்றன.

சீக்கிரம் சேஷாத்திரிசுவாமிகளை பக்தர்கள் அண்ட ஆரம்பித்தார்கள். நீதிபதியிலிருந்து பாமரர்கள்வரை அவரது உபதேச வார்த்தை கேட்பதற்காக நிறையப் பேர் திரண்டு வந்தார்கள்.

சுவாமிகள் அவர்களை ஆசீர்வதித்ததும் அல்லாமல் முடிந்தால் அவர்களுக்கு உதவிகளும் செய்தார். பக்தர்கள் அவரிடம் பல சித்துக்கள் நிகழ்வதைக் கண்டார்கள். சுவாமிகளின் உதட்டில் எப்போதும் ஒரு புன்னகை ஒட்டிக் கொண்டிருக்கும். ரொம்பவும் விநயத்தோடு இருப்பார். துக்கப்படுகிறவர்களுக்கு இதமான ஆறுதலைச் சொல்வார்.

ஒருசமயம் அவரது அடியார்கள் பலர் அவருக்கு எண்ணெய் ஸ்நானம் செய்வித்து குடம் குடமாகத் தண்ணீரை அபிஷேகம் செய்தார்கள்.

சுவாமிக்கு உடனே மலேரியா ஜுரம் கண்டது. சுவாமிகள் மருந்தும் உட்கொள்ளவில்லை. உணவும் உட்கொள்ளவில்லை. இவ்விதம் நாற்பது நாட்கள் இருந்தார். அதன் பின் காலை நாலு மணிக்கு அருணாசலர் கோயிலுக்குச் சென்றார்.

சுவாமியிடம் விடை பெற்றார். திரும்பி வரும்போது பலவீனம் தாக்க, கீழே விழுந்தார். மெல்ல எழுந்து கோவில் பட்டரின் வீட்டுத் திண்ணை மீது உட்கார்ந்தார். பத்மாசனம் போட்டு உட்கார்ந்து கண்களை மூடினார். நிரந்தரமாக மூடிவிட்டார்.


அவர் முக்தி அடைந்த தேதி ஜனவரி நான்கு 1929.

அவரது சமாதிச் சடங்குகளில் அவரது பக்தர்கள் அனைவரும் அன்றி ரமண மகரிஷியே கலந்து கொண்டார்.

சுவாமிகளின் உபதேசம்—

''பரமாத்மாவோடு உன்னை இனம் கண்டு கொள்ளப் பார்! அந்தப் பரமாத்மா தான் ராமன், கிருஷ்ணன், சிவன், சக்தி, எல்லாம் என்று உணர்ந்துகொள்.''

விளக்கெண்ணெ




தேங்காய் எண்ணெயில் சிறிது விளக்கெண்ணெயைச் சேர்த்துக் கலந்து வைத்தால் குளிர் காலத்தில் உறையாது.

கண்ணில் தூசி, மண் விழுந்து உறுத்தினால் இரவு, படுக்கப் போகுமுன்பு, கண்களில் ஒரு சொட்டு விளக்கெண்ணெ விட்டுக்கொண்டு தூங்கினால் காலையில் கண்கள் புதுப்பொலிவுடன் இருக்கும்.

மாடுகளுக்கு வயிற்றில் புழு இருந்தால் உரித்த பூவன் வாழைப் பழத்தை விளக்கெண்ணெயில் தோய்த்துக் கொடுக்க குடல் சுத்தமாகும்.

உடம்பில் எங்காவது நரம்புச் சுளுக்கு ஏற்பட்டால் அந்த இடத்தில் விளக்கெண்ணெயைத் தடவி நன்கு நீவிவிட்டால் சுளுக்கு நீங்கும்.

—என்வீயென்



அன்புள்ள வனிதா,

நான்கு நாட்களுக்கு முன், கோடி வீட்டு நிர்மலா என்னைத் தேடி பரபரப்பாக வந்தாள். அவள் வேலைக்குச் செல்லும் பெண். அத்துடன் இரண்டு குழந்தைகள். என்னவோ ஏதோ என்று நான் பதறித்தான் போனேன்.

''அக்கா! உங்க வீட்ல ஏதானும் பெரிய சட்டி பானை இருக்குமா?''

''சட்டியா?'' வியப்புடனும், திகைப்புடனும் கேட்டேன்.

''ஆமாம். வாசல்லே புளி வந்துதுன்னு நிறைய வாங்கிட்டேன். இனிமே, மார்க்கெட் போய் சட்டி வாங்கி வர நேரமில்லே. சட்டி பானையிலதான் புளியை அடைக்கணுமாம்!''

எனக்கு அவள் மீது பரிதாபம் எழுந்தது. ''ஏதானும் இருக்கும். பார்த்து எடுத்து வரேன். ஆனா... புளியை எதுக்காக இப்படித் திமர்னு ஒரேயடியா வாங்கினே?... விலை மலிவுன்னா?'' என்று கேட்டேன்.

''வருடாந்தர சாமான் வாங்கிப் போடறதும் விலைவாசி ஏறிடும்னுதான். ஆனா என் விஷயத்திலே அப்படி இல்லே.'' நிர்மலா சிரித்தாள்.

''புரியலையே.''

''காலை அவசரத்தில புளிதீர்ந்து போச்சு, பருப்பு இல்லேன்னு அவதிப்பட முடியலே. அதனாலே சாமானை மொத்தமா வாங்கிப் போட்டுடுவேன். மத்த சின்ன விஷயமெல்லாம், வாராந்தரமோ, மாதம் ஒரு வாட்டியோ வாங்கிக்கலாமே....''

''நல்ல திட்டம்தான். ஆனா முன்கூட்டி பானை வாங்க மறந்தே'' கேலி செய்தபடி கையில் கிடைத்த ஒரு பழைய புளிப் பானையைக் காலி செய்து கொடுத்தேன்.

''புதுசா பானை வாங்கிட்டுத் திருப்பிடறேன். தாங்க்ஸ்.'' வெளியேறிவிட்டாள் நிர்மலா.

சாதாரணமாக, வீட்டை மட்டும் நிர்வகிக்கும் இல்லத்தரசிகளுக்கே, சமையலுக்குத் தேவையான சாமான்கள் இல்லாமல் தட்டுக் கெட்டுப் போனால், எரிச்சல் ஏற்படுவது சகஜம். வேலைக்கும் சென்றுவிட்டால் தலையைப் பிய்த்துக் கொள்ள வேண்டும் போல் ஆத்திரம் ஏற்படுவது இயற்கைதான்.

முதல் நாள் வரை ''பருப்பு இல்லை வாங்க வேண்டும்'' என்று எண்ணி யிருப்போம். வேலையிலிருந்து வீடு திரும்பும் அவசரத்திலும் களைப்பிலும் மறந்து போகலாம். அல்லது வீட்டில் வேலையாள், மற்ற யார் மூலமாவது ஏற்பாடு செய்து அவர்களும் மறந்து விட்டிருந்தால், மறுநாள் பொழுது எப்படி விடியும்? எள்ளும் கொள்ளுமாக விடியும்!

எனக்குத் தெரிந்த பள்ளி ஆசிரியை மிக்க அலுப்பாகச் சொன்னார். ''ஒரு நாளிலே இருபத்து நாலு மணி நேரம் போதாதது போல ஓடி ஓடி உழைக்க வேண்டி யிருக்கிறது. இதில் நாளில் ஒரு பாகம் காலை அவசரங்களுக்கு. அடுத்த ஒரு பாகம் பஸ் பயணத்தில். அடுத்த ஒரு பாகம் வேலை. எஞ்சிய ஒரு பாகத்தில் மீண்டும் வீட்டு வேலை, பிரச்னைகள், ஓய்வு எல்லாம். என்ன செய்வது?''

உண்மைதான். வேலை செய்யாவிட்டால் பொருளாதாரப் பிரச்னை சிக்கலாகிவிடும். வீட்டு வேலைகளைக் கவனிக்காவிட்டால், வயிற்றுப் பிரச்னை எக்கச்சக்கமாகிவிடும்.

''பிரிட்ஜ் வாங்கிட்டா வாரா வாரம் காய்கறிகளை வாங்கி வச்சுடலாம்னு சுலபமாச் சொல்லிட்டீங்க. எத்தனை பேருக்கு அதை வாங்க வசதி இருக்கு?'' என்று ஒரு நாள் கடைத் தெருவில் என்னை மடக்கினாள் சுமதி.

அவள் தனியார் கம்பெனி ஒன்றில் ஸ்டெனோ. ஐநூறு ரூபாய் சம்பளம். அவளது அண்ணன், இப்போதுதான் என்ஜினியரிங் படித்து முடித்து வேலைக்குச் சேர்ந்திருக்கிறான். வீட்டில் இன்னும் இரண்டு தம்பி, தங்கைகள் படிப்பு முடியாத நிலையில்.

''உண்மைதான். ஆனால் அவசியம் என்று நினைத்த பொருட்களை நாம், சிக்கனமாகச் சேமித்து வாங்குகிறோம் இல்லையா, அது போல முடிந்தால் வாங்குவது இல்லாவிட்டால், நாற்பட நிற்கும் கிழங்கு வகைகளை வாங்கிப் போட்டு வைக்கலாமே. மற்ற காய்கறிகளை வசதிபோல், முன் யோசனையுடன் வைக்கலாம். நமது வீடுகளில், கம்பிக் கூடைகளிலும், தூக்குகளிலும் காய்கறிகளை ஒரு நாள் பத்திரப்படுத்துவது உண்டே! ஆனால், காலம் மாறுகிறது. அன்றாட வேலைகளில் அவசரங்கள் நம்மை உந்துகின்றன. இப்போது, ஒரு சில தியாகங்களைச் செய்து சேமித்து, சில தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள நேரிடுகிறதே?'' என்றேன்.

சுமதிக்கு அவள் பெற்றோர் இருக்கிறார்கள் வீட்டுப் பிரச்னை இல்லை. ஆனால், இதே சுமதி திருமணமாகி, தனிக் குடித்தனம் போன பிறகு பிரச்னைகள் பூதாகாரமாக உருவெடுக்கத் துவங்குமே? குழந்தைகளும் தோன்றிவிட்டால் கேட்கவே வேண்டாம்.

வருடாந்திர சாமான்களை நிர்மலாவைப் போலசேகரித்து வைக்கலாம். சுலபம்தான். அடிக்கடி கடைக்குப் போகும் தொல்லை இராது. காலை எழுந்ததும், சாமான் இல்லாமை இல்லை. சரி. ஆனால், வருடாந்திர சாமான்களைச் சேகரிக்கும்போது, அவற்றைச் சரிவர வைக்கும்படியான இட வசதி —இருக்கிறதா?

அவற்றை அடிக்கடி வெய்யிலில் உலர்த்தி, பாதுகாத்து திரும்ப எடுத்து வைக்க நேரம் இருக்கிறதா?

அவற்றை வருடா வருடம் பேரம் பேசி வாங்கிச் சேகரிக்கும் சாமர்த்தியமும், நேரமும் இருக்கிறதா?

என்ற பல விஷயங்களைக் கவனத்தில் கொண்டு வருவது அவசியம்.

எனக்குத் தெரிந்த ஒரு பெண், அவர்கள் கிராமத்திலிருந்து வருடாந்தர வடகம், வத்தல் என்று டின்—டின்னாகக் கொடுத்து அனுப்பியதைச் சரிவரக் கவனியாமல் இருந்து விட்டாள். காரணம், காலை எட்டு மணிக்கு வேலைக்குப் போனால் வீடு திரும்ப இருட்டி விடும். சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் ஓய்வு என்ற பெயரில் பகல் முழுவதும் தூங்குவாள். இரவு ஸினிமா பார்க்கப் போய் விட்டால், மறுநாள் காலை ஆபீஸ் அவசரம். முடிவு என்ன? வடகம், வத்தல் எல்லாம் பூச்சியடித்துப் போயின. இவற்றின் கதியே இப்படி. இவர்களைப் போன்றவர்கள் வருடாந்தர சாமான்களை எப்படிப் பாதுகாப்பார்கள்?

மற்றொரு பெரிய சிந்திக்க வேண்டிய பிரச்சினை இட நெருக்கடி.

தற்காலத்தில் வீடு கட்டுபவர்கள் 'சோபாகம் பெட்' என்ற ரீதியில் ஒன்றுக்குள் ஒன்றாக வீட்டைக் கட்டி விடுகிறார்கள். இதில் வருடாந்தரப் பொருட்களைச் சேகரித்து வைப்பது எப்படி?

ஒருத்திக்குக் கடைக்குப் போகும் தொல்லை இல்லையென்றால், மற்றொருத்திக்கு வாங்கின பொருட்களை வைக்க இடமில்லாத தொல்லை.

'பிரிட்ஜ்' வாங்க முடியாதவரால் மொத்தமாகச் சமைத்து வைக்க முடியாது.

தொல்லைகளைச் சமாளிக்கப்புத்திசாலித்தனமாகச் செயல்படுவதே சிறந்தது.

வீட்டு வேலைகளைச் சமமாகப் பங்கிட்டு, அவரவர் வேலையைச் செய்து முடிப்பது என்ற கட்டாயப் பணியாக வைத்துக் கொண்டு விடுவது நல்ல முறை.

மிக முக்கியமான விஷயம், ''எல்லாம் நானே செய்ய வேண்டியிருக்குது. ஒரு கை அசைக்க மனுஷங்க இல்லே'' என்று அலுத்துக்கொள்ளாமல் இருப்பது.

''இப்பத்தான் ஆபீஸ்ல இருந்து அலுப்போடு வந்திருக்கேன். நாளைக்கு செஞ்சிட்டாப் போவுது'' என்று தள்ளிப் போடாமல் இருக்கும் சுபாவம்.

அவரவர் பங்கு வேலையை அன்றே செய்து முடிக்கும் சுறுசுறுப்பு.

இல்லா விட்டால் ஆபீஸ் மேஜை மீது ஃபைல்கள் குவியும். வீடு திரும்பினால், துணிகளும், இதர வேலைகளும் மலையாகக் குவியும்.

இம்மாத இல்லத்தரசி போட்டி

பொருள் : வெங்காயம்

முடிவு தேதி : 15 - 12 - 81

சமையல் கூபன்

இத்துடன் . . . . என்ற தலைப்பில் சமையல் குறிப்புக்களை அனுப்பியுள்ளேன். இச்சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும் எந்தப் புத்தகத்திலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்



ஆசைகள்

— சுந்தரராஜன் —

எவ்வளவு இனிமையான கனவு! விடியற்காலையில் கண்ட கனவு பலிக்குமாமே!

அம்மா எழுப்பியபோது கனவு கலைந்து விட்டதே என்று சற்று எரிச்சல் கிளம்பினாலும் கனவின் இனிமை கோபத்தைச் சாப்பிட்டு விட்டது. சுறுசுறுப்புடன் சியாமளா எழுந்து கொண்டாள்.

''ரொம்ப தேங்ஸ் அம்மா !''

அம்மாவை அப்படியே கட்டிக்கொண்டாள்.

''சீச்சீ.... என்னடி இது?''

பல் தேய்க்கையில், பாவாடையை எடுத்து பாத்ரூம் கதவில் தொங்க விடுகையில், தண்ணீரை எடுத்து மேலே விட்டுக் கொள்கையில், சோப்புப் போட்டுக் கொள்கையில், துவட்டிக்கொள்கையில்—

அந்தக் கனவே மனம் முழுவதும் நிறைந்து நின்றது.

புடவைத் தலைப்பை மேலே போட்டுக் கொள்கையில் அம்மா முணுமுணுத்தாள்: ''சே, என்னடி தலையெழுத்து! நிம்மதியா..''

உற்சாகம் சட்டென்று, முன் குத்திய பனிநுனைக் கருங்கிப் போக, கண்கள் சற்றே கலங்கிப் போக, அவள் அம்மாவின் பக்கம் திரும்பினாள். கனவின் இனிமையை, உண்மை நடப்பின் கனம் அழுத்தி விட்டது.

''என்னடி...?'' — அம்மா கவலையுடன் கேட்டாள். அவளும்தான் எவ்வளவோ கஷ்டப்பட்டுப் பார்க்கிறாள் — அனாவசியமாகப் பேசி அவள் மனத்தைப் புண்படுத்தக் கூடாதென்று. . ஆனால் பெற்ற வயிற்றின் எரிச்சலுக்கு வாதிக் எல்லாம் ஒன்றும் புரிவதில்லையே.

''குட்மார்னிங் சியாமளா...''

சியாமளா பல்லைக் கடித்துக் கொண்டாள். தன்னை நோக்கி வரும் வாழ்த்தின் பின் ஒளிந்துள்ள வக்ரம் அவளுக்குப் புரியாமல் இல்லை. அந்த வாழ்த்தின் தொனி, பேசியவனின் உள்ள எண்ணத்தை வெளிப்படுத்தாமல் இல்லை. வேண்டும் என்றே 'சியாமளா' என்று ஏதோ உரிமை உள்ளவன் போல...

சியாமளாவின் எண்ணம் தடைப்பட்டது. உரிமை உள்ளவன்...

மீண்டும் கனவின் ஞாபகம் வந்துவிட்டது. நினைவு முகத்தில் மலர்ச்சியைப் பரவி விட்டது.

கோபாலன் கொஞ்சம் வியப்பும் கொஞ்சம் மகிழ்ச்சியும் அடைந்தான். வழக்கமாக அவளுக்கு வணக்கம் சொல்லும்போது, அவள் வெறுமனே முறைத்து விட்டுப் போவாள். 'கோரிக்கையற்றுக் கிடந்த வேரில் பழுத்த பலா'வின் மேல் அவனுக்கு ஒரு கண்!

சியாமளா தன் இடத்தில் அமர்ந்துகொண்டாள். தன் மேஜையின் உள்ளிருந்த நோட்டுப் புத்தகத்தை எடுத்து ஐந்துதடவை 'ஸ்ரீராமஜெயம்' எழுதினாள்.

எப்பவோ அம்மா சொன்னாள்: ''சியாமளா... மனக் குழம்பறச்சே எல்லாம், ஏதாவது நியாயமான ஆசையா எழுந்தா துன்னு ஸ்ரீராமஜெயம் எழுதுடி...''

அவள் அந்த வருஷம் முழுப் பரீட்சைக்கு முன்னால் ஸ்ரீராமஜெயம் எழுத ஆரம்பித்தாள். அந்த வருஷம் முதல் மார்க் வந்தது.

அப்புறம் காலேஜில் இடம் கிடைக்க வேண்டும் என்று எழுதினாள்; இடம் கிடைத்தது.

பின்னால், மது வந்து பெண் பார்த்தபோது, மனதில் அவன் உருவம் ஏனென்று தெரியாமல் ஆழமாகப் பதிந்து போக, ஒரு வாரம் தொடர்ச்சியாக ஸ்ரீராமஜெயம் எழுதினாள்.

மதுவும் கிடைத்தான்.

ஆனால், இப்போது கிட்டத்தட்ட ஏழு மாதமாக தினமும் ராமஜெயம் எழுதியும் பயன் கிடைக்கவில்லை.

''ஒருவேளை, நான் படறது நியாயமான ஆசை இல்லையோ?'' என்று அவள் எத்தனையோ தடவை எண்ணிப் பார்ப்பாள். எது நியாயமான ஆசை இல்லை? மனைவி கணவனுடன் இணைய வேண்டும் என்ற ஆசையா?

இனிமையான கனவுதான்.

அப்படி ஒன்றும் கனவு ரொம்ப நேரம் நீளவில்லை. ரொம்பச் சுருக்கமாக முடிந்து விட்டது.

கனவில் சியாமளா ரொம்பக் களைப்புடன் ஆபீஸில் இருந்து திரும்பி வந்தாள். வீட்டில் நுழையும்போது, ஹாலில் சோபாவில் யாரோ உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

யாரோ...

இல்லை, மது!

சியாமளா அப்படியே ஒரு விநாடி மேலே மிதந்தாள். கடைசியாக மதுவின் மனம் மாறிவிட்டதா? கடைசியாக அவள் கண்ட கனவுகள் பலிதம் அடையப் போகின்றனவா? கடைசியில் அவள் விட்ட பெருமூச்சுக்கள் எல்லாம் முடியப் போகின்றனவா?

மது திரும்பினான். சியாமளாவைக் கண்டதும் மெல்லச் சிரித்தான்.

அதே சிரிப்பு...

தனிமையில் இருவரும் அறையில் அடைக்கப்பட்டபோது இவள் உள்ளே நுழைந்தவுடன்

படுக்கையில் அமர்ந்திருந்த அவன் எழுந்து நின்று சிந்தினானே – அதே கவர்ச்சி நிறைந்த சிரிப்பு.

மெல்ல நடந்து அருகில் வந்தான்.

''ஐ அம் ஸாரி ஸியாமளி... ரொம்ப முரடனாய் நடந்துட்டேன் இல்லையா?...''

''என்னம்மா, ஏதோ யோசனையில் ஆழ்ந்துட்டே?''

நினைவுகளைக் கலைத்துக் கொண்டாள் ஸியாமளா. கனிவுடன் தன்னைப் பார்த்துக்கொண்டிருந்த ஹெட் கிளார்க் ரங்காச்சாரியைப் பார்த்தான்.

''ம்...'' முன்னால் இருந்த ஃபைலில் தன் கவனத்தைச் செலுத்த முயன்றாள்.

முடியவில்லை.

மனமெல்லாம் ஒரு 'கணத்தில் எரிச்சல் பரவி விட்டது. இனிமை, எதிர்பார்ப்புகள் எல்லாவற்றையும் துரத்தி யடித்து, தான் மட்டும் இடம் பிடித்துக் கொண்டது.

'இன்னும் எத்தனை நாட்களுக்கு உன்னைக் கட்டி மாரடிக்க வேண்டும்?'


ஃபைலை மூடி விசிறி அடித்தாள்.

''என்னம்மா?'' – ரங்காச்சாரி வியப்புடன் திரும்பினார்.

''நோ!... இது என்னால் தாங்க முடியாது. நோ.... நான் என்றைக்கு நார்மல் உமனாகமாறப் போகிறேன்?''

அவள் மெதுவாகத்தான் முணுமுணுத்தான்.





என்றாலும் அவள் பேச்சு ரங்காச்சாரியைத் தவிர வேறு இருவர் காதுகளிலும் விழுந்திருக்க வேண்டும். திரும்பிப் பார்த்தார்கள்.

''அம்மா... சியாமளி.... உடம்பு சரி இல்லையா?''

அவள் அவரை லட்சியம் பண்ணிய மாதிரி தெரியவில்லை. தொடர்ந்துபேசிக் கொண்டிருந்தாள்.

''எனக்கு இந்த ஃபைலிலேயே சமாதி கட்டுங்கள். ஆழப் புதையுங்கள்...''—அவள் சட்டென்று மேஜை மேல் சாய்ந்து கொண்டாள். குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தாள்.

ரங்காச்சாரி பதறிப்போனார்.

''அம்மா, குழந்தே! என்னம்மா இது?''

கொஞ்ச நேரத்தில் செக்ஷன் ஹெட்டே வந்து விட்டார்.

''மிஸஸ் சியாமளி... நீங்கள் வீட்டுக்குப் போகலாம். அதுதான் பெட்டர்னு நினைக்கிறேன்...''

''சியாமளா! நான் சொல்லறதைக் கேளு! இப்பவே வேலையை ராஜினாமாப் பண்ணு. எனக்கு வர பென்ஷன்லே மூணு பேர் சாப்பிடலாம்.''

சியாமளா திரும்பினாள். அப்பாவின் தளர்ந்த உருவத்தைக் கண்டதும் மனம் கனிவில் இளகியது.


'சே, நான் இந்தப் பாழும் பெண் பிறவி எடுத்ததற்கு இவர்களென்ன செய்வார்கள்?'

''இல்லேப்பா... தப்பு என் மேலேதான். ரொம்பத் தீவிரமாப் பேசிட்டேன் இல்லேயா? மன்னிச்சுடுங்கோ! ம்... ரொம்பத் தலைவலின்னு லீவு போட்டுட்டு வந்துட்டேன்...''

''காஃபி சாப்பிடறயாம்மா?''?— அம்மாவின் குரலில் நிஜமான கவலை இருந்தது.

''ம்.... போறும்மா...''

சியாமளா உள்ளே போனாள். பின்னால் அம்மாவும் அப்பாவும் பேசிக் கொள்வது விழுந்தது.



யோசனை

தேங்காய் அழுகிவிட்டது. கடைக்காரரும் திருப்பி வாங்கிக்கொள்ள மாட்டார் என்னும்பட்சத்தில் கவலையே படத் தேவையில்லை. அழுகல் தேங்காயோடு ஒன்றரை ஸ்பூன் கஸகஸாவையும் சேர்த்து மசிய அரைத்து, தலையில் தேய்த்து ஊறிய பின்னர் வெது வெதுப்பான நீரில் குளித்து வந்தால், எந்த நவீன ஷாம்பூ வகைகள் போட்டுக் குளித்தாலும் கிடைக்காத பளபளப்பு முடிக்குக் கிடைக்கிறது.

-பாந்நிமுத்து

சியாமளி நிமிர்ந்து சுற்றும் பார்த்தாள். எல்லாரும் தன்னை ஏதோ ஒரு காட்சிப் பொருளாக ஆக்கிவிட்டிருப்பது தெரிந்தது.

''சாரி சார்...''

அவள் எழுந்து கொண்டாள்.

''துணை வேண்டுமா மேடம்?''

கேட்டது யார் என்றுகூடக் கவனிக்கவில்லை. அந்நிலையிலும் அது யார் எனத் தெரிந்தது. கோபாலனாகத்தான் இருக்க வேண்டும்.

''என்னடி இது சியாமளி?'' — அம்மா வியப்பும் கலக்கமும் அடையக் கேட்டாள்.

''ஏன் இன்னிக்குச் சம்பளம் 'கட்' ஆகும்னு பயப்படறியா?'' — அவள் சுருக்கென்று குத்திய முள் அம்மா முகத்தைக் கன்றிப் போக வைத்தது.

''வாஸ்தவம்தாண்டி சியாமளி! இந்தத் துர்ப்பாக்கியவதிக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும்...''

அப்பாவும் வீட்டில் இருந்தார்.

''மாப்பிள்ளையைப் போய்ப்பார்க்கலையா?'' என்று அம்மா கேட்டுக் கொண்டிருந்தாள்.

''போகலாம்தான்! இவ வேலைக்குப்-போய்ச் சேர்ந்ததைப் பத்தி எழுதின கடிதத்துக்காவது பதில் போடுவார்னு நினைச்சேன்.'

சியாமளா அலுப்புடன் படுக்கையில் சாய்ந்தாள். மேலே ஃபேன் சுற்றினாலும், வியர்த்துக் கொண்டுதான் இருந்தது.

அப்பாவும் கிட்டத்தட்ட மாதத்துக்கு ஒரு தடவை, மாப்பிள்ளை ஊருக்குப் போய்ப் பார்த்துவிட்டுத்தான் வருகிறார். மாப்பிள்ளை மசிய வேண்டுமே....

ஆசைகள்தாம் மனிதர்களை எப்படி எல்லாம் மாற்றி விடுகிறது!

கல்யாணம் ஆனபோது மது சந்தோஷமாகத்தான் இருந்தான். அவள் கைகளைப் பிடித்துக் கொண்டு முதல் இரவில் என்ன வெல்லாமோ பேசினான்.

''சியாமளா... நான் ஒண்ணும் ரொம்ப நிறையச் சம்பாதிக்கலேன்னாலும், நாம் ரொம்ப சௌகரியமாய் வாழலாம். வாழ்க்

கையில பணக்காரர்கள் அடைய வேண்டிய சௌகரியங்களுக்கு எல்லாம் நாம் ஆசைப் படக் கூடாது, என்ன?'' என்று அவன் கேட்டபோது, அவள் மனத்தில் அவன் உயர்ந்துபோனான்.

''எனக்கும் ஃப்ரிட்ஜ், டி.வி., கேஸட் என்றெல்லாம் ஆசையே கிடையாது.''

''சந்தோஷம்!'' — அவன் அவளை அணைத்துக்கொண்டான்.

அவனுடைய வார்த்தைகள்நிலையாய் இருக்கும் என நினைத்தவள் ஏமாந்து போனாள். கல்யாணம் ஆகி எட்டே மாதங்களுக்குள் அவன் வார்த்தைகள் அவனுக்கே மறந்து போயின.

''சியாமளி... என் ஃப்ரெண்ட்ஸ்தான் எல்லாரும் எவ்வளவு வசதியா வாழ்க்கையை அனுபவிக்கிறா, பார்த்தியா? நம்பளும் இரண்டு மூணு பேரோட பார்ட்டிக்குப் போயிட்டு வந்தாச்சு. நம்பளால ஒண்ணு கூடக் கொடுக்க முடியல்லே...''

''இனிமே நாம பார்ட்டிக்குப் போகாம இருக்கலாமா?'' என்றாள் சியாமளா அப்பாவியாக.

''சீ... இந்த யோசனையையா உங்கிட்டக் கேட்டேன்!'' — அவன் கோபத்துடன் விலகிப் போனான்.

மதுவின் அம்மா ஒரு நாள் ஜாடையாய்ச் சொன்னாள். ''எனக்கு ஒரு அண்ணா உண்டு. அவனோட ஒரே பெண்ணைப் பண்ணிக்கோன்னு நான் சொன்னேன். இவன்தான் அழகு,அழகுன்னுஅலைஞ்சுஉன்னைப்பண்ணின்டான். அவளைப் பண்ணிண்டு இருந்தா சௌகரியமாய் இருக்கலாம். கல்யாணத்தும்போதே டி. வி.யும் ஃப்ரிட்ஜூம் வந்திருக்கும்....''

அவள் குரலில் ஒலித்த ஏக்கம், சியாமளாவின் மனத்திலும், வயிற்றிலும் கலக்கத்தைப் பரப்பியதோடு, மதுவின் மன மாற்றத்துக்கு யார் காரணமாக இருக்கக் கூடும் என்பதையும் புரிய வைத்தது.

ஏதோ ஒரு வெறியில் அப்பாவுக்கு எழுதினாள். அப்பா எப்படியோ அடுத்த வாரமே ஒரு டி. வி.யோடு வந்து இறங்கினார்.

''மாப்பிள்ளை, எங்க ஊருக்கும் டி.வி.க்கும் சம்பந்தமே கிடையாது. எனக்கும் ஒண்ணும் தெரியாது...''

மதுவும் அவன் அம்மாவும் அன்று என்னமாக மலர்ந்து போனார்கள்! சியாமளா பெருமையிலும், கர்வத்திலும் தலையை நிமிர்த்திக்கொண்டாள். ஆனால், நிமிர்ந்த தலை அப்பாவுடன் பேசியபோது, அகஸ்மாத்தாகத் தெரிந்த உண்மையில், குற்ற உணர்வோடு, குனிந்து, மனதையும் அழுத்தியது.

இந்த டி.வி.யை வாங்க அப்பா தன்னுடைய சாப்பாட்டுக்கு வழி செய்திருந்த நிலத்தை விற்க வேண்டி யிருந்ததாம்.

''யோசித்துப் பார்த்தேன்... வீடா, நிலமான்னு. நிலம்தான் போட்டுமே!''

சியாமளா துடித்துப் போனாள்.

''அண்ணா எல்லாம்.....''



அதிக உஷ்ணத்தால் நீர்க்கடுப்பு உண்டாகி சிறுநீர் கழிக்கும்போது எரிச்சல் ஏற்படுகிறதா? கொஞ்சம் புளியங்கொட்டைத் தோலை அரைத்துத் தண்ணீரில் கலக்கிக் குடியுங்கள். விரைவில் குணம் தரும் கை மருந்து இது. -மிஸஸ் ஸ்ரீஜானந்த்

அப்பா சிரித்தார்.

''அம்மா, நீ குழந்தை! ஒரே பொண்ணுன்னாலும் செய்யறதுல லிமிட் வேணுமான்னு அவர்கள் எழுதறதைப் புரிஞ்சுக்க முடியாது.''

அப்பாவை டி. வி. வாங்கித் தரச் சொன்னது அனர்த்தத்தில் முடிந்தது.

மது தானாகவே மானத்தை விட்டுக் கேட்டான்:

''ஏன் சியாமளி, நம்பள்ட்ட ஒரு ஃப்ரிட்ஜ் இருந்தா பார்ட்டி கொடுக்கச் சௌகரியமா இருக்கும் இல்லையா? உங்கப்பாவுக்கு எழுதறயா? ஒரே பொண்ணுதானே, நீ!''

மது சியாமளாவின் மனத்தின் மேல் தட்டிலிருந்து பொத்தெனக் கீழே விழுந்து விட்டான்.

அவள் பேசாமல் இருந்தாள். அவன் மூன்று முறை ஞாபகப்படுத்திப் பார்த்தான்.

''எழுத முடியாது.''

''என்னடி சொன்னே?''

அன்றுவரை மதுவை சாந்தம் மிக்க இராமனாகப் பார்த்தவள், நரசிம்மனாகக் கண்டாள்.

ஏதேதோ வார்த்தைகள் வீசப் பட்டன, அக்கினித் துண்டங்களாய், நெருஞ்சி முட்களாய்...

விஷயம் தெரிந்து அப்பா ஓடி வந்தார்.

''என்னம்மா வேணும்னு வீட்டை வித்துட்டு, அவாளுக்கு வாங்கித் தரலாமா?''

''முடியாதுப்பா. அப்புறம் நீங்க நடுத் தெருவில் நிற்பேள்!''

அப்பா கிளம்பியபோது, அவளும் கூடக் கிளம்பினாள். மது எதும் மறுப்புச் சொல்லாதபோது, அவள் மனத்தில் இருந்த கொஞ்ச நஞ்ச எதிர்பார்ப்புகளும் சுக்கு நூறாக உடைந்து போயின.

அம்மாவும் அப்பாவும் என்னென்னவோ உபதேசித்தார்கள். பெண், பண்பாடு என்றெல்லாம் பேசினார்கள்.

சியாமளா அசையவில்லை.

அண்ணன்கள், ''உன் பெண்ணைச் செல்லம் கொடுத்துக் குட்டிச்சுவராக்கிட்டே!''

என்று அம்மாவைக் குற்றம் சாட்டியபோது, அவள் தனிமையில் அழுதாள்.

அவள் தீர்மானமாகச் சொன்னாள்:

''அப்பா, நான் பாரமாஇருந்தாச் சொல்லுங்கோ, ஆனா, தயவு செஞ்சு உங்க வீட்டை விட்டு அவரோட என்னைச் சேர்க்க முயற்சி செஞ்சா சத்தியமா நான் உயிரோட இருக்க மாட்டேன்.''

சியாமளா பிடிவாதக்காரி!

''சியாமா, அவரோட பேசி, அவர் மனதை மாத்த முயற்சி செய்யவாவது அனுமதி உண்டாம்மா?''

தன்முன் குறுகிக்கொண்டு அப்பா கேட்ட போது, அவள், ''அப்பா!'' என்று அவர் கையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு உடைந்து போனாள்.

கொஞ்ச நாட்களில் வீட்டின் நிலைமை அவளை உண்மையை உணர வைத்தது. அப்பா சொல்லா விட்டாலும், தான் எவ்வளவு பெரிய பாரம் என்பதை உணர முடிந்தது, அவளால்.

அவளுக்குச் சட்டென்று ஞாபகம் வர—

மர பீரோவைத் திறந்து, மேலாக இருந்த தூசிகளை யெல்லாம் தட்டித் தேட ஆரம்பித்தாள்—

தன்னுடைய 'டிகிரி' சான்றிதழ்களை.

வழக்கம்போல் அம்மா காலையில் எழுப்பி விட்டாள்.

''என்னம்மா ஆபீஸ் போறயா? டயர்டா இருந்தா லீவு போடேன்.''

''சே, சே... எத்தனை நாள் லீவு போடறது? எனக்கென்ன கேடு?''

அவள் அப்போது 'கேடு' இல்லை என எண்ணினாள். ஆனால், ஒன்பதரை மணி அளவில் அலுவலகத்தில் புகுந்து, தன் இருக்கையில் அமர்ந்து 'ஸ்ரீராமஜெயம்' எழுதி முடித்தபோது, மனத்தில் மீண்டும் எரிச்சல் கிளம்பி விட்டது.

'என்னத்துக்காக நான் வேலை பார்க்க வேண்டும்? என்ன தலையெழுத்து?'

தலை விண் விண்ணென்று வலித்தது. கை பெரிய பாரமாக, உயர்த்த முடியாமல் அழுத்திக்கொண்டிருந்தது.

'நோ... எனக்கு வேலை பார்க்க முடியாது. என்ன பிழைப்பு இது! காலை முதல் மாலை வரை இயந்திரமாக... எனக்கு எதுக்காக இந்தப் பிழைப்பு!''

அன்றும் போன உடனே வந்துவிட்ட தன் பெண்ணைப் பார்த்தபோது, அம்மா குழப்பத்தை அடக்கிக் கொண்டாள்.

'இன்றும் பிரச்னை தொடருமா?'

பயத்துடன்தான் சியாமளா அலுவலகத்தில் நுழைந்தாள். இருக்கையில் அமர்ந்து ஸ்ரீராமஜெயம் எழுதி முடித்ததும், ஃபைலை எடுத்துப் புரட்டுகையில், நல்ல வேளையாக பெரிய பிரச்னை எதுவும் தோன்றவில்லை.

'லஞ்ச் அவர்' வரை ஒன்றும் குழப்பம் இல்லாமல் ஓடியது.

'இறைவனே, விருப்பம் இல்லாவிட்டாலும், என் தலைவிதியை ஏற்றுக்கொள்ளும் மனப் பக்குவம் தா!'

குழப்பம் 'லஞ்ச் அவரி'ன்போது வந்தது. ரங்காச்சாரி அன்று லீவு!

கோபாலன் எதிரில் வந்து உட்கார்ந்தான்.

''ஹலோ, மேடம்... ஹௌ ஆர் யூ நௌ?''

அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவன் குரலில் கவலை இருப்பது போலத்தான் பட்டது. ஒருவேளை கோபாலன் நல்லவன்தானோ? அவள்தான் அவசரப்பட்டு விட்டாளோ?

''ஓகே! தாங்க் யூ...''

''மேடம்... உங்க மனப் பிரச்னை எனக்குப் புரியுது. வேலை பார்க்கறதுலே இருக்கற வெறுப்பு எனக்குத் தெரியுது. பெண்களோட

திடீர் அடை மிக்ஸ்


அரிசி இரண்டு ஆழாக்கு
கடலைப் பருப்பு அரை ஆழாக்கு
உளுந்து இரண்டு டீஸ்பூன்
மிளகாய் வற்றல் பத்து
சுக்கு சிறு துண்டு
திட்டமான உப்பு

மாவு மிஷினில் கொடுத்து ரவையும், மாவுமாக அரைத்து வைத்துக் கொள்ளவும். ஒரு மாதம் தாங்கும். விருந்தாளிகள் வந்து விட்டார்களா? ஓர் ஆழாக்கு மாவில் தண்ணீர் ஊற்றி ஊற வைக்கவும். வெங்காயம் பொடியாக நறுக்கிப் போடவும். கருவேப்பிலை, கொத்தமல்லி கிள்ளிப் போடவும். வாணலியில் எண்ணெய் காய்ந்ததும் பஜ்ஜி மாவு திட்டத்திலிருக்கும் இந்த மாவைக் கரண்டியால் ஊற்றி, சிவந்ததும் எடுக்கவும்.

விருந்தாளிகள் இறக்கை கட்டிக்கொண்டு பறக்கிறார்களா? சுடு நீரில், மாவை ஊற வைக்கவும். மூன்றே நிமிடங்களில் அடை மாவு நன்றாக ஊறிவிடும்.

ஹோட்டல் செலவும் மிச்சம்! ''எப்படி இவ்வளவு சீக்கிரம் தவலை அடை செய்தாய்?'' என்று விருந்தினர் வியப்படைவார்கள்.

-அரசு மணிமேகலை



பொறுப்பு இங்க இல்லே: விட்லேன்னு நினைக்கிறது எனக்குப் புரியுது!''

அவன் அவள் இதயத்தைத் தொட்டு விட்டான்.

''ஓ... மிஸ்டர் கோபாலன்! தேங்க் யூ! என்னைப்புரிஞ்சுக்கிற ஆத்மா இருக்குன்னு..''

''ஐ ஹேவ் எ சொல்யூஷன்...''

அவள் தன் மகிழ்ச்சியை நிறுத்திக் கொண்டு அவனைக் கூர்ந்து நோக்கினாள்.

''வாட் டு யூ மீன்?''

அவன் சுற்றிலும் பார்த்தான். அறையில் யாரையும் காணோம்.

''நீ வேலையை விட்டுரலாம்! என் கூட வரலாம்... சியாமளா, என்னோட பணத்துல உன்னை ராணி மாதிரி வச்சுக்குவேன்... என் குடும்பத்தைப்பத்திக் கவலைப்படாதே.''

''யூ....யூ...'' சியாமளா சட்டென்று எழுந்தாள்.

''உஷ்... பத்தினி வேஷம் போடாதே! உன் புருஷன் எதுக்காக உன்னை வீட்டை விட்டுத் துரத்தினான்னு எங்களால ஊகிக்க முடியாதா, சியாமளா?''

அவள் மேஜையில் இருந்த ஃபைலை எடுத்து அவன் முகத்தில் விசிறி அடித்தாள்.

''போடா.... பொறுக்கி! வேலை பார்க்க வந்தா, மானத்தை விட்டுத்தான் வரணுமா? போடா....'' — அவள் படபடவென்று பொரிந்து தள்ளினாள்.

சிறு கூட்டம் ஒன்று சேர்ந்தது.

அவன் சாவதானமாக எழுந்து கொண்டான்.

''இன்னும் இவங்களுக்கு உடம்பு சரியாகலேன்னு நினைக்கிறேன். பேசிண்டே இருந்தாங்க, திமிர்னு....''

அவன் ஃபைலை எடுத்து மேஜையின் மேல் சரியாக வைத்தான்.

''மேடம்... ப்ளீஸ், உங்க உடம்பைப் பாத்துக்கொள்ளுங்கள்....''

அவள் சுற்றிலும் பார்த்தாள். எல்லார் கண்களிலும் தெரிந்த அனுதாபம் அவளை வலுவற்றவளாக ஆக்கியது. தன் கைப் பையை எடுத்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தாள்.

வீட்டில் நுழையும்போது, களைப்பாக இருந்தது. 'சீ, என்னவெல்லாம் பேசிவிட்டான், அவன்! மது, நீங்கள் இதைக் கேட்டிருந்தால்....'

சட்டென்று கனவின் ஞாபகம் வந்தது.

எவ்வளவு இனிமையான கனவு!

வீட்டில் நுழைந்தவுடன், ஹாலில் சோபாவில் யாரோ உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

யாரோ....

இல்லை, மது!

சியாமளா அப்படியே மேலே மிதந்தாள். கடைசியாக மதுவின் மனம் மாறிவிட்டதா?

''ஐ ஆம் ஸாரி சியாமளி... ரொம்ப முரடனா நடந்துட்டேன் இல்லையா?''

தன் மாமனார், மாமியார் இருப்பதைக் கூட உணராதவன் போல, மது சியாமளாவின் தோள்களின் மேல் கைகளை வைத்துக் கொண்டான். அக்கைகளின்கீழ் தான்கரைந்து கொண்டிருப்பது அவளுக்குப் புரிந்தது.

அப்பா! இந்த அணைப்புக் கிடைத்து எத்தனை நாட்களாகி விட்டன!

சியாமளிக்குச் சந்தோஷம் பெருகியது. நாளைக்கே போய், கோபாலன் முகத்தில் மேஜைமேல் இருக்கிற ஃபைல்களை எடுத்து எறியலாம். மேனேஜர் முகத்தில் ராஜினாமாக் கடிதத்தை வீசியடிக்கலாம்.

அவன் கைகளின் மேல் தன் கைகளை வைத்து அழுத்திக் கொண்டாள்.

''எனக்குத் தெரியும்... என் மேல ஏதாவது தப்பு இருந்தாலும், என் கணவர் என்னை மன்னிப்பார்னு தெரியாதா?''


''உங்கப்பா என் கிட்டப் பேச வரச்சே எல்லாம் ஒரு வார்த்தை கூடக் கேட்க மாட்டேன். போடற கடிதத்தைக் கூட அப்படியே கிழிப்பேன். அதனாலதான் நீ வேலை பாக்கறதைக்கூடத் தெரிஞ்சுக்காமப் போயிடுத்து....''

''பரவாயில்லைங்க! அதான் இன்னிக்கு நாம்ப சேர்ந்துட்டோமே!''.

''ஆனா, சியாமளி! நீ ஏன் என்கிட்ட நீ வேலை பார்க்கலாம்கிற ஐடியாவைச் சொல்லவே இல்லை? எனக்கும் தோணாமல் போயிடுத்து. நீ அப்பவே வேலைக்குப் போயிருந்தா உன் அப்பாவைத் தொல்லைப் படுத்தியே இருக்க வேணாமே!''

அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

அவள் தோள் மேல் இருந்த அவன் கைகள் அக்கினித் துண்டுகளாய் தகிக்கத் தொடங்கின. அவன் பிடியில் இருந்து நழுவி, கீழே அமர்ந்து, விசிக்கத் தொடங்கினாள்.



வெங்காயச் சருகை ஒரு பழம் புடவையில் (தலையணை போல்) அடைத்துத் தலையணைத் திண்டாகச் செய்து அதன் மேல் உட்கார்ந்துகொண்டே இருந்தால் மூலம் சரியாகப் போய்விடும். (அனுபவத்தில் கண்ட உண்மை) -ஜெயலக்ஷ்மி

எப்போதும் பெண்

நமச்சிவாயம் பிள்ளைகளைப் பார்க்க விரும்பவில்லை. மனதில் குற்ற உணர்ச்சி ஏற்பட்டது.

''மாமா! பாப்பாவைப் பார்க்கப் போறேயில்லையா?'' என்று மது அவரிடம் வந்து குழைந்தான்.

அப்பா நமச்சிவாயத்திடம், ''என்ன? அழைச்சுட்டுப் போறீங்களா?'' என்றார்.

''அது வந்துங்க... வீட்டில கொஞ்சம் சந்தர்ப்பம் சரியில்லைங்க.''

''என்ன?''

''இப்பத்தான் சாவு விழுந்திருக்கு. கொஞ்ச நாள் ஆகட்டுமேன்னு சம்சாரம் சொல்லிச்சு.''

''சின்னப் பசங்களுக்கு என்ன நமச்சிவாயம்? தீட்டாவது ஒண்ணாவது!''

''இல்லைங்க... எங்க ஜாதியிலே ஏதோ ஒரு நம்பிக்கை'' என்று மழுப்பினார்.

''அப்ப எப்பத்தான் அழைச்சுக்கிட்டுப் போவீங்க?''

''பதிமூணு நாள் ஆவட்டும்.''

''நீங்களா வந்து அழைச்சிட்டுப் போறீங்களா?''

''அ....ஆமாங்க....''

''ஏன் அப்பா இப்பப் போகலியா?''

''இல்லடா கண்ணு'' என்றார் நமச்சிவாயம்.

''ஊம்... நான் போய்த்தான் ஆகணும்'' என்று முனகினான் சின்னவன்.

''சும்மாருடா. போய்ப் படுத்துக்கங்கடா....''

''இல்லே. நான் இந்த மாமாவோட போறேன்.''

''இப்ப வந்தேன்னு பல்லைப் பேத்துருவேன்.''

''குழந்தைகளைக் கோவிச்சுக்காதீங்க. அவங்களுக்கு என்ன தெரியும்? அறியாப் புள்ளைங்க. இதப் பாரு தம்பி, நானே உங்களைக் கார்ல வந்து நாளைக்கு அழைச்சுட்டுப் போறேன். பாப்பா இப்ப தூங்கிப் போயிருக்க. இப்ப நீங்க அதை எழுப்பினு அழும்.''

''எழுப்பாமப் பார்த்துண்டு இருக்கேம்.''

''இப்பப் போக முடியாதுடான்னு'' என்று அதட்டினார்.

''அப்ப நான் வரட்டுங்களா?''

''வாங்க, கட்டாயம் அழைச்சிண்டு போக வரணும். நான் ஞாபகப்படுத்தணும்னு எதிர்பார்க்காதீங்கோ.''

''இல்லீங்க, வரேன்!''

நமச்சிவாயம் தற்காலிகமாகத் தப்பிவிட்ட திருப்தியில்தான் காரில் உட்கார்ந்தார். அவருக்கு அந்தத் துடியான பயல்களை அழைத்துப் போவதில் தயக்கமும் இல்லை. இருந்தும் மனைவிக்கு எதிராக அடித்துப் பேச முடியாத கோழையாக இருந்தார். நமச்சிவாயம் கல்யாண காலத்திலிருந்தே இந்த உரிமையை இழந்து விட்டவர். ஆரம்பத்திலேயே தன்னுடைய ராஜ்யத்தை நிலைநாட்டத் தவறி விட்டார். ஆரம்ப காலத்தில் பார்வதி பெருமனுக இல்லாமல் அழகாக இருந்தாள். அப்போது அவள் சொன்னதெல்லாம் வேத வாக்காக இருந்தது. காதலின், உடலுறவின் நீ கலந்த வேகத்தில் மற்றதெல்லாம் அப்போது அடிபட்டுப் போயிருந்தது. அப்போதிருந்தே பார்வதி அவரை ஆக்கிரமிக்கத் துவங்கிவிட்டாள். பிடி நழுவிப் போன பின்பு அதை அவரால் திருப்பிப் பெறவே முடியவில்லை. போதாக் குறைக்கு குழந்தை இல்லாதது அவருக்குள் ஏதோ ஒரு குற்ற உணர்வை தந்து விட்டது.

அதற்குத் தன் இயலாமை ஒரு காரணமாக இருக்குமோ என்று உடல் சம்பந்தங்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துபோய் அவருடைய ஸ்வாரஸ்யமும் தீவிரமும் பணம் சம்பாதிப்பதிலும் திருவாசகம் படிப்பதிலும் திரும்பியபோது பார்வதி அவரை ஆக்கிரமிப்பதை ஒரு விதத்தில் விரும்பவே செய்தார். போகப்போக அதில் ஓர் இன்பமே ஏற்பட்டது அவருக்கு. எதிர்த்துப் பேசுவதும் அவள் விருப்பத்துக்கு மாறாக எதையும் செய்வதும் அவருக்கு ஒருவித அநாகரிகமாக ஆகிவிட்டது.

அப்போதைக்குப் பிரச்னையைச் சமாளித்து விட்டாலும் பத்து நாளைக்கு அப்புறம்

சுஜாதா

மறுபடி தலைதூக்கப் போகிறது. அதற்குள் மனைவியின் மனம் மாறுகிறதா பார்க்கலாம். இல்லை அப்பன்காரன் மறந்துபோய்க் கேட்காமல் விட்டு விடலாம். இப்படியே மழுப்பி மழுப்பியே இழுத்துச் சென்றுவிடலாம் போலத் தோன்றியது. இருந்தாலும் சற்று அச்சமாகத்தான் இருந்தது. அவர் திரும்பி வீட்டுக்குச் சென்றபோது மனைவியும் பெண்ணும் உறங்கி இருந்தார்கள்.

அவர் எண்ணியது போல் அப்பா பத்து நாளைக்கப்புறம் பையன்களை அழைத்துச் செல்வதைப் பற்றி மறுபடி விசாரிக்கவில்லை. அதற்குக் காரணம் ஐ. எ். எஃப். காலனியிலிருந்து விசாரிக்க வந்த உறவினர் ஒருவர் அப்பாவுக்கு உதவி செய்ய முன்வந்தார்; பையன்களைத் தற்காலிகமாக அழைத்துச் சென்று ஒரு வாரம் வைத்துக் கொள்வதாக உத்திரவாதம்' தந்தார். அதற்குள்:

''உனக்கு என்ன வயசு இன்னிக்கெல்லாம்?''

''ஏன்? எதுக்குக் கேக்கறீங்க?''

''நாப்பத்தஞ்சு இருக்குமா? அட அம்பதாவது இருக்கட்டுமே... இது ஒரு வயசா?''

''எதுக்கு ஓய்?''

''இன்னொரு கல்யாணத்தைப் பண்ணிண்டிடும். பேப்பர்லே போட்டா ஆயிரம் பேர் பதில் போடுவா. இப்பல்லாம் முப்பது முப்பத்து அஞ்சு வயசில வேலைக்குப் போற பொம்மனாட்டிங்க நிறையப் பேர் இருக்கா, கல்யாணமாகாம. அன்னிக்குக்கூட ஒரு பி.எச்.டி. பொண்ணைப் பார்த்தேன். ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்கறா. ஏதோ லாப ரேட்டரியில இருக்காங்களாம்.''

''வேலைக்குப் போற பொம்மனாட்டியைக் கல்யாணம் பண்ணிண்டா என் ப்ராப்ளம் எப்படி ஸால்வ் ஆகும் ஓய்?''

''அதுகூடச் சரிதான். வேலைக்குப் போகாததா வேணுமா? பார்க்கலாம். நிறைய அம்படும்.''

''எதுக்கு இன்னொரு கல்யாணம்? பாட்டி இருக்கிறபோதே சொன்னா, அப்பவே வேண்டாம்னு சொல்லிட்டேன்.''

''அப்ப பாட்டி இருந்தா வேணாங்கலாம். இப்ப யார் இருக்கா ஓய்? மூணு பசங்களை வெச்சுண்டு எப்படிச் சமாளிக்கப் போறீர்? யார் அதுக்குப் பொங்கிப் போடறது? ஸ்கூலுக்கு அனுப்பறது? குளிப்பாட்டி விடறது? எப்படி நீர் ஆபீசுக்குப் போறது?''

''ஒரு சமையல்கார மாமியை வெச்சுக்கலாம்னு பார்க்கறேன்.''

''சமையல்கார மாமின்னா நூறு ரூபாய் சம்பளம் தரணும். அதைவிடக் கல்யாணம் பண்ணிக்கிறது சீப்புங்காணும்! உமக்கு என்ன ஒரு செலவா? வரதட்சிணை ஏதும் வாங்கப் போறதில்லை. உம்மை ஆளைப் பார்த்தா வயசானவர்னே சொல்ல முடி



யாது. கொஞ்சம் டை அடிச்சுட்டா முப்பது தான் சொல்லலாம் போல இருக்கு.''

''கேலி பண்ணாதீங்க.''

''நான் சொல்றேன் கேளும். பேசாம இந்த விவாகாரத்தை என்கிட்ட ஒப்படையும். இந்துவில மாட்ரி மோனியல்ல ஒரு இன்ஸர்ஷன் கொடுத்துர்றேன். ஸண்டே பேப்பர்லே என்ன?''

''யோசிக்கிறேன்.''

''யோசிக்காதீர். உம்முன்னு சொல்லும். ஏண்டா பசங்களா, உங்களுக்கு இன்னொரு அம்மா வேணுமாடா?''

அவர்கள் மூவரும் மௌனமாக இருந்தார்கள்.

இப்போது அவனுக்குத் தன் அம்மா யார் என்பதைப் பற்றிக் குழப்பமில்லை. அம்மா என்பது பார்வதிதான். அவன் ரத்தத்துக்குள் இருந்த அம்மா கொஞ்சம் கொஞ்சமாக அழிக்கப்பட்டு ஒரு பதில் பிம்பம் பொருத்தப்பட்டு விட்டது. பார்வதி! பார்வதியின் மடியிலிருந்துதான் அவன் சதா அவன் உலகத்தைப் பார்த்தான். பார்வதியின் மூக்கைத்தான் தன் பிஞ்சு விரல்களால் திருகினான். அவள் சிரிப்புத்தான் அவன் முகத்துக்கு எப்போதும் அருகில் இருந்தது. அவள் புடவையின் நுனி திரியை முகத்தில் துருதுருவென்று திரடிக் கொண்டுதான் கட்டை விரல் சப்பினான். பார்வதிதான் தினசரி அவனை உடைகளை உருவி அலம்பி விடுகிறாள். தலை வாருகிறாள் பவுடர் போடுகிறாள். கன்னத்தில் பதிய முத்தம் முத்தமாக நிமிஷத்துக்கு இரண்டு தடவை அளித்து வருகிறாள். பார்வதி பார்வதி பார்வதி என்று விழிக்கும் நேரமெல்லாம் பார்வதியைப் பார்த்துப் பார்த்து அவனுக்குத் தன் ஜனனத்தின் போது இருந்த குழப்பம் முழுவதும் கரைந்து மறைந்து போய் அம்மா அடையாளம் முழுமையாகி விட்டது. பார்வதிதான் அம்மா. வீட்டுக்கு யாராவது வந்து குழந்தையை எடுத்துக் கொண்டால் உடனே முகத்தைச் சுருக்கிக் கொண்டு பார்வதியின் பக்கம் தாவுவான். நமச்சிவாயத்திடம் எப்போதாவது செல்வான். மற்ற சமயங்கள் முற்றும் பார்வதியிடமே இருந்தான்.

இப்போது அவன் வசீகரமாக இருந்தான். புஷ்டியான ஆகாரம் மட்டும் அல்லாமல் அப்பா அம்மாவின் முகஅமைப்புக்களிலிருந்து சில நல்ல விஷயங்களை வசீகரித்துக்கொண்டு பிறந்திருந்தான். அப்பாவின் மூக்கு சற்று வளர்ந்தது. அம்மாவின் மூக்கு உள்வாங்கியது. இரண்டும் எப்படியோ சரிக்கட்டிக் கொண்டு இவன் மூக்கு நேராக இருந்தது. கண்களில் ஒரு பிரகாசமும் குறும்பும் தெரிந்தது. சுலபத்தில் மோகனமாகச் சிரித்தான். இப்போது சிரிக்கும்போது அவன் ஓரிரு பால் பற்களைக் காட்டுகிறான். அவன் போடுவதில் அல்லது பேசுவதாகப் பண்ணும் சப்தங்களில், ஓரிரு வார்த்தைகள் வடிவடைந்திருக்கின்றன. புரிகின்றன. பேசுவதைத்தவிர அவனுக்குப் புரிந்து கொள்ளக் கூடிய வார்த்தைகள் அதிகமாக இருந்தன. 'பொண்ணு காணும்' என்று பார்வதி சொன்னால் உடனே தவழ்ந்து போய் சோபாவின் பின்னால் மறைந்துகொள்வான்.


'இங்க இருக்கானே' என்று கண்டு பிடித்ததும் கடகடவென்று சிரிப்பான் அவன். விட்டால் செருப்பை நோக்கித் தவழ்ந்து அதைக் கடிக்க ஆரம்பித்து விடுவான். வீட்டில் தரை மட்டத்தில் இருந்து கூர்மையான சாமான்கள் அனைத்தும் நீக்கப்பட்டன.

சின்னதிலிருந்தே அவனைச் சுற்றி நிறைய பொம்மைகள் இருந்தாலும் இப்போது அவன் ஒரு பொம்மையைப் பிரத்தியேகமாக கவனிக்கத் தலைப்பட்டான். இருப்பதற்குள்ளேயே சற்று அழுக்கான பொம்மை அது. இருந்தாலும் அது பிரத்தியேகமாக அவனுக்குத் தேவையாக இருந்தது. அதேபோல் ராத்திரி விரல் போட்டுக் கொள்ளும்போது நீலத்தில் ஒரு குறிப்பிட்ட டவல்தான் வேண்டும். அது இல்லையென்றால் அழுது அட்டகாசம் பண்ணுவான். அதே போல் அந்தப் பொம்மை.

அவனுடன் வளர்ந்து கொண்டிருந்த பிடிவாதத்தைப் பற்றிச் சொல்வதற்கு முன் அந்தப் பொம்மையைப் பற்றிச் சொல்லியாக வேண்டும்.

ஒரு பெண் அவன். பெண் குழந்தை. நினைவுகளின் ஆரம்பத்தில் அவனுக்கு அடித்தளத்தில் உலாவுவது ''தான் யார்'' என்று கேட்டு அடையாளம் தேடும் கேள்வி. அந்தக் கேள்விக்குப் பதில் ஆண் குழந்தையாக இருந்தால் அதன் சிறிய சின்னத்தில் கிடைத்து விடுகிறது என்று மனோ தத்துவ மருத்துவர்கள் சொல்லுகிறார்கள். ஆண் குழந்தைக்கு ஒரு வெளியுலகச் சின்னம் இருக்கிறது. பெண்ணுக்கு இல்லை. அதனால் அவனுள் மஞ்சு படிந்தது போல் தனக்குள் இருப்

சீலிங் பேன் பேக் செய்து வரும் தெர்மாகோல் பாக்கேஜ் சிறிதளவு பாட்டில் வைப்பது போல் குழிவாக இருக்கும். அந்த தெர்மா கோலை தூக்கி எறிந்து விடாமல் சூடாக ஏதாவது பொருளை அந்தக் குழியில் வைத்து மூடி விட்டால் சுமார் 8 மணி நேரம் சூடாக இருக்கிறது. செலவில்லாத IGLOO HOTPAK தயார்.



பது என்னதான் என்கிற குழப்பம் ஏற்படுகிறது. இது அவள் வாழ்நாள் முழுதும் இருக்கப் போகிறது.

முதலிலிருந்தே அவளுடைய 'தான்' அவள் பார்வைக்குச் சரியாகப் படாத ஒரு வஸ்து. இதனால் அவள் ஆரம்பத்திலிருந்தே ஜீவன் என்பதின் மர்மத்தில் அது என்ன என்கிற மர்மத்தில் அதிகமாக மூழ்கினவள் என்று சொல்லலாம். ஒரு ஆண் குழந்தைக்கு அவனுடைய சின்னம் ஒருவிதமான மற்றொரு 'தானாக' ஒருவிதமான 'ஆல்டர் ஈகோ'வாக வடிவம் பெறுகிறது. அதனால் அவனுக்கு ஒரு வெளிப்புறத் தன்மை கிடைக்கிறது. அதனால் அவனால் சீக்கிரமாகவே சுயாட்சி பெற முடிகிறது. ஆனால் ஒரு சின்னப் பெண்ணுக்கு தன் அங்கங்கள் எதிலும் தன்னை அடையாளம் கண்டுகொள்ள முடியாது. இதற்காக அவளுக்கு ஒரு வெளிப்புறப் பொருள் தேவையாக இருக்கிறது. பொம்மை! அதற்கு அவளைப் போல் முகம், கண், காது எல்லாம் இருக்கிறது. அது அவள் சொன்ன பேச்சைக் கேட்கிறது. அவளுடன் இருக்கிறது. அவளுக்கு அந்தப் பொம்மையில் தன்னை முழுவதும் அடையாளம் கண்டு கொள்ள முடிகிறது. அதைக் கடித்துப் பார்க்கிறாள். அதனுடன் பேசிப் பார்க்கிறாள். அதை அணைத்து முத்தம் கொடுக்கிறாள். எல்லாம் அவள் தன்னை அடையாளம் கண்டுகொண்ட சந்தோஷத்தின் வெளிப்பாடுகளே. அதனிடம் தான் புதிதாகக் கற்றுக் கொண்ட பாஷையைப் பிரயோகித்துப் பார்க்கிறாள். அவளுடைய தன்மை ஒருமைக்கு ஒரு ஸ்திரத்வம் கிடைத்து விட்டது.

அவள் பிடிவாதமும் இப்போது அதிகமாகிக் கொண்டு வந்தது. அட்டகாசமாகச் சத்தம் போட்டால் விரும்பினது நடக்கிறது என்பதை அவள் கண்டு பிடித்து விட்டாள். அவள் கையில் ஏதாவது கொஞ்சம் அபாயகரமான வஸ்து வைத்திருந்து அதை 'வேண்டாம்மா தாம்மா' என்று கவர்ந்தால் உடனே வீறிடுவாள். அழுகையல்ல. வீறிடல்! கோபம் கலந்த வீறிடல்! கவரப்பட்ட பொருள் கிட்டும்வரை அவள் ஒரு குட்டி ராட்சசி. அவ்வப்போது சின்ன விரல்களால் பார்வதியின் முகத்தில் கீறுவாள். புதிய பற்களால் கடிப்பாள். தூக்கி வைத்துக் கொண்டே இருக்க வேண்டும். கொஞ்சம் கீழே விட்டால் உடனே கூச்சல். ராத்திரி தூங்கும்வரை அவளை மார்பில் சாய்த்துக் கொண்டு நடக்க வேண்டும். நின்றால் போச்சு. ஒரே கத்தல். சிணுங்கல், விசும்பல், சிரித்தல் கை கொட்டுதல். எல்லாவற்றுக்கும் வெவ்வேறு பலன்கள் இருக்கின்றன என்பதை அவள் புரிந்து கொண்டு விட்டாள்.

பார்வதி அவளை வளர்த்து வரும் அலுப்பில் இப்போது சற்று இளைத்திருக்கிறாள்.

அப்பா சரியாகச் சம்மதம் கொடுக்காவிட்டாலும் ஐ.ஸி.எஸ்.காரர் அப்பாவுக்கு மறுமணம் செய்வதற்கான ஏற்பாடுகளில் தீவிரமாக இறங்கி விட்டார். இந்துவில் விளம்பரம் கொடுப்பதற்கு முன் அதில் வரும் விளம்பரங்களை அலசினார்.

''குடும்பப் பொறுப்புள்ள 36 வயதான ஆரோக்கியமான பெண்ணுக்கு வாதூல கோத்ரமல்லாத தமிழ் பேசும் ஐயர் வகுப்பைச் சேர்ந்த மணமகன் தேவை. பத்தாம் வகுப்பு வரை படித்திருக்கிறாள். தையல் வேலையும், வீணையும் தெரியும். நம் சம்பிரதாயத்தில் அதிகப் பற்று உண்டு. ஜாதகம், மற்ற விளம்பரங்களுடன் விண்ணப்பிக்கவும்

பெட்டி எண் 454.

''ஓய் இங்கே பாரும்! இதை விட்டா வேறே சான்ஸ் வராது! முப்பத்தாறு வயசு. அதிகம் படிச்சதும் இல்லே.''

''வயசு வித்தியாசம் ஜாஸ்தி இருக்கே.''

''என்ன அப்படி வித்தியாசம்?''

''ரெண்டாம் கல்யாணம்னு அவா ஒத்துப்பாளா?''

''கேட்டுப் பார்க்கிறது. ஒப்புத்துண்டா சரி. இல்லாட்டி நாம ஒரு விளம்பரம் கொடுக்கறது. எங்க உம்ம ஜாதகம்?''

''ஜாதகமெல்லாம் எங்கேயோ பறக்க விட்டுட்டேன்.''

''டேட் ஆஃப் பர்த்தாவது ஞாபகம் இருக்கா?''

''இருக்கு.''

''பொறந்த வேளை?''

''ராத்திரி பதினொரு மணின்னு எங்கம்மா எப்பவோ சொல்லியிருக்கா. எதுக்கு இதெல்லாம். சமையக்கார அம்மா போறுமேன்னு இப்பவும் எனக்குத் தோணறது.''

''பேசாம இரும். உமக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணி வைக்காட்டா எனக்குத் தூக்கம் வராது. உம் ஆம்படையா போறப்போ சொல்லிட்டுப் போயிருக்கா. அவரை நான் இல்லாதபோது நல்லா கவனிச்சுப்பேளான்னு கேட்டிருக்கா! முதல்ல உமக்குப் புதுசா ஜாதகம் கணிக்கலாம்.''

(தொடரும்)



வாய்ப் பாகத்தைச் சூடுகாட்டவோ, வெந்நீரில் முக்கவோ கூடாத பொருளுள்ள பாட்டில்களின் அடைப்பான் இறுகிக் கொண்டு திறக்க முடியாமலிருந்தால், ஒரு பட்டையான அழுத்தமான துணியை அடைப்பான் உள்ள பகுதியில் சுற்றி மோர் கடைவது போன்று முன்னும் பின்னுமாகச் சில நிமிடம் செய்து சூடேற்றிப் பிறகு திறந்தால் கைமேல் பலன்!

-பாத்திமுத்து

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 10-ந் தேதி 'மக்கள் உரிமை தினமாக' (Human rights day) ஐ.நா. சபை கொண்டாடுகிறது. அன்றைக்கு ஐ.நா. சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளிலிருந்து திறமைமிக்க கலைஞர்கள் அழைக்கப் படுகிறார்கள். இக்கலைஞர்கள் தங்கள் பண்பாட்டைக் கலையின் மூலம் உலகுக்கு நிரூபிக்கிறார்கள்.



இதற்கு முன் திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமியும், திருமதி வைஜயந்தி மாலியும் இவ்வாறு அழைக்கப் பட்டிருந்தார்கள். பத்தாண்டுகளுக்குப் பின் இவ்வருடம் தமிழகத்திலிருந்து திருமதி சுதாராணி ரகுபதி அழைக்கப்பட்டு இருக்கிறார். அவர் அமெரிக்காவிற்குப் புறப்படு முன் கொடுத்த பேட்டி —

அட்டைப் படக் கட்டுரை

"நான் பரத நாட்டியம் மட்டுமே யல்லாமல் மேற்கத்திய நடனமும், இசையும் கூடப் பயின்றேன். உலக நடன வரலாற்றைத் தெரிந்து கொண்டிருக்கிறேன். ஆனால் நானறிந்த வரையில்உலகத்திலேயே வசீகரம் மிக்கதும், பாரம்பரியம் கொண்டதும், தலை சிறந்ததுமான நடன வகை பரத நாட்டியம் தான்."

என்று பெருமையுடன் கூறுகிறார் இவர். இந்தக் கலையில் இவ்வளவு ஈடுபாடு கொண்டுள்ள இவர் தன் கலையை எப்படி ஆரம்பித்தார்?

"மூன்று வயதிலேயே நான் பார்த்த சினிமாவில் வரும் நடனங்களை அப்படியே ஆடுவேனாம். என் ஆர்வத்தைப் பார்த்த என் பெற்றோர்கள் முறையாகக் கற்பிக்க முடிவு செய்தார்கள்.

அப்போது நாங்கள் பெங்களூரில் இருந்ததனால் இங்கேயே ஒரு நட்டுவனாரை ஏற்பாடு செய்தார்கள். பிறகு நாட்டிய மேதை கிட்டப்பாவை பெங்களூருக்கு வரவழைத்தார்கள். அவரிடம் பல ஆண்டுகள் கற்றுக் கொண்டேன்.

இக்கலையை இலக்கண ரீதியாக, இன்றைய மேதைகளுக்கு ஏற்றவாறு மெருகூட்டி நாட்டியக் கலைக்குப் புத்துயிர் ஊட்டியவர்கள் 'தஞ்சாவூர் நால்வர்'தான். அவர்கள் வழி வந்த திரு கே. பி. கிட்டப்பா எனக்கு ஆசானாகக் கிடைத்தது நான் செய்த புண்ணியம்.

நாட்டியம் மட்டுமே கற்றுக் கொண்டால் போதாது. இசையும் முறையாகத் தெரிந்திருந்தால்தான், பாவங்களுக்குப் புது மெருகு ஊட்ட முடியும் என்று வயலின் சௌடய்யாவிடமும், மதுரை கிருஷ்ணனிடமும் கற்றுக் கொண்டேன்.


பிறகு நாட்டியத்தில் சிறு சிறு நுணுக்கமான அடவுகள், விளக்கங்கள், அபி நயங்கள் இவற்றை நாட்டிய திலகம் காலம் சென்ற கௌரி அம்மாளிடம் கற்றுக் கொண்டேன்.

கற்க கற்க இதற்கு முடிவே கிடையாது. இக்கலையைக் கற்க ஆரம்பித்து முப்பது ஆண்டுகள் ஓடிவிட்டன. இன்னும் நான் மாணவிதான்!"

என்று சிரிக்கிறார் திருமதி ரகுபதி.

இது நான் பெற்ற பேறு!







''அப்படியென்றால் இக்கலையைக் கற்க ஆரம்பித்து எத்தனை ஆண்டுகளுக்குப்பின் மேடை ஏறலாம்?''

''குறைந்தபட்சம் ஐந்து அல்லது ஆறு ஆண்டுகள் இக்கலையைக் கடுமையான பயிற்சியுடன் கற்றால் ஓரளவு தேர்ச்சி பெறலாம்.''

பரத நாட்டியக் கலையில் ஒவ்வொருவர் ஒவ்வொரு பாணியைப் பின்பற்றுகிறார்கள் இதில் எது சிறந்தது?

''எத்தனை பாணிகள் இருந்தாலும் அடிப்படையான சங்கதிகள் ஒன்றுதான். ஒவ்வொரு பாணியும் ஒவ்வொரு கோணத்தில் சிறக்கிறது.

ஆனால் இக்கலையை நுணுகி ஆராய்பவர்களால் மிகவும் போற்றப்படுவது தஞ்சாவூர் நாட்டிய பாணியான பந்தநல்லூர் பாணிதான். அதில் இருக்கும் ஒயிலும், ஒய்யாரமும், எழிலும் வேகமும் மற்ற நாட்டியப் பாணிகளில் காண்பது அரிது என்பது பல மேதைகளின் ஏகோபித்த தீர்ப்பு.''

இக்கலையை இவர் வாழ்க்கையாகவே மேற்கொண்டிருக்கிறாரே இதிலே எதேனும் மறக்க முடியாத நிகழ்ச்சி....

நான் பாக்கியசாலியாகிப்போன நிகழ்ச்சிகள் பலவுண்டு. ஜவஹர்லால் நேரு பெங்களூருக்கு வந்தபோது, கர்நாடக மாநில அரசு என் கலை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தது.

நாட்டிய நிகழ்ச்சியைப் பார்த்த நேரு, குழந்தைச் சிரிப்புடன், Fantastic dance recital என்றார். நான் அந்தக் கணம் வானத்தில் மிதந்தேன். எனது நடன நிகழ்ச்சி ஒவ்வொன்றுமே எனக்குச் சந்தோஷத்தைக் கொடுத்தது. பெரும் பிரமுகர்களான புல்கானின், குருஷாவ், முன்னாள் பாரசீக மன்னர்ஷா, இந்திரா காந்தி ஆகியோர்முன்தோன்ற இத்தக்கலையேகைகொடுத்தது.

இதோ இக்கலை மீண்டும் என்னைப் பெருமையுறச்செய்து விட்டது. ஐ. நா. சபையில் இருந்து எனக்கு அழைப்பு வந்துள்ளது. நான் இந்நடனத்தைஎன் வாழ்க்கையாக்கிக் கொண்டு விட்டதில் என்ன தவறு?''

பேட்டி: கே. எல். ராமன்


24 வயதான மாநிறமான வடகலை கௌசிகோத்திரம் பட்டதாரிப்பெண்ணுக்கு நல்ல உத்தியோகத்தில் உள்ள ரூ. 100க்கு மேல் வருவாய் உள்ள பிள்ளைகளின் பெற்றோர்களிடமிருந்து கடிதப் போக்கு வரத்துக் கோரப்படுகிறது. பெண் ஜன்ம நட்சத்திரம் பூரட்டாதி, உயரம் 170 .செ.மீ. சுத்த ஜாதகம். தகுதியான வரனுக்கு ரூபாய் 50 (ஐம்பது) ஆயிரம் வரை செலவு செய்யப்படும்.

பெட்டி எண் 135

பாங்கில் பணி புரியும் ரூ. 1500 மாத வருமானம், எம். ஏ. படித்த 32 வயது, 5, 8'' ஏதாவது உத்தியோகத்திலுள்ள, படித்தஅழகான 30 வயதுக்குள்ளானநாடார் வகுப்புப் பெண் தேவை. எளிய திருமணம் விரும்பத் தக்கது. செல்வ நிலை முக்கியமில்லை.

பெட்டி எண் 136

32 வயதுள்ள பி.யூ.சி. (பி.காம்) டைப்ஹையர், தமிழ் லோயர், மற்றும் தையல்



பரீட்சை பாஸ் செய்துள்ள லக்ஷணமுள்ள குடும்பப் பாங்கான கன்னட மாத்வ பெண்ணுக்கு கௌண்டின்ய கோத்ரம் அல்லாத 34 வயதிலிருந்து 40க்குள் மாத்வ கன்னட மணமகன் தேவை. அவனுடைய சகோதரன் 39 வயது தனியார் கம்பெனியில் ரூ. 1000 வருமானமுள்ள நல்ல லக்ஷணமுள்ள வரனுக்கு 29–33க்குள் குடும்பப் பாங்கான மணமகள் தேவை.

பெட்டி எண் 137

தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் மாதம் ரூ. 900 ஊதியம் பெறும் எம். ஏ. படித்த நல்ல குடும்பத்தைச் சேர்ந்த 29 வயது இந்து, ஆதி திராவிட இனத்து மண மகனுக்கு அதே இனத்தில் பேங்க், மற்றும் அரசு நிறுவனங்களில் பணிபுரியும் நல்ல அழகுள்ள 25 வயதுக்குட்பட்ட நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பட்டதாரிப் பெண் தேவை. முழு விவரங்களுடன் எழுதவும்.

பெட்டி எண் 138

30 வயதுள்ள வாணியச் செட்டியார் வகுப்பைச் சேர்ந்த நல்ல குடும்பப் பொறுப்பும் குடும்ப வேலைகளை நன்கு அறிந்த நல்ல குடும்பத்தைச் சேர்ந்த கோவை மாவட்டத்தில் மாநில சர்க்கார் அலுவலகத்தில் பணிபுரியும் பெண்ணுக்கு வரன் தேவை. வரன் வயது 35க்குள்ளும், முடிந்த வரையில் அதே ஜாதியைச் சேர்ந்தவராகவும் இருத்தல் நல்லது. வரன் மாநில, மத்திய அரசில் வேலை செய்பவராகவும் இருத்தல் நல்லது.

பெட்டி எண் 139

21 வயதுள்ள துளுவ வெள்ளாளர் வகுப்பைச் சேர்ந்த பெண்ணுக்கு நல்ல குணம், படிப்பு உள்ள மணமகன் தேவை. மணமகன் சென்னை, கோவை, மதுரையைச் சேர்ந்தவராயிருப்பின் நலம். பெண் உயரம் 5'. படிப்பு எஸ். எஸ். எல். சி. நட்சத்திரம் ரேவதி. பருமனற்ற அழகு. பொழுது போக்காக போட்டோகிராபி கற்றுள்ளாள். தகப்பனர் தமிழ்நாடு அரசில் அதிகாரியாக உள்ளார். விருப்பமுள்ளவர்கள் ஜாதகத்துடன் தொடர்பு கொள்க. வெள்ளாளர் உட்பிரிவு எதுவாக இருந்தாலும் சம்மதம்.

பெட்டி எண் 140

நல்ல குடும்பப் பொறுப்புள்ள, குடும்ப வேலைகள் நன்கு அறிந்த, நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த கேரள இழவா (தீயா) வகுப்பு, 25 வயது, எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்த (திருவோண நட்சத்திரம்) அழகுள்ள ஒரே பெண்ணுக்கு அதே ஜாதியில் நல்ல வரன் தேவை. தகப்பனர் சென்னையில் இரயில்வேயில் பணிபுரிகிறார். திருமணம் எளிய முறையில் தக்கபடி நடத்தப்படும். ஜாதகக் குறிப்புடன் மற்ற விவரங்களும் அனுப்பவும்.

பெட்டி எண் 141

கபி கோத்ரம், மிருகசீர்ஷ நட்சத்திரம், பிரஹச்சரண வகுப்பைச் சேர்ந்த 28 வயது பெண்ணுக்கு நல்லதொரு உத்தியோகத்தில் உள்ள படித்த அய்யர் குடும்பத்தைச் சேர்ந்த மணமகன் தேவை. பெண் பி.ஏ. படித்து மத்திய அரசாங்கத்தில் பம்பாயில் மாதம் ரூ. 800 சம்பாதிக்கிறாள். விருப்பம் உள்ளவர்கள் ஜாதகத்துடன் விண்ணப்பம் அனுப்பவும்.

பெட்டி எண் 142

மாதம் ரூ. 640 சம்பளம், தனியார் கம்பெனியில் நிரந்தரமாக்கப்பட்ட வேலை. 26 வயது கௌண்டின்ய கோத்திரம், திருவோண நட்சத்திரம் 5 அடி உயரமுள்ள சோழிய ஐயங்கார் பெண்ணுக்கு அதே பிரிவிலோ அல்லது மற்ற ஐயங்கார் பிரிவிலோ சென்னையிலேயே இருக்கும் அல்லது சென்னைக்கு மாற்றிக்கொள்ள முடிந்தவராகவோ உள்ள மணமகன் தேவை. கம்பெனி சென்னையில் மட்டுமே உள்ளது.

பெட்டி எண் 143

சென்னையில் உள்ள சைவ வேளாள குலத்தைச் சேர்ந்த 34 வயது நிரம்பிய நல்ல குணம் நடத்தை, நல்லதொரு உத்தியோகம் மாத வருமானம் 2000 பெறும் பி. காம் பட்டதாரி வாலிபருக்கு பட்டதாரியான நல்ல நிறமுள்ள சுத்த சைவம், வசதியுள்ள அல்லது உத்தியோகத்தில் உள்ள மணமகள் தேவை.

பெட்டி எண் 144

காஸ்யப கோத்ரம் பிரஹசரணம் பிரிவைச் சேர்ந்த நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பி. எஸ்.ஸி. பட்டதாரியான தமிழக அரசில் வேலை பார்க்கும், சம்பளம் ரூ. 600 வாங்கும் பையனுக்கு (பூச நட்சத்திரம் உயரம் 5 அடி 6 அங்குலம்) அதே பிரிவைச் சேர்ந்த அல்லது வடமாள் பிரிவைச் சேர்ந்த 23 வயதுக்குட்பட்ட, நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பெண் தேவை. உத்தியோகம் பார்ப்பது அவசியம். ஜாதகத்துடனும், முடிந்தால் போட்டோவுடனும் தொடர்பு கொள்க.

பெட்டி எண் 145

ஒரு பெரிய நிறுவனத்தில் ரூ. 1000 சம்பாதிக்கும் 29 வயது இந்து நாடார் பட்டதாரி இளைஞருக்கு அதே இனத்தில் அழகும், குணமும் ஒருங்கே அமைந்த, படித்து உத்தியோகத்தில் இருக்கும் அல்லது வசதியுள்ள மணப் பெண் 24 வயதுக்குள் தேவை.

பெட்டி .எண் 146

கௌண்டின்ய கோத்ரம், பிரஹசரணம், தமிழ் அய்யர் குடும்பத்தைச் சேர்ந்த பட்டதாரிப் பெண்ணுக்கு மணமகன் தேவை. உயரம் 5 அடி சிவப்பு நிறம். பூசம். பி.ஏ. பி.எட். 31 வயது. உயரம் 5 அடி மாநிறம் பூராடம். பி.ஏ. 28 வயது. அக்கா தங்கை இருவருக்கும் 35 முதல் 38 வயதுக்குள் மணமகன்கள் தேவை. வரதட்சிணை இல்லாமல் முற்போக்கு எண்ணம் கொண்டவர்கள் ஜாதகங்களுடன் விண்ணப்பிக்கலாம்.

பெட்டி எண் 147

25 வயதுள்ள எல்.எஸ்ஸி படித்து மாநில சர்க்கார் உத்தியோகத்தில் மாதம் ரூ. 900 சம்பாதிக்கும் அகமுடையார் சாதியைச் சேர்ந்த பெண்ணுக்கு அதே சாதியில் அதே போன்று போஸ்ட் கிராஜுவேட் படித்து வேலையிலிருக்கும் வரன் தேவை.

பெட்டி எண் 148

கௌசிக கோத்திரத்தில் ரேவதி நட்சத்திரம், பிரஹசரணம், 5, 3'' அய்யர் வகுப்பைச் சேர்ந்த பி.ஏ. பட்டதாரி 28 வயது பெண்ணுக்கு வடமாள் பிரஹசரணம் வகுப்பில் நல்ல உத்தியோகத்தில் உள்ள மணமகன் தேவை. கண்ணாடி அணிந்திருப்பவள். விவரங்களுக்கு ஜாதகத்துடன் எழுதவும். பெண்ணுக்குச் சிறிது செவ்வாய் தோஷம் உண்டு.

பெட்டி எண் 149

இந்து நாடார் வகுப்பைச் சேர்ந்த 24 வயதுப் பெண்ணுக்கு (Divorce and is having a Female child) இந்து - கிறிஸ்டியன் நாடார் வகுப்பைச் சேர்ந்த மணமகன் தேவை.

பெட்டி எண் 150

30 வயதுள்ள கார்காத்தவேளாளர் வகுப்பைச் சேர்ந்த சங்கீத பூஷணம் பட்டயம் பெற்ற பட்டதாரியான பணிபுரியும் மணமகன் தேவை. பெண் பணிபுரியவில்லை. குடும்பப் பாங்கான பொறுப்பேற்று நடத்தக்கூடிய வரன் தேவை.

பெட்டி எண் 151

தனியார் நிறுவனத்தில் பணியாற்றும், மாதம் ரூ. 725 சம்பாதிக்கும் 31 வயது நிரம்பிய 5, 1'' உயரமுள்ள டி. காம் படித்த மாத்வா கன்னடம் பேசும், புனர்பூசம் கஸ்யப கோத்திரம் பையனுக்கு அதே வகுப்பைச் சேர்ந்த நல்ல குடும்பத்து அழகான சென்னை நகரில் வேலை பார்க்கும் பெண் தேவை. விருப்பம் உள்ளவர்கள் ஜாதகத்துடன் புகைப்படம் அனுப்பித் தொடர்பு கொள்ளவும்.

பெட்டி எண் 152

அழகு, குணம், படிப்பு, வேலை அல்லது செல்வம் இருந்தும், தனக்கு தாலி பாக்கியம் அதாவது துணைவன் அமையவில்லையே என ஏங்கும்; அப்படி நல்ல துணை அமைந்தால் நல்லதொரு குடும்பமாக வாழ்ந்து காண்பிக்கத் துடிக்கும் பெண், பெங்களூரில் மத்திய அரசில் பணியாற்றும் 36 வயது முதலியார் நபருக்கு இரண்டாம் தாரமாகத் தேவை.

பெட்டி எண் 153

எம். காம் படித்து பம்பாய் கிசர்ல் பாங்கில் மாத வருமானம் ரூ. 1200 பெறும் 23வயது. உயரம் 161 செ.மீ. வடகலை அய்யங்கார் நைத்ரப காஸ்யப கோத்ரம் நல்ல நிறமுள்ள லட்சணம் பொருந்திய குடும்பப் பாங்கான பெண்ணுக்கு அதே வகுப்பைச் சேர்ந்த 30 வயதிற்குட்பட்ட சி.ஏ (அ).பி.எச்.டி (அ)

எம்.பி.ஏ. (அ) பி. டெக் படித்து உயர்ந்த வேலையில் இருக்கும் குணமுள்ள தக்க வரன் தேவை. முழு விவரங்கள் ஜாதகத்துடன் அனுப்பவும்.

பெட்டி எண் 154

தென்னார்க்காடு மாவட்டம் திருக்கோவிலூர் பார்க்கவ குலம் (நத்தமன் வகையறு) பள்ளி இறுதி ஆண்டு முடித்த அழகிய 18 வயது மணமகளுக்கு அதே வகுப்பைச் சேர்ந்த நல்ல வேலை (அ) தொழில் செய்யும் மணமகன் தேவை.

பெட்டி எண் 155

மத்திய அரசில் மாதச் சம்பளம் ரூ. 700 பெறும் 28 வயது, பிரஹசரணம், கௌண்டின்ய கோத்திர பட்டதாரிப் பெண்ணுக்கு வரன் தேவை. திருமணம் சுமாராகச் செய்ய முடியும். மற்ற உட் பிரிவினராஜனும் ஜாதகத்துடன் தொடர்பு கொள்க.

பெட்டி எண் 156

கேரள மாநிலம் பாலக்காடு நல்ல குடும்பத்தைச் சேர்ந்த 29 வயது எம்.ஏ. (லிட்) வேளுன வகுப்பு, சித்திரை மூன்றும் பாதம் ஒரே மகன் ஷெட்யூல் வங்கியில் வேலை பார்க்கும் மணமகனுக்கு கல்வியுடன் அழகும் குடும்பப் பாங்கான அதே வகுப்பைச் சேர்ந்த 23வயதுக்குட்பட்டமணமகள்தேவை.விருப்பமுடைய பெற்றோர்கள் ஜாதகம்,போட்டோவுடன் எழுதவும். பெண்ணைப் பிடித்து ஜாதகமும் பொருந்திவிட்டால் கொடுக்கல் வாங்கல் பிரச்னையாக இருக்காது.

பெட்டி எண் 157

பம்பாயிலுள்ள, மாத்வா பிராமண, 29 வயது, நான்கு இலக்க சம்பளம் பெறும் மணமகனுக்கு 26 வயதுக்குள் வேலையிலுள்ள மணமகள் தேவை. ஜாதி, தகுதி பேதமில்லை.

பெட்டி எண் 158

31 வயது நிரம்பிய வடகலை ஐயங்கார் ஸ்ரீவத்ஸ கோத்ரத்தைச் சேர்ந்த பரணி நட்சத்திரப் பெண்ணுக்கு 34 வயதுக்கு மேற்பட்ட நல்ல வேலையில் உள்ள மணமகன் தேவை. பெண் நல்ல நிரந்தரமான பணியில் உள்ளாள். ஜாதகம், மற்ற பிற விவரங்களுடன் தொடர்பு கொள்க.

பெட்டி எண் 159

கௌண்டின்ய கோத்ரம், வடகலை ஐயங்கார் மக நட்சத்திரம் 31 வயது ரூ. 1000 சம்பளம் பெறும் பெண்ணுக்குத் தில்லியில் வேலை பார்க்கும் பையன் தேவை.

பெட்டி எண் 160

கௌசிக கோத்ரம், வடமான், ரோஹிணி நட்சத்திரம், 30 வயது எம். எஸ்.சி. படித்த அரசுடைமையாக்கப்பட்ட வங்கியில் பணி புரியும் இளைஞருக்குப் பெண் தேவை. பெண் வடமாள், அல்லது பிரஹசரணம் வகுப்பை சார்ந்தவராகவும், பார்வைக்கு லக்ஷணமாகவும், பட்டதாரியாகவும், உயரம்.5, 3''க்கு மேல் உள்ளவராகவும் இருக்க வேண்டியது அவசியம்.

பெட்டி எண் 161

தமிழக அரசில் பணி புரியும் மாதம் ரூ. 600க்கு மேல் ஊதியம் பெறும் 28 வயது பட்டதாரி, கம்மவார் நாயுடு பெண்ணுக்கு 33 வயதுக்குள் செவ்வாய் தோஷம் உள்ள மத்திய அல்லது மாநிலஅரசில் வேலைசெய்யும் வரன் தேவை. அதே ஜாதியில் மற்ற உட்பிரிவினரும் விண்ணப்பிக்கலாம். ஜாதகம், புகைப்படம் மற்ற பிற விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். நட்சத்திரம் அவிட்டம்.

பெட்டி எண் 162

காஸ்யப கோத்ரம், அஷ்ட ஸஹஸ்ரம், ஹஸ்த நட்சத்திரம், 22 வயது பி. காம் பைனல் வருடம் படித்துக் கொண்டிருக்கும் மத்யம நிறமுள்ள பெண்ணுக்கு உயர்ந்த கம்பெனிகளிலோ அல்லது மத்திய மாநில அலுவலகத்திலோ ரூபாய் ஆயிரத்துக்கு மேல் சம்பாதிக்கும், சமபடிப்புள்ளமண மகன் தேவை. ஜாதகம் மற்ற விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

பெட்டி எண் 163

விஸ்வகர்மா (தமிழ்) 26 வயது, ஸானக ரிஷி கோத்திரம் ஸதய நட்சத்திரம பி.ஏ. பட்டதாரிப் பெண்ணுக்கு அதே இனத்தைச் சேர்ந்த நல்ல குடும்பத்தைச் சேர்ந்த வரன் தேவை. 32 வயதுக்குள் இருக்க வேண்டும். குறிப்பாக சென்னை, வடார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவராகவோ அல்லது வசிப்பவராகவோ இருக்கலாம். பிற மாவட்டத்தைச்சேர்ந்தவர்களாளுலும்பரவாயில்லை.

பெட்டி எண் 164

பிரபல தெலுங்கு பிராமண குடும்பம், சுத்த வெலநாடு பிரிவைச்சேர்ந்த, பாங்கில் ஆபீசராக வேலை பார்க்கும் 30 வயது அழகான பட்டதாரிக்கு தகுதியான, அதே பிரிவைச் சேர்ந்த குடும்பப் பொறுப்புள்ள அழகான, கர்க்ய கோத்திரம் அல்லாத தெலுங்கு பிராமணபட்டதாரி பெண்தேவை. ஜாதகப் பொருத்தம் அவசியம். தகுந்த முறையில் சீர் வரிசைகளும், கல்யாணமும் செய்யக்கூடியவர்கள் ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும்.

பெட்டி எண் 165

பெங்களூரில் மத்திய அரசு ஆராய்ச்சிக் கூடத்தில் மின் துறையில் டெக்னிஷியனாகப் பணியாற்றும் விசால மனப்பான்மையும் நல்ல தேக ஆரோக்கியத்துடன் 5' 3'' உயரமும் 52 கிலோ எடையும் கொண்ட

"தலைமுறை தலைமுறையாக
மக்கள் பயன்படுத்திவரும்
இந்திய மருந்துகளின்
சக்தியே தனி...

அவற்றுள்
தனிச்சிறப்பு
வாய்ந்தது
அமிர்தாஞ்சன்."



தலைமுறை தலைமுறையாக மக்கள் நம்பிக்கையோடு பயன்படுத்திவரும் அமிர்தாஞ்சன் பத்து மருந்துப்பொருள்கள் அடங்கியது. இவை பத்தும் இயற்கையின் அற்புதமான சக்திவாய்ந்த மருந்துகள். அதனால்தான் அமிர்தர்ஞ்சன் ஒரு சக்திமிக்க வலி நிவாரணியாக விளங்குகிறது.

இதன் பயனாக தலைவலி, ஜலதோஷம், உடல்வலி, சுளுக்கு இவை எல்லாவற்றுக்குமே அமிர்தாஞ்சன் விரைவாக நிச்சயமாக நிவாரணம் அளிக்கிறது. அமிர்தாஞ்சன் உபயோகிப்பதால் ஆபத்து இல்லை. இதனால் வேறு தீய விளைவுகள் ஏதுவும் ஏற்படாது.

அமிர்தாஞ்சன் — 80 ஆண்டுகளுக்கும் மேலாகப் பல குடும்பங்களில் பயன் பட்டுவரும் நம்பகமான மருந்து.



AM-2148

அமிர்தாஞ்சன்

தலைவலி. ஜலதோஷம். உடல்வலி. சுளுக்கு — அனைத்தையும் போக்க அருமையான மருந்து.

முதலியார் வகுப்பைச் சேர்ந்த யாரும் ஆதரவற்ற 29 வயது நிரம்பிய மாத சம்பளம் ரூபாய் 920 பெறும் மணமகனுக்கு அரசு அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் பணியாற்றும் மணமகள் தேவை. இனம், மொழி, ஏழ்மை, விதவை போன்ற பாகுபாடு இல்லை.

பெட்டி எண் 166

குடும்பப் பொறுப்புள்ள தென்கலை ஐயங்கார் 21 வயதுள்ள ஆரோக்கியமான, நல்ல நிறம் உள்ள பெண்ணுக்கு வரன் தேவை. மெட்ரிக்வரை படித்திருக்கிறாள். தமிழ், ஹிந்தி, ஆங்கிலம் மூன்று மொழிகள் பேசத் தெரியும். சிறிய முறையில் திருமணத்தை பாட்டி நடத்துவாள். பாரத்வாஜ கோத்திரம். ஜாதகம் மற்ற விவரங்களுக்கு விண்ணப்பிக்கவும்.

பெட்டி எண் 167

நாயுடு வகுப்பைச் சேர்ந்த சினிமா தியேட்டர் உரிமையாளரான நல்ல வசதியுள்ள, உயரமான, 35 வயதுள்ள வரனுக்கு நாயுடு வகுப்பைச் சேர்ந்த அல்லது தந்தையோ தாயோ நாயுடு வகுப்பினராயுள்ள குடும்பங்களிலிருந்து நல்ல குணமும், அழகும் நிறமும் உயரமும் உள்ள பெண் தேவை. ஜாதகம், மற்ற விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

பெட்டி எண் 168

குடும்பப் பாங்கான சகோதரிகள் இருவருக்கு ஐயர் வகுப்பில் கௌசிக கோத்திரமல்லாத வரன்கள் தேவை. ஒருத்தி 32 வயது, எஸ்.எஸ்.எல்.சி., வேலையில்லை. மற்றவள் எஸ்.எஸ்.எல்.சி., தனியார் கம்பெனியில் பம்பாயில் வேலையிலுள்ளாள். சகோதரர்கள் 37 வயது, பிஎச்.டி., விஞ்ஞான அதிகாரி; சம்பளம் ரூ. 2000. 34 வயது, பி.யூ.சி. ஆபீஸ் உதவியாளர் சம்பளம் ரூ. 1200. இவர்களுடன் பெண் கொடுத்து பெண் பெறவும் தயார். எழுதுக.

பெட்டி எண் 169

பி.எஸ்.ஸி., பரணி நட்சத்திரம், 25வயது, 5' 1''. உயரமுடைய ஒரேமகளுக்கு ஸ்ரீவத்ஸ கோத்திரமல்லாத நல்ல வேலையில் இருக்கும் மணமகன் தேவை. குடும்ப விவரங்கள், ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

பெட்டி எண் 170

கேரள, வாத்யமா 30 — 28 வயது, பட்டதாரி சகோதரிகளுக்கு காஸ்யப கோத்ரமல்லாத நல்ல வேலையில் இருக்கும் மணமகன்கள் தேவை. ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். உட்பிரிவுகள் பேதமில்லை.

பெட்டி எண் 171

செட்டியார் வகுப்பைச் சேர்ந்த எஸ்.எஸ். எல். சி. உயரம் 5' 4''. சிவப்பு, மெல்லிய தேகம் உள்ள பெண்ணுக்கு மத்திய மாநில அரசில் மாதம் ரூ. 600 ஊதியம் பெறும் நல்ல குணம், வயது 32க்குள் இருக்கக் கூடியசெட்டியார், முதலியார், பிள்ளைவகுப்பிலிருந்து மணமகன் போட்டோவுடன் விண்ணப்பிக்கவும்.

பெட்டி எண் 172

ஜோத்பூரில் உள்ள டி. வி. எஸ். நிறுவனத்தில் வேலை பார்க்கும் மாதம் ரூ. 750 வருமானமுள்ள அவிட்ட நட்சத்திரம் ஆத்ரேய கோத்திரம், சோழ தேச வடமாள் பிரிவைச் சேர்ந்த பையனுக்கு 33 வயதுக்கு மேற்படாத மணமகள் தேவை. ஐயர் வகுப்பில் உட்பிரிவுகள் பரவாயில்லை. பெண் ஜாதகமும் போட்டோவும் அனுப்பவும். ஜோத்பூரிலேயே உத்தியோகத்திலிருந்தாலோ அல்லது உத்தியோகம் செய்யும் தகுதி பெற்றிருப்பதோ நல்லது.

பெட்டி எண் 173

பாரத்வாஜ கோத்திரம். வடமாள் பூர நக்ஷத்திரம் பி.ஏ. படித்து, சங்கீத வித்வான் பட்டமும் பெற்று கர்நாடக சங்கீதத்தில் பல கச்சேரிகள் செய்து வரும் அழகிய 26 வயதுப் பெண்ணுக்கு பரந்த மனப்பான்மை உடைய 30 வயதிலிருந்து 34 வயதுக்குள் உள்ள நல்ல வேலையில் இருக்கும் பட்டதாரி மணமகன் தேவை. பெண்ணுக்கு மாதம் சராசரி வருமானம் ரூ. 400 வீட்டு நிர்வாகத்திலும் தேர்ச்சி உள்ளவள். புகைப் படத்துடன் விண்ணப்பிக்கவும்.

பெட்டி எண் 174

பம்பாயில் சொந்த ஃப்ளாட்டுடன் நல் வேலையில் இருக்கும் 36 வயது வடமாள் இளைஞருக்கு பாரத்வாஜ கோத்திரம் அல்லாத நல்ல பழகும் தன்மையுள்ள செவ்வாய் தோஷமுள்ள மணமகள் இரண்டாந்தாரமாகத் தேவை. 5 வயது மகன் உண்டு. குடும்ப விவரங்களுடன் ஜாதக நகலுடன் விண்ணப்பிக்கவும்.

பெட்டி எண் 175

27 வயதுள்ள பி.எஸ்.ஸி. பட்டதாரி, மாநிறம், உயரம் 5 அடி 3 அங்குலம் பி. அண்ட் டி. இலாகாவில் குமாஸ்தாவாக வேலைசெய்யும் (சீக்கிரமே ஜூனியர் அஸிஸ்டெண்டாகப் பதவி உயர்வு கிடைக்கலாம்) பெண்ணுக்கு நல்ல வேலையில் உள்ள வரன் தேவை. குழந்தைகள் இல்லாத மனைவியை இழந்த வரன்களும் விண்ணப்பிக்கலாம். கல்யாணம் சாதாரணமாக நடத்தப்படும்.

பெட்டி எண் 176

குழந்தை வளர்ப்புக் கட்டுரைத் தொடர்

டாக்டர் சுந்தரி மேனன் —

பெண்ணாய்ப் பிறந்துவிட்டால், "தாய்மை" என்னும் பேற்றை அடைந்து ஒரு குழந்தைக்குத் தாயாகி அதைப் பேணி வளர்க்கும் இன்பத்தைப் போல் இந்த உலகில் வேறெதுவும் இல்லையென்று நான் நம்புகிறேன். "அம்மா" வென்று அழைக்க ஒரு குழந்தையேனும் இல்லாவிட்டால், ஒரு பெண், கல்யாணமானவள், ஏங்குவதை போல் நான் வேறு எந்த மகத்தான ஏக்கத்தையும் பார்த்ததில்லை.

"பெரியவளான"வுடன்ஒரு பெண் தாயாகத் தயாராகி விடுகிறாள். அவளுக்குக் கல்யாணமான வயதுக்கேற்ப இரண்டு வருடங்களுக்குள் கர்ப்பமாக வேண்டும். பதினெட்டு வயதில் கல்யாணமானால் கட்டாயமாக உடனே கர்ப்பமாக வாய்ப்பு இருக்கிறது. அதாவது தம்பதிகள் 'உடனே குழந்தை வேண்டாம்' என்று கர்ப்பத் தடை முறையை அநுசரிக்காமல் இருந்தால்.

அநேகம் பேர் நாங்கள் கல்யாணமாகி குறைந்த பட்சம் இரண்டு வருடங்களாவது "ஜாலியாக" இருக்கிறோம். அதற்கு வேண்டிய தற்காப்பு முறையைச் சொல்லித் தர வேண்டும் என்று என்னிடம் கல்யாணம் நிச்சயமான உடனேயே வந்து கேட்கின்றனர்!

ஜாதகத்தை அலசி அலசிப் பார்த்து, கிரகங்களைச் சோதித்துப் பார்த்து வரதட்சிணை சீர் செனத்தி என்று ஆராய்ந்து பார்த்துக் கல்யாணம் நிச்சயிப்பதற்கு முன், பெண், பிள்ளை இருவரும் டாக்டரிடம் சென்று தாம் பெற்றோராவதற்குத் தகுதியுள்ளவரா என்று பரிசோதித்துக் கொள்ள வேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

கல்யாணமான பின், கர்ப்பத் தடைகளை உபயோகித்தாலும் இல்லாவிட்டாலும், இரண்டு மூன்று வருடங்களுக்குள் கர்ப்பமாகாவிட்டால் பிறந்த வீட்டிலும், புகுந்த வீட்டிலும் கவலைப்பட ஆரம்பித்துவிடுகிறார்கள். டாக்டர் டாக்டராக மெடிகல் ஷாப், கோவில் கோவிலாக வேண்டுதலை!

பெண்களை மருத்துவரிடம் அழைத்துச் சென்று அவள் கர்ப்பப் பை சரியாக இருக்கிறதா, அவளுக்கு D & C Tube testing, Hystero Salpingogram முதலிய செலவு பிடித்த கஷ்டமான பரிசோதனைகளைச் செய்வதற்கு முன் அவளுடைய கணவனை டாக்டரிடம் சென்று அவன் தந்தையாவதற்குத் தகுதி உள்ளவனா? அவனுடைய இந்திரியத்தில் "ஆண் விந்துக்கள்" சரிவர இருக்கின்றனவா? என்று பரிசோதித்துக் கொண்டு வரச் சொல்ல வேண்டும். இது மிகச் சுலபமான பரிசோதனை. பெரும்பாலும் ஆண்கள் தங்களிடம் யாதொரு தவறும் இல்லை. தன் சம்சாரம்தான் மலடியாக இருக்க வாய்ப்பு இருக்கிறது என்று வாதாடுவார்கள்.

பிள்ளைக் கனியமுதே உன்னைப் பேணி வளர்ப்போமே



கூடுமானவரையில் கல்யாணமானவுடன் கர்ப்பத் தடை முறையை உபயோகிக்காமல் முதல் குழந்தையை முத்துப் போல் பெற்றெடுத்துக் கொள்வதே சிறந்தது. இரண்டாவதைத் தள்ளிப் போடலாம். இரண்டுக்கு மேல் வேண்டாம் என்று வைக்கலாம்.

ஒவ்வொரு குழந்தையும் பெற்றோர் வேண்டும் என்று விரும்பி ஆசையுடன் எதிர்பார்த்து வரும் செல்வமாக இருக்கவேண்டும். வேண்டாமல், எதிர்பாராமல் ஏற்படும் கர்ப்பத்தில் உண்டாகும் மழலைச் செல்வங்கள் வெகுவாகப் பாதிக்கப்படும். கர்ப்பக் காலத்தில் தாய் தன்னைப் பேணிக் காப்பாற்றி எடுத்துக்கொள்ளும் பராமரிப்பிலும் உண்ணும் உணவிலும் இருக்கும் மனநிலையிலும், சூழ்நிலையிலும், கர்ப்பப் பையில் வளரும் குழந்தையின் ஆரோக்கியமும் பிறந்த பிறகும்

இருக்கும் உடல், உள்ள வளர்ச்சியும் அடங்கி இருக்கின்றன.

கர்ப்பமுற்றது முதல் பிள்ளை பெறும்வரை தன் பேறுகாலத்தை எதிர்பார்த்துச் சந்தோஷமாக இருக்கும் தாய் பெரும்பாலும் கஷ்டமின்றிப் பிரசவித்து, குழந்தைக்குத் தாய்ப் பாலும் ஊட்டுகிறாள்.

சாதாரணமாக மாதவிடாய் நின்று சுமார் பதினைந்து தினங்களுக்குள் அது கர்ப்பமாக இருந்தால், வாயில் ஜலம் ஊறுதல், காலையில் பல் தேய்க்கும்போது வயிறு குமட்டுதல், சில சில உணவு வகைகள் பிடிக்காமல் இருப்பதும் சில வாசனைகள் வெறுப்பூட்டுவது (உதாரணமாக காப்பி வாசனை, ரசம் கொதிக்கும்வாசனை, தாளிக்கும்வாசனை) முதலியவை உண்டாகும். இதை ''மசக்கை'' என்றும் Morning Sickness என்றும் கூறுவார்கள். இது நாளடைவில் தானாக நின்றுவிடும். சில பெண்கள் பச்சரிசி, சாம்பல், விபூதி முதலியவற்றை ரகசியமாகத் தின்ன விரும்புவார்கள்! சிலருக்கு ஒரு குறிப்பிட்ட பொருள் மேலோ உணவு மேலோ ஆசை உண்டாகும்.

நம் நாட்டில் ''உண்டான'' பெண்ணை பிறந்தகம் அழைத்துச் சென்று ''மசக்கைப் பட்சணம், பலகாரம்' செய்து கொடுப்பது காலம் காலமாய் நடக்கும் வழக்கம். இதற்கு வேறொரு காரணமும் உண்டு. பேறுகாலம் நெருங்கும் சமயத்தில் கணவன் மனைவியைப் பிரித்து வைப்பதும், உடலுறவைத் தவிர்ப்பதும் நல்லது என்றும் ஒரு நம்பிக்கை. இதற்கு ஸயன்டிஃபிக்கான ரீதியில் சொல்லப் போனால், அபார்ஷன், திடீர் உதிரம் காணுதல், மூத்திரம் போகும் போது எரிச்சல், பெண் உறுப்பில் அரிப்பு வருவது முதலியவற்றைத் தவிர்ப்பதற்கேயாகும்.

இரண்டாம் மாதம் முடிந்த உடனேயே மார்பகங்கள் பருத்துக் கனத்துக்கொண்டு சில சமயம் மார்புக் காம்புகளிலிருந்து நீர்க் கசிவு ஏற்படலாம். காம்பைச் சுற்றி வட்டம் கறுப்பாக மாறும். பழைய காலத்தில்கூட பாட்டிகள் இந்த மாறுதலைக் கண்டு கர்ப்பம் என்று கண்டு பிடிப்பார்கள்.

சுமார் 25 நாட்களுக்குள் சிறுநீரைக் கொண்டு ஒரு பரிட்சை செய்து கர்ப்பம் உண்டா இல்லையா என்று கண்டு பிடிக்கலாம்.

தற்கால விஞ்ஞான ரீதிப்படி கர்ப்பம் தரித்திருக்கும் பெண் டாக்டர் ஆலோசனையின்றி எந்த விதமான மருந்தும் சாப்பிடக் கூடாது. ஆஸ்பிரின் ஆண்டி பயாட்டிக் போன்ற சில மருந்துகள் கூட முதல் நான்கு மாதத்துக்குள் சாப்பிட்டால் வளரும் குழந்தையின் உடலையோ, மூளையையோ ஊனமுறச் செய்யலாம்.

கூடுமானவரை விட்டமின் 'ஸி', 'பி' காம்ப்ளெக்ஸ், ஃபோலிக்காஸிட் முதலியவை மட்டும் சாப்பிடலாம். மற்ற மருந்துகளைத் தவிர்ப்பது நல்லது. முதல் நான்கு மாதத்திற்குள்தான் வளரும் குழந்தையின் ஒவ்

திருமண மலர்

திருமணம் செய்து கொள்ள விரும்பும் ஆண்களும் பெண்களும் இந்தப் பகுதிக்கு விளம்பரங்களை அனுப்பலாம். கட்டணம் ரூ. 10/- மட்டுமே. இந்தக் கட்டணம் மங்கையர் மலர் என்ற பெயருக்கு போஸ்டல் ஆர்டராக மட்டுமே அனுப்பப்பட வேண்டும்.

ஒரு விண்ணப்பத்தில் ஒருவருக்கு மட்டுமே விளம்பரம் தரவேண்டும்.

விளம்பரத்திற்குப் பதில் எழுதும்போது பெட்டி எண்ணை மறக்காமல் குறிப்பிட வேண்டும்.

முகவரி :

'திருமண மலர்'ப் பகுதி
மங்கையர் மலர், கிண்டி, சென்னை-32

வொரு செல்லும் இன்ன இன்ன உறுப்பை உண்டாக்கும் என்று நிர்மானிக்கப்படுகிறது' (Organogenesis period) இந்த 1st Trimester எனப்படும் சமயத்தில் 'தட்டம்மை' German Measels முதலியவை ஏற்பட்டால் அது குழந்தையைப் பாதிக்கக் கூடும்.

நமது பாட்டிமார் காலத்தில் இந்தச் சமயத்தில் ஒரு நல்ல நாள் பார்த்து பெண்ணுக்கு விளக்கெண்ணெய் அல்லது மருந்து எண்ணெய் கொடுப்பார்கள். அது அநாவசியம். கர்ப்பவதி பால், பழம், கீரை வகைகளைச் சாப்பிட்டு, நல்ல முறையில் சுறுசுறுப்பாக இருந்தால் மலச்சிக்கல் ஏற்படாது.

நமது நாட்டில் பெரும்பாலோர் ''வளை காப்பு'' 'சீமந்தம்'' என்னும் இரண்டு சடங்குகளை நடத்துகிறார்கள். கர்ப்பவதி ஆனந்தமாக இருப்பதற்குக் கலர் கலராக வளையல்களை அடுக்கி விட்டும், நல்ல புடவைகளைக் கொடுத்து மகிழ்ச்சியுறச் செய்தும் இந்த நிகழ்ச்சியைக் கொண்டாடும் விதத்தில் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் விருந்தளிப்பார்கள். உறவினரும் நண்பர்களும் பரிசுகள் வழங்குவார்கள்.

அமெரிக்கா, ஜப்பான் போன்ற மேலை நாடுகளிலும் baby shower 'பேபி ஷோவர்' என்ற பெயரில் இந்த வைபவம் நடக்கிறது. நண்பர்களும் உறவினர்களும் வரப்போகும் குழந்தைக்காக பலப் பல விளையாட்டுச் சாமான்கள், துணி மணி, குழந்தைச் சட்டை, குளிக்கும் தொட்டி முதலியவற்றைத் தருவார்கள். இதைத் தாயாகப் போகும் பெண் மிகவும் விரும்புகிறாள்.

பெரியவர்களும் பாட்டிமார்களும் கர்ப்பமாகியிருக்கும் பெண்ணிடம் ''நீ டாக்டரிடம் போகாதே, டானிக் சாப்பிடாதே குழந்தை ரொம்பப் பெரிதாகிவிடும். பிரசவம் கஷ்டமாகும்'' என்றெல்லாம் அறிவுரை சொல்வதை நான் கேட்டிருக்கிறேன்.

தாயின் உடல், ஆரோக்கிய நிலை, சிசுவின்

தாயின் ஆரோக்கிய நிலை, சிசுவின் வளர்ச்சிக்கும் .பேறுகாலத்துக்கும் மிகவும் முக்கியம். கர்ப்ப காலத்தில் நல்ல ஆரோக்கியமான உணவு வகைகள், டாக்டர் ஆலோசனைபடி புரத சத்து டானிக், விடமின், இரும்பு கால்ஷியம் முதலியவற்றைச் சாப்பிடாவிட்டால் பிறக்கப் போகும் குழந்தை பிறந்து மூன்று மாதத்துக்குள் பலவீனமடையலாம். இரத்தக் குறைவினால் ஜீரணம், எடை முதலியவை பாதிக்கப்படும். தாயின் இரத்தத்திலிருந்துதான் சிசுவுக்கு வேண்டிய போஷாக்குப் போகிறது. தாய் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். கால்ஷியம் இரும்புச் சத்துக் குறைவினால் தாயின் பற்கள், இரத்தம் முதலியவை பாதிக்கப்படலாம்.

மாதா மாதம் டாக்டரிடம் சென்று பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். இரத்தப் பரிசோதனைகள், இரத்த அழுத்தம், சிறுநீர்ப் பரிட்சை முதலியவைகளும் செய்துகொள்ள வேண்டும்.



உருளைக் கிழங்கு சீக்கிரம் வேகவேண்டுமா? இட்லி பாத்திரத்தில நீர் ஊற்றி இட்லி தட்டில் கிழங்கை வையுங்கள், சீக்கிரம் வேகும். சத்தும் போகாது. ருசியோடும் இருக்கும்.

-ஹமீமுன்னிஸா

ஏழு, எட்டு, ஒன்பது மாதங்களில் மூன்று தடுப்பு ஊசி போட்டுக் கொள்வது குழந்தைக்கும் தாய்க்கும் நல்லது. இது வலிப்பு நோயிலிருந்து தாயையும் குழந்தையையும் காப்பாற்றும்.

சிலர், கர்ப்பவதிப் பெண்கள் மல்லாந்து படுக்கக் கூடாது, இடதுபுறம், வலதுபுறம் திரும்பிப்படுக்கும்போது எழுந்து உட்கார்ந்து தான் திரும்ப வேண்டும் என்றும் எச்சரிப்பார்கள். இது அறியாமை. கர்ப்பவதி தனக்கு எவ்விதமாகப் படுத்தால் சௌகரியமோ அவ்வாறு படுக்கலாம், திரும்பவும் செய்யலாம்.

சிலருக்குக் குழந்தையின் தொப்புள் கொடி மிக நீளமாக இருந்தால் குழந்தை கொடி சுற்றிப் பிறக்கும். இதற்கும் தாய் மாறி மாறிப் படுப்பதற்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை.

மிகப் பரவலான வேறொரு நம்பிக்கையும் நம்மிடையே இருக்கிறது. கர்ப்பவதி நன்றாக நிறம் வைத்து அழகுடன் இருந்தால் பெண் பிறக்கும் என்பார்கள். இளைத்து கறுத்துப் போனால் பிள்ளைதான் பிறக்கும் என்பார்கள். இதுவும் சரியென்று படவில்லை. தாயின் உணவு, ஊட்டம், உள்ள உணர்ச்சிகளைப் பொறுத்து இருக்கிறது முகப் பொலிவு.

எட்டு மாதம் வரை இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை டாக்டரிடம் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். கடைசி மாதத்தில் வாரம் ஒரு முறை போக வேண்டும்.

டாக்டர் நமது கடைசி மாதவிடாய் எப்பொழுது ஏற்பட்டது என்பதைக் கேட்டுச் சுமார் எத்தனாம் தேதி,எந்த மாதம் குழந்தை பிறக்கும் என்று சொல்லி விடுவார். இதில் 7–8 நாட்கள் முன்போ பின்போ ஆகலாமே தவிர அதிகம் மாறுபடாது.

இனி பூரண கர்ப்பத்துக்குப் பிறகு சுகப் பிரசவமான குழந்தையை வளர்ப்பதைப் பற்றி ஆலோசிக்கலாம்.

என் வாழ்க்கையிலும் இப்படித்தான்...

○ உண்மைச் சம்பவம் (தொடர்ச்சி)

நான் பெரிய பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவள் அல்ல என்றாலும், கஷ்டம் தெரியாத வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவள்.

நான் புகுந்த குடும்பம் சின்னது. மாமனார் மாமியார். நாலு வயதில் நாத்தனார். 23 வயதுக் கணவர். 18 வயதுடைய நான்.

எங்களுடைய அறியாத வயதைக் குறிப்பிடக் காரணம், கள்ளமில்லா வயது என்பதைக் குறிப்பிடத்தான்.

சீரும் சிறப்புமாகத்தான் கல்யாணம் செய்து கொடுத்தார்கள் என்னை. பிறகுதான் தெரிந்தது புகுந்த வீடு பெருங்காய டப்பா என்று!

அன்பே உருவான, கள்ளமே தெரியாத ஆனால் மிகவும் முன்கோபக்காரரான கணவர்! வீட்டில் எப்போதும் பற்றாக்குறை. சொல்வோர் பேச்சை அப்படியே கேட்கும் மாமனார்.

தன் தலையில் தானே மண்ணைப் போட்டுக் கொள்கிறோம் என்று தெரியாமல் ஒரு காசு பெறாத விஷயங்களைப் பெரிதாக்கி, சதா பிள்ளையைப் பற்றியும், நாட்டுப் பெண்ணைப் பற்றியும் 'வத்தி' வைக்கும் மாமியார்.

ஏராளமான கனவுகளுடனும், கற்பனைகளுடனும் மாமனார் — மாமியாரைத் தாய் தந்தையரைப் போலவே பாவித்து நாத்தனாரைச் சொந்த மகளாக ஆசையைக்கொட்டி — வாழ வந்த எனக்கு — ஓ! எல்லாம் மணற் கோட்டை!

கல்யாணமாகிப் பத்து நாள்கூட ஆகவில்லை. என் கணவருடன் ஒரு நாள் வெளியில் போன நான் இருபது பைசாவுக்கு மல்லிகைப் பூ வாங்கி வைத்துக் கொண்டு வந்து விட்டேன்.

''அதென்னமாய் நீமட்டும் வாங்கி வைத்துக்கொண்டு வருவாய்? மாமியார் நாத்தனாருக்கெல்லாம் வாங்கிக்கொண்டு வரவேண்டும் என்று தெரியாதா?'' அப்படி இப்படி என்று ஒரு பிடி பிடித்து விட்டார்கள் என் மாமியார் என்னை.

அத்தோடு நின்றிருந்தால் கூடப் பரவாயில்லை. உடனே என் மாமனாரிடம் போய், ''தங்கைக்கு ஒரு முழம் பூ வாங்கி வராத அண்ணன். இனி அவளுக்கு ஒன்றும் செய்ய மாட்டான் என்று தொடங்கி மாமனார்-மாமியார் இருவரும் ஒரு 'கான்ஃபரன்ஸே' நடத்தினார்கள். இன்னும் சொல்ல என்ன இருக்கிறது? இதே ரீதியில் வாழ்க்கை தொடர்ந்தது.

நாங்கள் இருவரும் வெளியில் ஜோடியாகப் போனால் ஆகாது. ''ஓட்டல்ல தினம் டிபன் தின்னப் போறீங்களா? சினிமா போறதாகக்கு வீட்டுல சர்க்கரை இல்லே, வாங்கிப் போடேன்.'' என்ற மிரட்டல். கோயிலுக்குப் போனால் சாமி கும்பிடவா போறா காதல் பண்ணப் போறா என்ற எகத்தாளம்! இதெல்லாம் ஒரே பிள்ளையைப் பெற்றவர்கள் பேசும் பேச்சா? நாட்டுப் பெண் வந்த உடனே வயிற்றில் பிறந்த பிள்ளை விரோதியாகி விட்ட வினோதம். நான் கழிந்து பெண் பிறந்தால் பாசம் இருக்கும்தான். அதற்காக இப்படி அறிவுகூடவா கெட்டுவிடும்? இந்த லட்சணத்தில் மாமனாரின் அசுவமேத யாகம் போன்ற சில நல்ல பழக்கங்களினால் கல்யாணமாகி ஒரு, வருடத்துக்குள் என் நகைகள் எல்லாம் மார்வாடி கடைக்குப் போய்விட்டது. குடும்பம் என்றால் சகஜம் என்று வாயே திறக்கவில்லை நான். அதனால் வந்த பயன் என்ன தெரியுமா?

'என் நாட்டுப் பெண் நகைகளையெல்லாம் அப்பன் வீட்டில் கொடுத்துவிட்டு மூளி அலங்காரியாக நிற்கிறாள்' என்று என் மாமியார் கட்டிவிட்டாரே ஒரு கதை!

30 வயது மகள் குழந்தையாகத் தெரியும் மாமியார்களின் கண்களுக்கு 20 வயது மருமகள் சொல்லிக் கொடுக்க வென்றே படைக்கப்பட்ட சூர்ப்பனகையாகக் காட்சியளிப்பது ஏன்?

வந்த பெண்ணை அனுசரித்து அன்பும், பாசமும், பரிவும் கலந்து மருமகளைக் கண்ணாடிப் பாத்திரத்தைக் கையாள்வது போன்ற ஜாக்கிரதையுடன் கையாண்டால் தான் மகன் தன்னிடம் கொண்டுள்ள பாசமும் அன்பும் நிலைக்கும் என்பதை ஒவ்வொரு தாயும் — அல்ல அல்ல மாமியாரும் உணர வேண்டும்.

இனியும் படமுடியாது இந்தத் துன்பம் என்ற நிலையில் நாங்கள் தனிக் குடித்தனம் வந்து விட்டோம். பெற்றோரின் வீண் அபவாதங்கள் என் கணவரின் மனதில் கசப்பான உணர்வுகளாய்ப் படிந்து விட்டது.

எனக்கு என் மாமியார் மேல் வருத்தத்தை விட, அருமையான ஒரே மகனைத் தன் அறியாமையால் பிரிந்து தன் வாழ்நாட்களை வீண் பொறாமையிலும் வெறுப்பிலும் கழித்துக்கொண்டு விட்டார்களே என்ற பரிதாபம் தான் ஏற்படுகிறது!

'வைதேகி'

நீண்ட நாட்களாக என் சொந்த அனுபவத்தை கதையாக எழுதி எந்தப் பத்திரிகைக்காவது அனுப்ப வேண்டும் என்று தணியாத வெறி. கூரை மேல் ஏறி நின்று எல்லோருக்கும் கூற வேண்டும் என்ற துடிப்பு. இந்த உணர்வுகளை எனக்குத் தோன்றிய

அதே வார்த்தைகளை திருமதி கல்யாணி சடகோபன் முன்பு எழுதியிருந்ததைப் பார்த்தவுடன் இந்த மாதிரி அனுபவப்பட்டவர்களுக்கு இப்படிப்பட்ட உணர்வுகள் தோன்றுவது சரிதான் என்று புரிந்து கொண்டேன்.

படித்து வேலை பார்த்துக் கொண்டிருந்த நான், சுபாவத்தில் மென்மையானவள். யாராவது சிறிது அதிர்ந்து பேசினால் கண்ணில் நீர் பெருகிவிடும். நடுத்தரக் குடும்பத்தில் பிறந்த நான் பெரிய எதிர்பார்ப்புகளுடன் மணம் செய்து கொள்ளா விட்டாலும் இப்படிப்பட்ட ஒரு விசித்திரமான புக்ககம் அமையுமென்று கனவிலும் நினைக்கவில்லை.

என் திருமணத்துக்கு முன்பு வரை என் மாமியார் பெங்களூரில் இருந்திருக்கிறார். எங்கள் திருமணம் முடிந்து பம்பாயில் புதிதாகக் குடித்தனம் ஆரம்பிக்கும்பொழுது மாமியார், தன் கணவருக்கு அந்தச் சமயத்தில் வேலை இல்லாததால் தான் வேலை பார்த்துக் கொண்டு கணவருடன் தன் ஒரு குழந்தையுடனும் எங்களுடன் இருந்து விட்ட நாத்தனார் எல்லாம் உண்டு.

நான் இதைப் பெரிதாக நினைக்கவில்லை. ஆனால் நான் பார்த்துக் கொண்டிருந்த வேலையைச் சென்னையிலிருந்து பம்பாய்க்கு டிரான்ஸ்ஃபர் வாங்கிக் கொண்டு தொடர்ந்து-செய்ய வேண்டிய நிலை. அதுவும் அதிசயமில்லை. மணமான பின்னும் பெண்கள் வேலைக்குப் போவது நடைமுறையில் இருப்பது தான்.

ஆனால் எப்படி? வீட்டில் வேலைக்காரி கிடையாது. அதனால் ஏதோ முடிந்த வேலையைச் செய்து கொண்டு வேலைக்குப் போகட்டும் என்றிருந்தார்களா? மாமியார் வீட்டுக்குப் பெரியவராகச் சமைப்பார். அதனால் அவர் வைத்துவிட்டுக் குளித்துவிட்டுப் போய் விடும் பதினாறு முழப் புடவையிலிருந்து வீட்டில் இருக்கும் அனைவரது துணிகளையும் துவைப்பது நான்தான். பெருக்கித் துடைப்பது, பாத்திரம் தேய்ப்பது போன்று ஒரு வேலைக்காரி செய்யும் எல்லா வேலைகளும் செய்துகொண்டு செம்பூரிலிருந்து வி.டி.யில் இருக்கும் டெலிபோன் எக்சேஞ்சுக்கு வேலைக்கும் போக வேண்டும். இரவு ஷிப்ட் முடிந்து வீட்டுக்கு வந்தால் இந்த வேலைகள் எல்லாம் மலைபோல் காத்திருக்கும்.

> **வேலைக்காரிக்கு எனக்கும் ஒரு வித்தியாசம்: அவளுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டும். தட்டிக்கொடுத்து வேலை வாங்க வேண்டும். அளவாகத்தான் வேலை வாங்க முடியும். ஆனால் நான் ஆபீஸில் வேலை செய்யும் சம்பளத்தைக் கொடுத்துக் கொண்டு, முடிவில்லாமல் வேலை செய்து கொண்டிருந்தேன்.**

அதோடு வீட்டில்? இருக்கும் அத்தனை பேருக்கும் நான் ஒருத்தியாக மாட்டுப் பெண் என்ற முறையில் பரிமாற வேண்டும். இரவு, பகல் ஷிப்ட் போய் ஏழு மணிக்கு வீடு வந்து சேருவேன்.

இதோடு, அடிக்கடி ஏதாவது காரணம் காட்டி, வீட்டில் சண்டை. என் மாமியாருக்குக் கோபம் வந்து விட்டால், கீழ் ஜாதி மக்களின் குழாயடியில் கேட்கும் வார்த்தைகள் அவர் வாயில் புகுந்து விளையாடும். அசிங்கமான சொற்களையோ அதுவரை கேட்டறியாத எனக்கு பூமி பிளந்து என்னை விழுங்கி விடாதா என்று இருக்கும்.

முதல் முறை கருவுற்றபோது இதுமாதிரி வேலைகள் செய்வது மிகவும் சிரமமாக இருந்தது. வாந்தி எடுத்தால் நாடகம் என்பார்கள். தலை சுற்றுகிறது என்றால் சாகசம் என்பார்கள். அத்தனை துணிகளையும் துவைத்து விட்டு எழுந்திருக்க முயன்றால் இடுப்பும் வயிறும் பிடித்துக் கொண்டு வலி உயிர் போகும். நிம்மதியற்ற மனநிலையில் இருந்ததால் நானே சரியாகச் சாப்பிட மாட்டேன். அவர்களும் என் வேலை நேரத்துக்குத் தகுந்தபடி செய்து கொடுக்க மாட்டார்கள். வீட்டிலும், வெளியிலும் செய்ய முடியாமல் வேலை செய்துகொண்டு, வயிற்றைக் காயப்போட்டு என் வயிற்றிலிருப்பது ஒரு குழந்தை என்ற நினைவேயின்றி நடைப் பிணமாக நாட்களைக் கடத்திக் கொண்டிருந்தேன். முடிவு என்ன தெரியுமா? ஒன்பது மாதமும் நன்றாக முடிந்து முழுவதும் வளர்ந்து பிறந்த குழந்தை 4 பவுண்டுதான் இருந்தான். சக்தியே இல்லாத என்னால் குழந்தையைப் பெறக்கூட முடியவில்லை. கட்டுவாயில் சிக்கி, திணறி வெளிவந்து, பிறந்த 24 மணி நேரத்தில் இறந்தும் விட்டான். இதற்கு முழுப் பொறுப்பும் என் புக்ககத்தினர்தான் என்பது என் உள்ளுணர்வு.

இச்சம்பவத்துக்குப் பின் சிறிதே தைரியசாலியாக என்னை ஆக்கிக் கொண்டு, தற்சமயம் இரண்டு ஆண்குழந்தைகளுடன் இருக்கிறேன். மாமியார் என்னவோ அதே மாதிரி தான். மாறவில்லை. எங்களுடன் சண்டை போட்டுக் கொண்டு பெண்களிடம் போவதும் அங்கு சண்டை போட்டுக் கொண்டு இங்கு வருவதுமாக இருந்தார். தற்சமயம் எங்களுடன் இல்லை. நாத்தனாரும் இல்லை.

இப்போது அந்தக் கஷ்டம் எல்லாம் இல்லை என்றாலும், பொருளாதார நிலையிலும் வசதியாகவே வாழ்கிறேன் என்றாலும், மகிழ்ச்சியுடன் வாழ முடியவில்லை. நெஞ்சில் பட்ட காயம் ஊமைக் காயமாகப் புரையோடிய புண்ணாக இன்னும் வலித்துக் கொண்டே இருக்கிறது. இதுபோல் யாரிடமாவது சொன்னாலாவது சிறிது ரணம் ஆறுமோ என்று எழுதுகிறேன்.

- சீதா மார்ஷன்

பெண்களுக்கு அன்பானவர்கள் உள்ள புக்ககம் அமைந்துவிடில் அது அவர்கள் அதிர்ஷ்டம். ஆனால் பலருக்கு அப்படி அமைவ இல்லை. அவர்கள் வாழ்க்கை ஆயுள் தண்டனை

யாக அமைந்து விடுகிறது. என் கதைக்கு வருகிறேன், படியுங்கள்.

இரண்டு மூத்த சகோதரர்கள் ஒரு மூத்த சகோதரி. பதின்மூன்று வருட இடைவெளிக்குப் பின் கடைக்குட்டியாக வசதி மிக்க வீட்டில்தான் பிறந்தேன். அன்பான தாயார் தகப்பனார். அதைவிட அன்பான சகோதரர்கள் சகோதரி. இந்தியாவிலேயே மிகச் சிறந்த பள்ளிகளில் ஒன்றான ரிஷிவேலிப் பள்ளியில் 10 வருடங்கள் படித்தேன். படிப்பைத் தவிர நீச்சல், விளையாட்டு, வீணை, நாட்டியம், சித்திரம் வரைதல், தையல் எல்லாம் அங்கு கற்பிப்பார்கள். பள்ளியிலும் சிறந்து விளங்கியதால் ஆசிரியர்களும் என்னிடம் மிகவும் அன்பு செலுத்தினார்கள். மொத்தத்தில் வீட்டிலும் பள்ளியிலும் எல்லோருக்கும் நான் செல்லம். துன்பம், துயரம் என்றாலே என்னவென்று தெரியாத உற்சாகமான, உல்லாசமான நாட்கள் அவை.

உரிய வயதில் ஏதிர் ஜாமீனோடு எனக்குத் திருமணம் நடந்தது. என் கணவர், அவருக்கு ஒரே ஒரு இளைய சகோதரி. நான் வருமுன்பே காதலித்துத் திருமணம் செய்து கொண்டிருந்தாள். மனமொத்த, ஆனந்தமான, அழகான தம்பதிகள். பிறந்த வீட்டிலிருந்து மிகவும் மாறுபட்ட சூழ்நிலை. பொறுப்பில்லாத, வீடு தங்காத முரட்டுக் கணவர். வீட்டுக்கு வரும்போது தன் நிலையில்லாத போதையில் வருவார். அல்லது கொண்டு வரப்படுவார்.

இதயமே இல்லாத அவர் பெற்றோர்கள் ஒருவேளை ஒரே பிள்ளையின் நிலை கண்ட ஏமாற்றமோ என்னவோ அவர்கள் என்னிடம் ஒருபோதும் அன்பாக இருந்ததில்லை. எப்போதும் கடும் சொற்கள், கடினமான வேலைகள். பிறகு? சோளக் களியும் கன்னடியன் தயிரில் தெளியும் தண்ணீர், உப்பு இது தான் என் ஆகாரம். பிறகு எனக்குண்டான இருட்டறையில் முடங்கிக் கொள்ள வேண்டும்.

ஒரு குற்றமும் செய்யாமலே என் கணவர் வீட்டில் நான் சிறை வாசம் அனுபவித்தேன். நாளடைவில் என் பெற்றோருக்கு என் நிலை தெரிந்து துடித்தார்கள். நீ எங்களுடன் வந்து மேலே படி என்றார்கள். அப்போது 30 வருஷத்துக்கு முன்பு கணவனை விட்டு வந்த பெண்ணுக்குச் சமூகத்தில் வாழாவெட்டி என்ற பட்டமும் இழிநிலையும்தான். நான் என் பெற்றோரிடம் ஒன்று கணவரைத் திருப்புகிறேன்: அல்லது அவரோடு நானும் அழிந்து போகிறேன் என்றேன். உன்னைப் படைத்த பிரமனாலும் அது முடியாத காரியம் என்றார்.

எனக்கு வெகு நாட்களாகக் குழந்தைப் பேறு இல்லை. என் மாமியார் கொட்டுப் பிணமே என்றுதான் என்னை விளிப்பார்கள். வறுமை, பசி, பிணி, வாழ்க்கையே ஒரு போராட்டமாக ஆகிவிட்ட பிறகு என் கலைத் திறமைகள் எல்லாம் மண்ணோடு மண்ணாகி விட்டன. என் சகிப்புத் தன்மைக்கு பகவான் மெதுவாக இளகினார். எட்டு வருடம் கழித்து அடுத்தடுத்து மூன்று குழந்தைகள். என் குழந்தைகளையாவது சிறந்த பிரஜைகளாக உருவாக்க வேண்டும் என்பதைச் சவாலாக எடுத்துக் கொண்டேன். என் சகோதர சகோதரிகளின் உதவியோடு குழந்தைகளை மிகவும் நல்லவர்களாக கெட்டிக்காரர்களாக எல்லோரும் புகழும்படி உருவாக்கி விட்டேன். மூன்றில் ஒன்று ஊனமுற்ற குழந்தை. இன்று மூவருமே சிறந்து ஒருவரையொருவர் மிஞ்சி நிற்கின்றனர்.

என் கணவர் முற்றிலும் திருந்திவிட்டார். இப்போது நான் என் செயலாற்றலில் பொங்கிப் பூரித்து நிற்கிறேன். என் கணவர் தன் பழைய செயலுக்காக மிகவும் பச்சாதாபப் பட்டு வருந்துகிறார். அவரை மூப்பும் பிணியும் ஆட்கொண்டு விட்டன. என் இளமை ஏக்கங்களும், கனவுகளும் நிறைவேறாத ஆசைகளாகவே போய்விட்டன. முன் காலத்து ரிஷிகள் மாதிரி என் கணவரால் இளமையைத் திருப்பிக் கொண்டு வந்து வாழ முடியாதே! இன்று அந்த நரக வாழ்க்கையை நினைத்தாலும் கண்ணில் கண்ணீர் பெருக்கெடுக்கும். எப்படி வாழ்ந்தோம் என்று ஆச்சரியமாக இருக்கும்.

இளைஞர்களைப் பெற்ற தாய்மார்களே! திருமணம் செய்து கொள்ள நினைக்கும் இளைஞர்களே! தயவு செய்து உங்களால் ஒரு பெண்ணைச் சௌகரியமாக, மகிழ்ச்சிகரமாக வைத்துக்கொள்ள முடியுமானால் திருமணம் செய்து உங்கள் வீட்டுக்குக் கொண்டு வாருங்கள். இல்லாவிடில் அந்தப் பெண் கன்னியாகவே இருக்கட்டும். அவளுக்கு ஆயுள் கண்டனையைக் கொடுத்துவிடாதீர்கள்!

பெண்களால் முடியாதது என்பதே கிடையாது. நான் இவ்வளவு பாதிக்கப்பட்டும் என் கணவரிடமோ, அவர் தங்கை குழந்தைகளிடம் அன்பு செலுத்துவதிலோ, என் கடமையைச் செய்வதிலேயோ பின்வாங்கியதே இல்லை. பலம் பொருந்திய யானையை எப்படி அங்குசத்தால் சிறிய யானைப்பாகன் அடக்கி, வழி நடத்துகிறானோ, அதே மாதிரி அன்பு, பண்பு, பொறுமை என்னும் ஆயுதங்களால் எப்படிப்பட்ட ஆணையும் வழிநடத்தப் பெண்களால் முடியும் என்பதற்கு என் வாழ்க்கையே ஓர் எடுத்துக்காட்டு.

இப்போது என்னைப் பார்ப்பவர்கள் நல்ல கணவர், சிறந்த குழந்தைகள், வசதி மிக்க வாழ்க்கை, மாமி மிகவும் அதிர்ஷ்டக்காரி என்கிறார்கள். முன்னாளில் என்னைத் தெரிந்தவர்கள் எப்படிப்பட்ட கணவரை எப்படி இப்படி ஆக்கி முன்னுக்கு வந்தாய்? உன்னால் எப்படி இதைச் சாதிக்க முடிந்தது? என்று கேட்கிறார்கள்.

அன்பினால் சாதித்தேன்!

— கமலா சீனிவாசன்



புலரும் இன்றைய
என் பொழுது
மகிழ்வாய
மலருமே
பொங்கும்
மகிழ்வைக் கூட்டுமே
ம:.பத்லால்
துணிகள்
மட்டுமே
ம:.பத்லால்
:.பேப்ரிக்ஸ்
MF-123 TAM

Regd. No. TN MS (S) 23

